வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆவணி திங்கள் 30-ம் நாள் (15—9—1963) ஞாயிற்றுக்கிழமை ரபி. ஆகி 26 | இதழ் 16

# பகிஷ்கார இயக்கம் : தீவிரமான ஏற்பாடுகள்



ஆவி, உடல், பொருள் அத்தனையும் தமிழுக்கு ஈந்த பெரியார், எல்லாம் தமிழென வாழ்ந்த ஏந்தல், வண் தமிழர் வாழ்விடத்தைக் காத்த செம்மல், அறவழி அரசியல் கண்ட அண்ணல், கோப்பாய் தந்த கோமான் அமரர் திரு கு. வன்னியசிங்கம் அவர்கள்.

தோற்றம்: 13-10-1911 மறைவு: 17-9-1959

## தகவல் கிடைக்காமல் பொலீஸ் தவிப்பு

தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கையின் முன்னேடியாக 1—10—63 ல் ஆரம்பமாகும் பகிஷ்கார இயக்கம் சம்பந்தமாகச் சகல ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெறுவதாகத் தெரிகிறது. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழரசுக் கட்சிக் கிளைகள் வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வரும் இவ்வேளையில், கொழும்பில் இயங்கும் கிளையும் திட்டங்களைத் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது. கட்சியின் நிர்வாகச் செயலாளர் யாழ்ப்பாணம் சென்று பகிஷ்கரிப்பு இயக்கத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகளையும் நேரடியாகக் கவனித்து வருகிறர் என்றும் அறிகிறோம்.

இவ்வியக்கம் சம்பந்தமாக அரசாங்கம் எவ்வகையான நடவடிக்கை எடுப்பது என்பதையிட்டு முடிவு செய்ய முடியாது தவிக்கிறது. ஏனெனில் இயக்கம் எவ்வாறு நடைபெறும் என்பதை இரகசியப் பொலிசாரே அறியமுடியவில்லையாம்.

அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் அமுலை எதிர்த்துத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கவிருக்கும் நேரடி நடவடிக்கையின் முன்னேடியாக அமையப் போகும் சிங்களத்தை அமுலாக்கும் ஊழியர்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் தமிழரசுக் கட்சி நடவடிக்கைக் குழு வெகு தீவிரமாக வகுத்து வருகிறது என்று தெரிய வருகிறது. முதன் முதலில் இவ்வியக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

பகிஷ்கரிப்புத் திட்டம் எவ்வகையில் எல்லாம் கையாளப்பட வேண்டும் என்பதையிட்டுக் கட்சித் தலைமைப்பீடம் நுணுக்கமாக ஆராய்ந்து வருகிறது. வரவு செலவுத் திட்ட விவாதமும் வாக்கெடுப்பும் நடந்து முடிந்ததும் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாகத் தங்கள் தங்கள் தொகுதிகளில் பிரசார இயக்கங்களை இயக்க ஆரம்பிப்பர் என்று தெரிகிறது.

வடக்கு—கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழரசுக் கட்சிக்கிளைகள் யாவும் தீவிரமாக இயங்க ஆரம்பித்திருக்கின்றன என்ற செய்தியும் எமக்கு எட்டியுள்ளது.

கொழும்பிலுள்ள கட்சி அலுவலகத்திலிருந்து பணிபுரிந்த கட்சியின் நிர்வாகச் செயலாளர் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சி அலுவலகத்துக்குச் சென்றுள்ளார். பகிஷ்கரிப்பு இயக்கத்துக்கான சகல ஆயத்தங்களைச்

(9ம் பக்கம் பார்க்க)

### தொண்டர்களுக்கு அழைப்பு

தமிழரசுக் கட்சி நிர்வாகச் செயலாளர் திரு. க. சிவானந்தசுந்தரம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தமிழரசுத் தொண்டர்களை, யாழ்ப்பாணம் இல: 25, 2-ம் குறுக்குத் தெருவில் உள்ள தமிழரசுக் கட்சிக் கிளைக் காரியாலயத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்படி கோரியுள்ளார்.

ஏனைய மாவட்டங்களிலுள்ள தொண்டர்கள் தங்கள் தங்கள் மாவட்டங்களிலுள்ள கிளை அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

### சுதந்திரன் பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணப் பகுதிக்கான இடைஇறுதிப் போட்டி இம் மாதம் 21-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு, யாழ்ப்பாணம் கொட்டடி நமச்சிவாய வித்தியாசாலையில் ஆரம்பமாகும். போட்டி தொடர்ந்து அடுத்த தினமும் நடைபெறும். போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் தவருது அன்று காலை 9 மணிக்கு சமூகம் அளிக்க வேண்டும். போட்டிப் பொறுப்பாளராக பிரபல பேச்சாளர் திரு. புதுமைலோலன் கடமையாற்றுவார். அன்னரின் முகவரி, திரு. புதுமைலோலன், 5 சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். இதர இடங்களுக்கான இடை இறுதிப் போட்டி விபரம் அடுத்த இதழில் வெளியாகும்.

—பேச்சுப் போட்டி ஆசிரியர்.

## பிரதமரின் ஐ. நா. விஜயம் ரத்தானதேன் ?

தமிழ பேசும் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வரும் மாதத்திலிருந்து தொடங்கவிருக்கும் போராட்டத்தை உத்தேசித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது உத்தேச ஐ. நா. விஜயத்தை 'வெற்றிகரமாக' ரத்துச் செய்து இருப்பதாகத் தெரிய வருகிறது.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் பதவியிலிருக்கையிலேயே திக் விஜயங்களை முடித்துக் கொள்ள வேண்டிய ஆசை தமிழர்களின் போராட்ட கோஷத்தினுல் நிறுத்தப்பட்டுள்ளது.

வியட்னும் பௌத்தர்கள் பற்றி சிறிமாவோ அம்மையார் கூட்டவிருந்த ஆசியத் தலைவர் மாநாடு யோசனை பிசுபிசுத்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

## இ. போ. ச. வில் சிங்களத் திணிப்பு

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சிங்களத் திணிப்புக்கான கெடுபிடி ஏற்பட்டுள்ளது.

சென்ற வாரத்தில் இ. போ. ச. ஊழியர்களுக்கு சிங்கள அமுலைப் பற்றிய சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் ஊழியர்கள் உட்பட எல்லோரும் 1965ம் ஆண்டு ஜனவரி முதல் தேதி உள்ளதாக சிங்களத்தில் தேர்ச்சி பெற்றுவிட வேண்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)

# சேயகம் தந்த செந்தமிழ்ச் சிங்கமும்

# தாயகம் தந்த தமிழ் மாமலையும்

## வாழ்விடத்தையும் வண் தமிழையும் காத்த தியாக சீலர்கள்

## அரசியல்-மொழியியல் வளர்ச்சிக்கு உழைத்த உத்தமர்கள்

மலை யார்? சிங்கம் யார்?

மேலே குறித்த சொற்றொடரைக் கவனிப்போர் பலர், மலை என்னும் போது தமிழகத்தில் இயற்கை மலைகளில் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கூறப் போகிறேன் என்றோ அன்றேல் சிங்கம் என்னும் போது ஈழத்தில் ஏதாவது ஒரு சிங்கத்தைப் பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன் என்றோ பலர் கருதக் கூடும். ஆனால் நான் இங்கு எடுத்து ஒப்பிட விரும்புவது ஒரு மானிட மலையையும், ஒரு மானிடச் சிங்கத்தையுமேயாகும். ஆம்! ஒருவர் தாயகம் தந்த தமிழ் மாமலையாகிய மறைமலையடிகள், மற்றவர் சேயகம் தந்த செந்தமிழ்ச் சிங்கமாகிய வன்னியசிங்கம் அவர்கள். முன்னவர் 1950 செப்டம்பர் 15ல் மறைந்தார். பின்னவர் 1959 செப்டம்பர் 17ல் மறைந்தார். முன்னவர் ஏறக்குறைய 75 ஆண்டுகள் வாழ்ந்து வாழ்வின் பெரும் பகுதியை நிறைவு செய்தார். பின்னவர் ஏறக்குறைய 48 ஆண்டுகள் வாழ்ந்தார். புகழின் உச்சாணியை அவர் எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் போது காலன் அவரைக் கவர்ந்து சென்றான். முன்னவர் மறைந்த போது மொழியியல் உலகத்திற்கும், இலக்கிய உலகத்திற்கும் இத்தகைய ஒரு பெருமகன் இனிமேல் கிடைக்குமா? என எண்ணிப் புலவர் குழாம் புலம்பியது. இலக்கிய அன்பர்கள் ஆற்றொணாத் துயரில் மூழ்கினர். பின்னவர் மறைந்த போது தமிழ் அரசியல் வான் இருண்டு காட்சியளித்தது. இத்தகைய தன்னலமற்ற மக்கட் தொண்டனை இனி எப்போ காண்போம் என மக்கள் கண்ணீர் வடித்துக் கதறினர். இவ்விரு பெரு மக்களின் மறைந்த நாட்கள் செப்டம்பர் 15லும், 17 லும் வருவதினால் அவ்விருவரையும் நினைவு கூருதல் பொருத்த முடையது.

### மொழியியலில் ஒருவர் அரசியலில் ஒருவர்

மறைமலையடிகள் மொழியியல் துறையில் பணியாற்றியவர். வன்னியசிங்கம் அவர்கள் அரசியற்றுறையில் பணியாற்றியவர்கள். இப்படி இரு வேறு துறைகளில் பணியாற்றியவர்களுக்கிடையில் என்ன ஒற்றுமை என்ன உறவு இருக்க முடியும் என பலர் உள்ளத்தில்

**ஈழவேந்தன்**

ஒரு கேள்வி, ஒரு ஐயம் எழுவது இயல்பு. இக்கட்டுரையாளரைப் பொறுத்தவரை மேலோட்டமாக இவ் இருவரையும் பார்க்கும் போது மேற் குறித்த ஐயமும் கேள்வியும் எழுவதைத் தப்பெனக் கொள்ள முடியாது. ஆனால் இருவர் ஆற்றிய பணியையும் ஊடுருவி ஆராயும்போது அவர்களுக்கிடையில் நெருங்கிய ஒற்றுமையைக் காண முடியும்.

### இரு துறைகளிலும் இனப்பற்றை வளர்த்தனர்

மறைமலையடிகள் வெறும் வரண்ட மொழி ஆய்வாளராக விளங்கவில்லை. அது போன்றே வெறும் வரண்ட அரசியல்வாதியாக வன்னியசிங்கம் அவர்கள் விளங்கவில்லை. முன்னவர் பல்வேறு மொழிகளைக் கற்றுணர்ந்து அவற்றிலே தோய்ந்த மொழி அறிஞர்—மூதறிஞர். பின்னவர் பல்வேறு அரசியல் அமைப்புகளையும், அரசியல் வரலாறுகளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த அரசியல் அறிஞர்—அரசியல் ஆய்வாளர். இருவரும் தம் வேறுபட்ட அறிவுத் திறனை தம் நலத்திற்காகப் பயன்படுத்தாமல் தமிழர் தம் நலத்திற்காகப் பயன்படுத்தினார்கள். இருவரின் பணியினால் தமிழ் மொழி ஓங்கியது. தமிழினம் தனது தனித் தன்மையைப் பாதுகாக்க முடிந்தது. தமிழரின் வாழ்வகம் வரையறுக்கப் பெற்றது. இதனால் தமிழர்கள் தம் நிலையை உணர்ந்து பணியாற்றத் தொடங்கி விட்டனர். இப்பணி தொடர்ந்துநிலைக்கின், தமிழினம் தரணியில் தலையெடுப்பது உறுதி.

### மறைமலையடிகளின் தனித் தமிழ் இயக்கம்

ஒரு இனம் தனித்தன்மையை அழியாது பாதுகாக்க வேண்டின், அது பேசும் மொழியின் தனித் தன்மையும் அழியாது பாதுகாக்கப்படவேண்டும். மறைமலையடிகள் இந்தப் பேருண்மையை உணர்ந்தார். பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழ் மொழி சங்க காலம் வரை தனது தாய்மையைப் பெருமளவு காக்க முடிந்தது. எனினும் காலப் போக்கில் வெவ்வேறு இனங்களின் படையெடுப்பினாலும்—வருகையினாலும், வடமொழி, அரபிய, உருது, போர்த்துக்கேய, ஆங்கில, இந்திச் சொற்கள் எல்லை கடந்து—வரையறை மீறி தமிழிற் கலக்கத் தொடங்கின. இந்த இழிநிலை தொடர்ந்து நீடிக்கின் தமிழ் மொழி தனது தனித் தன்மையை, தனிச் சிறப்பியல்பை இழந்து அழிந்தொழிவது உறுதி என்பதை மறைமலையடிகள் உணர்ந்தார். மொழி அழியின் இனம் அழியும். இந்தப் பேரிடரை எப்படியும் நீக்கித் தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று உறுதி கொண்டார். அவர் உள்ளத்து தோன்றிய உறுதி தான் "தனித் தமிழ் இயக்க" மாக உருவாகியது. "தமிழாவது, தனித்தியங்குவதாவது" என பல கோணங்களில் இருந்து இவருக்கு எதிர்ப்புத் தோன்றியது. ஆழ்ந்தகன்ற புலமையும், கொள்கைப் பற்றும் உள்ள மறைமலையடிகள் இந்த எதிர்ப்பைக் கண்டு அஞ்சாது தனது பணியைத் தொடர்ந்தாற்றினார். இதனால் வழக்காற்றில் இருந்து அழிந்தொழியும் நிலையில் இருந்த அரிய பல பழந் தமிழ்ச் சொற்கள் புத்துயிர் பெற்றன அத்தோடு காலத் தேவைக்கேற்ற முறையில் அரசியல், அறிவியற் றுறைகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கத்தக்க ஆற்றல் மிக்க புதிய பல தமிழ்ச் சொற்களைத் தனது நூல்களிலும், தனது சொற்பொழிவுகளிலும் எடுத்தாண்டு மொழியை வளம்படுத்தி இனத்தை வாழ்வித்தார்.

### வாழ்விடத்தைக் காத்த வன்னியசிங்கம்

தமிழ் மொழி அழிந்தால் தமிழ் இனம் அழியும் என்று துணிந்து தமிழ் மொழியைக் காப்பாற்றியதினால் தமிழ் இனத்தைக் காப்பாற்றினார் மறைமலையடிகள் இவரைப் போன்றே எம் வன்னியசிங்கம் அவர்களும் தமிழ் மொழி வாழ வேண்டின் தமிழ் இனம் வாழ வேண்டும், தமிழ் இனம் வாழ வேண்டின் தமக்கென்று இருக்கும் தனி மரபு வழித் தாயகம் பிற குடியேற்றத்தினால் அழிந்து போகக் கூடாது என உறுதி பூண்டு ஈழத் தமிழர்களின் மரபு வழித் தாயகமாகிய வட கிழக்காம் வாழ்விடம் அரசாங்க ஆதரவோடு திட்டமிட்டு நடாத்தப்படும் எல்லை மீறிய சிங்களக் குடியேற்றத்தினால் அழிந்தொழியாது பாதுகாக்கப் போர்க் குரல் எழுப்பினார். பெரும்பான்மையாக யாம் வாழும் எம் வாழ்விடத்திலேயே நாம் சிறுபான்மையாக காலப் போக்கில் எமக்கென்று ஒரு தாயகம் இன்றி பறங்கியரிலும் பார்க்கப் பாழான நிலைக்கு தள்ளப்பட்டு பூண்டோடு அழிந்து விடுவோம் என்பது அவர் அச்சம் பட்டிப்பளை—கல்லோயாவாக மாறிவிட்டது. பொட்டன்காடு—அக்ரோபுரயாக மாறிவிட்டது. கல்லரிப்பு—அபயபுரமாக மாறிவிட்டது. சிங்களக் குடியேற்றத்தைத் தொடர்ந்து தூய தமிழ்ப் பெயர்களே சிங்களமாக மாறினால் தமிழர்கள் தமிழர்களாக ஈழத்தில் வாழ முடியுமா என்பது அவர் கேள்வி. 1958ல் ஏற்பட்ட இக்கலவரத்தின் போது, இலங்கையின் தென் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் வாழ்விடமாகிய வடக்கையும் கிழக்கையும் நோக்கி அல்லவா ஓடித் தமக்குப் பாதுகாப்பைத் தேடினார்கள். இந்த வடக்கையும், கிழக்கையும் நாம் இழநதால் எமக்கு எங்கு வாழ்வுண்டு. கடலே எம்மை ஆட்கொள்ளும் என்று கருதுவதை விட யாம் என்ன செய்ய முடியும்? இப்படி உள்ளம் உருகும் முறையில், சிந்தனையைத் தூண்டும் வகையில் கேள்விகள் கேட்டு தமிழ் பேசும் மக்களை தமது தாயகத்தைப்பறிபோகாது பார்க்கும்படி அடிக்கடி வன்னியசிங்கம் வேண்டுவார். அது மட்டுமல்ல முதலிக் குளம், செட்டிக் குளம், பாவற் குளம் என்று எங்கெங்கு குடியேற்றத் திட்டங்கள் உண்டோ அங்கெல்லாம் ஓடோடி அவற்றில் எல்லாம் தமிழர்களைக் குடியேற்ற முயன்றார். அத்தோடு தம் முயற்சிக்குத் தடையாய் இருக்கும் அரசாங்கத்தினர் மீது போர் தொடுத்தார். இதனால்தான் இன்று ஈழத் தமிழர்கள் எல்லோரும் வாழ்விடத்தைக் காத்த வன்னியசிங்கம் என அன்னாரை வாயார வாழ்த்துகிறார்கள்.

### மறைமலையடிகள் இந்தி எதிர்ப்பு

1938ம் ஆண்டு கட்டாய இந்தியை தமிழ் நாட்டில் டெல்லி அரசாங்கம் திணிக்க முயன்றபோது மறைமலையடிகள் கொதித்தெழுந்து

(15-ம் பக்கம் பார்க்க)


**வேல் தைலம்**

**மிகச் சிறந்த சஞ்சீவி**

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**

34, செட்டியார் தெரு,

கொழும்பு-11.


## கவிதைப் பூங்கா

### 'கோப்பாய்க் கோமகனார்'

—சர்வானந்தன்—

நாட்டிற்குழைக்க என நாங்கள்
நம்பி அனுப்பும் தலைவரெல்லாம்
காட்டிக் கொடுக்க எனநின்ற
காலத்தெமது நிலையெண்ணி
வாட்டமுற்று தமிழ் மொழியின்
வளத்தைக் காத்து இனம்காத்து
மீட்டிங் கெமது உரிமையினை
முழங்கச் செய்த முதற்றலைவன்.

காப்போம் களனி சூழ்ந்தபெருங்
கன்னி ஈழத்தமிழ்ப் பகுதி
மாப்பேரணியாய்த் தமிழ் மக்காள்
மறவர் குடியீர் திரளுமென
பூப்போலிதயம் பூண்ட பெரும்
புனிதன்; புதிய வழிகாட்டி
கோப்பாய்க கோமான் வன்னியனார்
கோதில் தமிழ்கார் குடிமுதல்வன்.

கோயில் திறந்து வழிசெய்தான்
குலத்தில் தாழ்வு உயர்வுஎன்னும்
நோயில் வாழ்ந்த தமிழ் மக்கள்
நோயைப் போக்கி ஒளிசெய்தான்
வேயின் குழலார் இசையென்ன
விளங்கும் இனிமைத் தமிழெங்கள்
தாயின் புதல்வன் தவப்புதல்வன்
தமிழர் வாழ்வின் முதற்றலைவன்.

பேயும் வாழப் பின்நிற்கும்
பெரிய காட்டு நிலப்பகுதி
தேயும் த்மிழர் நிலமாகும்
தெரிவீர்; சென்று குடிசெய்தே
பாயும் தேனும் பாலுமதாய்
பலதாய் வளங்கள் செய்மினென
தாயும் சிறக்க வழிசெய்த
தமிழர் குடியின் தனித்தலைவன்.

சமரச சன்மார்க்க மதில்
சாதி சமயம் கைவிட்டே
எமது கொள்கை இனவாழ்வு
என்றே அஹிம்சை வழிநின்ற
குமரன் கோப்பாய்க் கோமகனார்
குலத்தின் வாழ்வைக் காத்தபுகழ்
அமரன் வன்னியன் பெயரெம்
அனைவோர் நெஞ்சும் அகலாது.




**திருவாளர்**
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: நிவுப்பகுதி தமிழரசுத் தேர்தல் வெற்றியைத் தெரிவிக்கும்போது சோமசேகரம் தட்டுத் தடுமாறினரே? காரணம்?

ப: எதிர்பார்த்து ஏமாந்தால் தடுமாற வேண்டியது தானே! பாவம் ஆளும் கட்சியிடம் அவர் என்னென்ன சொல்லி வைத்திருந்தாரோ!

கே: நிவுப்பகுதி வெற்றி தமிழரசு விரோதிகளுக்கு ஒரு அடி என்கிறேன். உங்கள் கருத்தென்ன?

ப: தமிழரசு விரோதிகளுக்கு மட்டுமா, தமிழரசுக்குச் செல்வாக்கு மங்கிவிட்டது என்று தப்புக் கணக்குப் போட்டவர்களுக்கும் சேர்த்தல்லவா அடி விழுந்திருக்கிறது!

கே: மிஸ்டர் 'சன்' திருமலையில் நிற்கிறாராமே?

ப: அவருடைய துரதிர்ஷ்டம், ஒன்றுபோக ஒன்றாக உபதேர்தல்களும் வந்து கொண்டிருக்கின்றன!

ஃ

த. வே. முருகன், காரைதீவு.

கே: கல்முனை, நிந்தாவூர்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ் மொழி பற்றிய முடிவு தெரிந்த பின்பே, அரசாங்கத்தை எதிர்ப்பதா? ஆதரிப்பதா? என்ற முடிவுக்கு வருவதென அடிக்கடி பத்திரிகைகளில் அறிக்கை விட்டனரே, இப்போது அரசாங்கத்தை ஆதரித்து வாக்களித்திருக்கின்றனரே! அப்படியானால் அவர்கள் கண்ட தமிழ் மொழி பற்றிய முடிவு என்னவாக இருக்கலாம்?

ப: முடிவு தெரிந்துவிட்டது — ஆதரித்திருக்கிறார்கள்! சி. பிரசங்கத்தில் தமிழ் மொழி உரிமை பற்றி ஒரு சொல்கூடக் கிடையாது. தமிழ் மொழிக்கு ஏற்கனவே சகல உரிமைகளும் வழங்கப்பட்டிருந்தமையாலேயே அதுபற்றி சி. பிரசங்கத்தில் பிரஸ்தாபிக்கப்படவில்லை என்று முடிவுகட்டியிருக்கக் கூடும் இந்தப்பிரகஸ்பதிகள்!

ஃ

வி. எம் சுலைமான், கண்டி.

கே: ஊர்காவற்றுறை உபதேர்தலில் சுயேச்சை வேட்பாளர் கட்டுப்பணம் இழக்காததைக் கண்டு வியப்புற்றேன்.

ப: அதுவும் சுந்தரர் சுயேச்சைக்குச் சப்பைக் கட்டு கட்டிய பிறகும் கூட கட்டுப் பணத்தை இழக்கவில்லையென்றால் வியப்படையாமல் என்ன செய்வது!

ஃ

இ. பொ. ஈழத்துமணி, யாழ்ப்பாணம்.

கே: மலையகம் வாழ் தமிழ் பேசும் மக்களிடம் அவர்களின் பாட்டன் பூட்டன் எல்லோரும் இலங்கையரா எனக் கேட்கும் சிங்கள அரசாங்கம் கிராமப் புறம் வாழ் சிங்களவரிடம் இதே கோரிக்கையை விடுத்தால், எத்தனை லட்சம் பேர் இலங்கைக் குடிகளாக இருக்க முடியும்?

ப: ஒருசில இயக்கரும், நாகருமே.

கே: கே. எம். பி. இராசரத்தினா உண்மையில் இலங்கைப் பிரசைதானா?

ப: சந்தேகமே—ஏனெனில் அவர் இன்னும் தனது பிரசாவுரிமையைச் சட்டபூர்வமாக நிரூபிக்கவில்லையே!

ஃ

வ. சி. பரமலிங்கம், வட்டக்கொடை.

கே: ஊர்காவற்றுறையில் சகலரும் வாக்குப் பதிவு செய்திருந்தால்?

ப: சுய-இச்சையின் கட்டுப்பணம் பறிபோயிருக்கலாம்!

ஃ

லிங்கம், வட்டக்கொடை.

கே: சுந்தரர் ஆடிய ஆட்டம் அடங்கிவிட்டதா? அல்லது இன்னும இருக்கிறதா?

ப: அவரது அடுத்த ஆட்டம் திருமலையில் ஆரம்பமாகுமாம். பார்க்கத் தவறாதீர்கள்.

ஃ

இ. நா. அழகர்சாமி, பண்டாரவளை

கே: இந்நாட்டிற்குத் தமிழரசுக் கட்சி எவ்வளவு அதி முக்கியமோ, அதே போல் தென்னாட்டில் தி. மு. க. வும் முக்கியம். இவ்விரு கட்சிகளும் ஒவ்வொரு தமிழனுக்கும் இரு கண்களைப் போன்றது. தமிழ் வாழவும், தமிழன் முன்னேறவும் இதன் வழிகளில் சென்றால்தான் முடியும். இந்த உண்மை தெரியாமல் ஏன் தமிழன் பல கட்சிகளைக் கட்டிக்கொண்டு அழுகிறான்?

ப: கவலைப்படாதீர்கள்! அழுது முடிந்தவுடன் உண்மை புலப்படும்.

கே: சிங்களவர்கள், சில தவறுகளைச் செய்துவிட்டு, தமிழர்கள் மீது பழி சுமத்தி விடுகிறார்களே, இதைத் தடுக்க வழி என்ன குயுக்தியாரே?

ப: வலுவுள்ளவன் வலுவற்றவனைப் பலிக்கடாவாக்கிக் கொள்வது இயல்புதானே? இதைத் தடுக்க ஒரே வழி-தமிழனும் வலுப்பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்பதுதான்.

ஃ

ஜி. ஆர். ரகிம்லெப்பை, எட்டியாந்தோட்டை

கே: திருகோணமலை இடைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடுமா?

ப: அமரர் இராஜவரோதயம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்த மந்திரிகளும், அரசாங்க பா. உ. களும் என்று படையெடுத்தார்களோ, என்று பிரதமரின் அனுதாபத் தந்தி வேறு அனுப்பப்பட்டதோ, அன்றே அம்பலமாகிவிட்டது சுதந்திரக் கட்சி திருமலை உபதேர்தலில் போட்டியிடும் இரகசியம். சோழியன் குடுமி சும்மா ஆடுமா? அமரர் கந்தையா அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எந்த மந்திரியாவது அரசாங்க பா. உ. களாவது சென்றார்களா?

ஃ

வ. இ. சண்முகநாதன், புங்குடுதீவு

கே: தமிழ் இனத்துக்காக நான் என்னையே தீ மூட்டிக் கொள்ளப் போகிறேன். இதைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: தங்கள் முடிவு தவறு. விடுதலைப் போரிலே உயிர்த் தியாகம் செய்தல் எல்லோராலும் வரவேற்கப்படும் என்பது உண்மையே, ஆனால் தற்கொலை அதற்கு வழியன்று. வியட்னாமில் பௌத்த பிக்குகள் ஒரு சிலர் இவ்வாறு தங்களைத் தாங்களே தீ மூட்டிக்கொண்டனராம். இது தற்கொலைச் செயலென்றும், புத்த தர்மத்துக்கு மாறான நடவடிக்கையென்றும் லண்டன் பௌத்தாலயத் தலைமை பிக்குவே கூறியிருக்கின்றார்.

ஃ

திரிபுரசுந்தரி, சித்துக்காடு, தென் இந்தியா

கே: பெற்றோர் இல்லாத ஒரு பெண்ணைக் குடும்பத்தாரும் வெறுத்துக் கணவரும் வெறுத்தால், அந்தப் பெண் என்ன செய்ய வேண்டும்?

ப: முடியுமானால் வெறுப்பை அகற்ற முயற்சி செய்ய வேண்டும். அதற்கான சூழ்நிலையையும் உருவாக்க வேண்டும். அம்முயற்சியும் பயனளியாவிடின், விவாகரத்துச்செய்துகொண்டு, மறுமணம் செய்து கொள்ள வேண்டும். நிச்சயமாகத் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது.

ஃ

தமிழரசு அபிமானி, இராமநாதபுரம்

கே: சில தபாற்கந்தோர் தமிழ் அதிகாரிகள் தபாலட்டை என்பன போன்ற பொருட்களைத் தமிழில் கேட்கும் போது, சிங்கம் போல் கர்ஜிக்கின்றனரே, காரணமென்ன?

ப: தாங்கள் தமிழர்களை எதிர்க்கும் தமிழர்கள் என்பதைச் சிங்கள எஜமானர்களுக்கு எடுத்துக் காட்ட!

கே: தமிழ் மக்களுக்கு இக்கட்டான நிலை எக்காரணத்தால், யாரால் வந்தது என்பதைத் தயவு செய்து கூறுங்கள்?

ப: அன்னியர் ஆட்சி அகன்றதும் பெரும்பான்மையோர் ஆட்சியைக் கைப்பற்றி சிறுபான்மையோரின் உரிமைகளை அபகரிக்கத் தொடங்கினர். அதற்குத் தமிழ் மரபிலே பிறந்த எட்டப்பர் சிலரைக் கையாளாக்கிக் கொண்டனர்.

ஃ

"வடலூரான்" அனலைநகர்.

கே: அமரர் இராசவரோதயத்தின் இறுதி அஞ்சலிக்கு திருவாளர்கள்: நடேசபிள்ளை, கந்தையா வைத்தியநாதன், எதிர்மனசிங்கம், ஜி. ஜி., சுந்தரலிங்கம் ஆகியோர் வராததன் காரணமென்ன?

ப: மக்களால் புறக்கணிக்கப்பட்டு, மக்களை விட்டு ஒதுங்கி வாழும் நபர்கள், மக்கள் தலைவனாக வாழ்ந்து மக்கள் தலைவனாக அமரத்துவம் பெற்ற தலைவருக்கு அஞ்சலி செலுத்த எப்படி வர முடியும்?

கே: திருமலைத் தொகுதியின் அடுத்த பாராளுமன்ற உறுப்பினர் யாரென்று கூற முடியுமா குயுக்தியாரே?

ப: முடியும் — தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்.

கே: ஊர்காவற்றுறை இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வெற்றி அரசாங்கத்திற்குக் கற்பிக்கும் பாடமென்ன?

ப: சிங்களத் திணிப்பை எதிர்த்துப் போராடத் தமிழ் பேசும் மக்கள் உறுதி பூண்டுவிட்டார்கள் என்பதே.

ஃ

கே. ஆர். விஜயலெட்சுமி, எவிங்டன் தோட்., தெரணியகலை

கே: 1964ம் ஆண்டிலாவது மலைநாட்டு மக்களுக்கு உரிமைகள் கிடைக்குமா?

ப: மலைநாட்டுத் தமிழ் மக்கள் ஒரு பத்து நாட்களாவது கையைக் கட்டிக் கொண்டு சும்மாயிருக்கத் தயாரென்றால் அதற்கு முன்பே உரிமைகள் கிடைத்துவிடும்.

ஃ

பா. வனஜா, கொழும்பு-14

கே: இலங்கையில் நாடு அற்றவர்களாக இருக்கும் இலட்சக் கணக்கான இந்தியர்களை இந்தியாவை ஏற்றுக் கொள்ளுமாறு ஸ்ரீமா கூறியிருக்கிறாரே!

ப: இலங்கை வாழ் சுமார் 10 இலட்சம் "நாடற்றவர்கள்" என்னும் தமிழ் மக்கள் அனைவரும் இந்தியர் என்பது அரசாங்கத்தின் தீர்ப்பு. இந்த 10 இலட்சம் பேர்களையும் இந்தியாவுக்கு அனுப்ப முடியாதென்பதும் அரசாங்கத்துக்குத் தெரியும். அவர்கள் இந்நாட்டில் வசித்தாலும் எத்தகைய உரிமைகளுமற்ற அன்னியர்களாகவே வாழ வேண்டுமென்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

ஃ

சு. பொன்னுத்துரை, ஈறற்பெரியகுளம்

கே: நான் போடும் கேள்விகள் எல்லாம் குப்பைக் கூடைக்குப் போவதாக எனது நண்பர் கூறுகிறார். நான், அவை குப்பைக் கூடைக்குப் போவதில்லை என்கிறேன். இதை எப்படிக் கண்டு பிடிப்பது?

ப: இதற்குச் சுலபமான ஒரு வழிஉண்டு. பதிலளிக்கப்பட்ட கேள்விகளெல்லாம் குப்பைக் கூடைக்குப் போகாதவை—குப்பைக் கூடைக்குப் போனவையெல்லாம் பதிலளிக்கப்படாதவை.

ஃ

ஆ. வெள்ளையம்மா, தெரணியகலை

கே: பெண்களின் கேள்விகளுக்கு "திருவாட்டி குயுக்தியாரை"ப் பதில் சொல்லச் சொல்லுங்களேன்?

ப: அவர் பதில் சொல்லத் தொடங்கிவிட்டால், அதைப் பிரசுரிக்கத் தனியாக ஒரு பத்திரிகைதான் ஆரம்பிக்க வேண்டும்.

## கவி ஒரு கோடி வேண்டும்

"அழகு"

அன்னை மொழிதனை யழித்து ஈழநாட்டில்
    ஆமைகளாய் தமிழர்களை வாழச் செய்ய
சின்னவர்கள் சட்டத்தை விரித்து விட்டார்!
    சிறிவரும் துப்பாக்கிப் பட்டாளங்கள்
சல்லடையாய் என்னுடலைக் கிழித்த போதும்
    தமிழன்னை உரிமைதனைப் பெறுவே னென்ற
வன்னியரின் புகழ்பாட வேண்டு மென்றால்
    வளமென்ன தமிழ்மொழியில் குறைந்தா போச்சு?

பட்டாளம் படைகொண்டு வருத்தினாலும்
    பாரினிலே முதற்குடியாய் வாழ்ந்த எம்மை
சுட்டாலும் வதைத்தாலும் பொசுக்கினாலும்
    துடைத்திடுவோம் தமிழன்னை துயரக்கண்ணீர்!
கட்டியெமைச் சிறைக்குள்ளே தள்ளினாலும்
    கரையாது தமிழ் வீரம் தெரிவீரென்று
சட்டத்தை எதிர்த்திட்ட வீர சிங்கம்
    தனைப்பாடக் கவிதை யொருகோடி வேண்டும்.

வீரத்தின் விளைநிலமாய் வாழ்ந்திருந்து
    விளைச்சலினைக் காணாது விட்டுச் சென்றான்!
கார்போன்று கருத்துமழை பொழிந்து சாதிக்
    கட்டுகளை உடைத்தெறிந்த கன்மவீரன்!
சீரோடு தமிழன்னை வாழச் செய்ய
    சிந்தை பொருள் அத்தனையும் தந்துவிட்டு
மோர்கடைந்து வெண்ணைவரும் வேளையின்று
    மூச்சுக்குத் தடைபோட்டு எங்கே போனான்?

தமிழரசுப் படைதன்னை நடத்திச் சென்று
    தலைநகரில் உரிமைக்கு முழக்கமிட்டோன்;
உமிகுற்றிச் சலித்திட்ட தலைவர்க் கெல்லாம்,
    உலகாளும் அரசியலை உரைத்த ஞானி;
கிழக்குவடக் கென்கின்ற பேத மெல்லாம்
    கிழாக்கி தமிழர்களை ஒருகொடிக்கீழ்
களம்செல்லத் தயாராக்கி வைத்துவிட்டுக்
    காலனுல கேன்சென்றாய்? கடமை வீரா!



# ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**
**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# முஸ்லிம் ஐக்கியத்தை உருவாக்கிய பெரியார் ஜனுப் ஜின்னு

**பாகிஸ்தான் சிருஷ்டி கர்த்தாவான காயிதே ஆலம் முகம்மதலி ஜின்னுவின் ஞாபகார்த்த தினம் கடந்த புதன் கிழமை பாகிஸ்தான் மக்களால் மாத்திரமன்றி உலகெங்குமுள்ள முஸ்லிம் மக்களாலும் நினைவு கூரப்பட்டது.**

உலகில் மிகப் பெரிய ஓர் இஸ்லாமிய ராச்சியத்தை சிருஷ்டித்த இம்மாபெரும் சிற்பி 1876-ம் ஆண்டு டிசம்பர் 26-ம் திகதியன்று கராச்சியில் பிறந்தார். இவர் பிறந்த அக்கணமே பலர், இவர் உலக மக்களால் போற்றப்படும் ஆசியாவின் மாபெரும் தலைவர்களில் ஒருவராகத் திகழ்வார் எனக் கூறினர். மகான் யேசுகிறிஸ்து பிறந்த தினமல்லவா அது?

சிறுவயதிலேயே புத்தி சாதுர்யமிக்கவராகத் திகழ்ந்த அவர் தனது 16-வது வயதில் மேல் படிப்புக்காக இங்கிலாந்துக்குப் பயணமானர்.

1896ல் பரிஸ்டர் பட்டம் பெற்றுத் தாய் நாடு திரும்பி வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். அவரின் வாதத் திறமை பலராலும் மெச்சப் பெற்றது.

## சிறந்த வழக்கறிஞர்

அவர் ஒரு முறை நீதி மன்றத்தில் வாதாடிக் கொண்டிருக்கும் போது அவரின் காரமான பேச்சில் ஆத்திரமுற்ற நீதிபதி அவரைப் பார்த்து,

"ஜனுப் ஜின்னு அவர்களே! நீர் வாதிடுவது ஒரு முதல் தர நீதிபதியின் முன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளும்" என்ருர்.

ஜின்னுவும் உடனே பதிலுக்கு "பிரபுவே! முதல்தர நீதிபதியின் முன் வழக்காட வந்திருக்கும் நான் மூன்ரும் தர வழக்கறிஞனல்ல" எனக் கூறினுர்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஜின்னுவின் நண்பரொருவர் ஜின்னுவிடம் கதைக்க நேரிட்ட போது பின் வருமாறு கேட்டார்.

"ஜனுப் ஜின்னு! என்ன இருந்தாலும் அவரின் (நீதிபதியின்) நரைத்த முடிகளுக்காயினும் (வயதைக் குறிப்பிட்டு) மதிப்பளித்திருக்க வேண்டாமா?"

ஜின்னு பளிச்செனப் பதிலளித்தார்:

"நீர் கூறிய அப் பழுத்த தலைமயிர்களுக்குப் பின்னுல் நேர்மை இல்லாத வரை, நான் அவைகளுக்கு மதிப்பளிக்கமாட்டேன்."

எம். ரீ. எம்.
அளுஹார்தீன்

## விடுதலை வீரன்

ஜின்னு என்றும் நேர்மை பிறழாதவர். எந்த ஒரு விடயத்தையும் எவர் முன்னிலையிலும் துணிந்து கூறுவார். அவர் சிறந்த வழக்கறிஞர் மாத்திரமன்றி ஓர் சிறந்த விடுதலை வீரனுகவும் அரசியல் வாதியாகவும் திகழ்ந்தார்.

இந்திய தேசியக் காங்கிரஸினுல் ஆரம்பிக்கப்பட்ட விடுதலை இயக்கத்தில் சேர்ந்து இந்தியாவின் விடுதலைக்காக அயராது போராடினுர். இந்து முஸ்லிம் ஐக்கியத்திற்காகப் பெரிதும் உழைத்த இவர் 1910-ல் பம்பாய் சட்ட சபை அங்கத்தினரானுர்,

எப்பொழுதும் தேசியம் ஒன்றையே நோக்காகக் கொண்டிருந்தார். அவர் அரசியல் வாழ்க்கையை ஆரம்பிக்கும் போதோ அன்றி விடுதலைப் போராட்டத்தில் குதிக்கும் போதோ பாகிஸ்தான் உருவாக்கப்படல் வேண்டும் என்ற நோக்கம் கொண்டவராக இருக்கவில்லை. எனினும் தீர்க்கதரிசன புத்தியுடைய அவர் சந்தர்ப்ப சூழ் நிலைகளின் போக்கைக்கண்டதும் பாகிஸ்தான் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்.

## பாகிஸ்தானை உருவாக்கினுர்

1913-ம் வருடம் முஸ்லிம் லீக்கில் சேர்ந்தார். முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி முஸ்லிம் ஐக்கியத்தை ஏற்படுத்தினுர். முஸ்லிம்களுக்காக ஓர் தனி நாடு பிரிக்கப்படல் வேண்டும் (பாகிஸ்தான்) என்ற தீர்மானத்தை 1940-ல் முஸ்லிம் லீக் நிறைவேற்றியதும் அவரின் தலைமை மீது நம்பிக்கை வைத்த அம் முஸ்லிம் பெரு மக்கள் அவரிடமே இப் பொறுப்பை அளித்து அவருடன் ஒத்துழைத்தனர்.

பாகிஸ்தானை பெறுவதற்காக ஜின்னு பல கஷ்டங்களையும் மேற்கொள்ளலானுர். அவரின் விடா முயற்சியின், துணிவின், திறமையின் பிரதிபலனுக 1947-ம் வருடம் ஆகஸ்ட் 14-ம் திகதி பாகிஸ்தான் உருவாகியது.

பாகிஸ்தானைப் பெற்றுல் மட்டும் போதுமா? அதன் கல்வி பொருளாதார வளர்ச்சிக்காகப் பெரிதும் தொண்டாற்றவும் வேண்டியிருந்தது.

பாகிஸ்தான் இன்று பல வழிகளிலும் முன்னேறி விட்டது. பாகிஸ்தானை உருவாக்கியதன் மூலம் முஸ்லிம்களுக்கு ஓர் முன் மாதிரியாகத் திகழ்ந்த அவ் வீர புருஷர் 1948 செப்டம்பர் 11-ல் இறைவனடி சேர்ந்தார் (இன்னுலில்லாஹி வ இன்னு அலைஹி வ இன்னு அலைஹி ராஜி ஊன்). அம் மாவீரன் பிறக்கும் போதோ நாட்டிலே அந்நிய ஆட்சி—எனினும் இறக்கும் போதோ தனக்கென ராஜ்யம், அதில் தானே அரசன்.

ஜன்னு! உன்னை நாம் மறக்கவில்லை. எங்களுக்கு வழி காட்டிய ஜோதி நீ!

இறைவா! ஈழத்திற்கோர் ஜின்னு வைத் தா!

தாய்க் குலமே! நமக்கோர் ஜின்னுவை ஈன்றெடுங்கள்.

## திருமலையில் த. பே. அ. ஊ. சங்கம் ஆரம்பம்

திருகோணமலையில் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் சங்க ஆரம்பப் பொதுக் கூட்டம் 15-9-63 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது. இக் கூட்டத்திற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் தலைமை தாங்குகிருர்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னுர், வவுனியா, ஆகிய இடங்களிலிருந்தும் பல பேச்சாளர்கள் இக் கூட்டத்தில் பங்கு பற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது என்று இக் கூட்ட அமைப்பாளர் திரு. இ. நவரெத்தினம் அறிவித்துள்ளார்.


இவர் யார்



## தெரிந்துகொள்ளுங்கள்!

இவரைப்பற்றி அறிந்திருந்தால் என்ருவது ஒரு நாள் இவருடைய உதவியினுல் உங்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.

பல தரத்திலுமுள்ள லட்சக் கணக்கான மக்கள் இவர் மூலம் தவிர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு வழிதேடிக் கொண்டுள்ளனர் என்பதை காரியாலயத்திலுள்ள நற்சாட்சிப் பத்திரங்களின் மூலம் அறியலாம். திறமை மிக்க இவர் மந்திர பலத்திஞலும், தெய்வ பலத்திஞலும் மைமூலம் பார்த்தும் யந்திரம், மந்திரம், வசியம், வைத்தியம் முதலியவற்றை சரிவர செய்து பலவித காரணங்களிலும் வெற்றி அடையச் செய்வார். ராஜவசியம், ஆண் பெண் வசியம், சர்வஜன வசியம், விவாஹம், காதல், வழக்கு வந்தயங்கள், பரீட்சை, நிலபுலன், வியாபாரம், வேளாண்மை ஆகியவற்றிலும் வெற்றி, உயர்வு, முன்னேற்றம் அடையவும் மற்றும் கிரக தோஷங்கள், ருது தோஷம், பேய் பிசாசு கோளாறுகளையும் பலவிதமான நோய்களையும் விலகும்படி செய்வார். உங்களுக்கு ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் வழிதேடிக்கொள்ள இவரைச்சந்தியுங்கள். அல்லது இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் நேரில் சந்திக்கலாம்.

விலாசம்:-

கவர்மென்ட் ரெஜிஸ்டர் மாந்திரிக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

**அருத எண்ணை காரியாலயம்**

கம்பளை.


# ஈழத்தில் கப்பல் கம்பனி

மீன்கள் நிறைந்த ஆழ் கடல்களினுல் சூழப்பெற்றிருக்கும் இலங்கைத் தீவிற்கு ஆண்டு தோறும் 1050 இலட்சம் ரூபா பெறுமதியான மீன் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இம் மீனை 5000 — 7000 கல்களுக்கு அப்பால் வசிக்கும் ஜப்பானியரும் ஆங்கிலேயரும் தங்கள் தங்கள் தீவுகளில் இருந்து பல்லாயிரம் கல்கள் தொலையில் இருக்கும் கடல்களிற் சென்று பிடித்து எமக்கு அனுப்புகின்றனர். ஆகவே எமது நாட்டை வந்து அடைய முன் இம் மீன் குறைந்தது 10,000 கல்கள் பிராயாணம் செய்கின்றது. 100 — 200 கல்களுக்குள் இருக்கும் மீனை நாம் சென்று பிடித்து வரின் இந்த 10,000 கல் கப்பற் பிரயாணச் செலவேனும் எமக்கு இலாபப்பட மாட்டாதா!

இவை யாவற்றையும் மிகவும் நுணுக்கமாகக் கவனித்து இதற்குரிய நால்கள் பலவற்றையும் அராய்ந்த சிலர், ஆழ் கடலில் சென்று மீன் பிடிப்பதற்கு, பத்து இலட்சம் ரூபா மூலதனத்துடன் 'சிலோன் ட்ரோலேர்ஸ் லிமிற்றட்' என்னும் நிறுவனம் ஒன்றை அண்மையில் நிறுவியுள்ளது.

இந்த நிறுவனத்திற்கு பத்து ரூபா பெறுமதியான ஒரு இலட்சம் பங்குகள் மூலம் பத்து இலட்சம் ரூபா சேர்க்கும் நோக்கம் உண்டு.

இந் நிறுவனத்தை அரசாங்கம் அங்கீகாரம் பெற்ற கைத்தொழிலாக ஏற்று ஐந்து வருடங்களுக்கு வருமான வரி அறவிடாதிருக்க வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் தை மாசத்தில் முதல் கப்பல் இலங்கையை வந்தடைய வேண்டிய ஒழுங்குகள் யாவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று தெரிகிறது.

## மீண்டும் தார் பூசும் இயக்கம்!

கொழும்பிலுள்ள சில தெருக்களின் பெயர்ப் பலகையிலுள்ள தமிழ் எழுத்துக்களும், ஆங்கில எழுத்துக்களும் தார் பூசி அழிக்கப்பட்டு வருகின்றன. மீண்டும் தார் பூசும் இயக்கம் ஆரம்பித்து விட்டதோ என்று பலர் கருதுகின்றனர்.

பண்டாரவளையில் நடைபெற்ற கலவரத்தைத் தொடர்ந்தே, கொழும்பிலும் இந்த "தார் பூசும் இயக்கம்" ஆரம்பித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## யாழ். பிரதிநிதி எங்கே?

ஊர்காவற்றுறைத் தேர்தலில் தனது கைப்பொம்மை அபேட்சகர் திரு. ராஜசூரியர் வெற்றி பெற்றுவிடுவார் என்று கொக்கரித்துத் திரிந்த யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. துரையப்பா தேர்தல் முடிவினுல் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபட்டதாகத் தெரியவில்லை.

வாய் வீரம் பேசித் திரிந்த இவர் கடந்த வாரத்தில் பாராளுமன்றத்திற்குத் தமது தலைக் கறுப்பைக் கூடக் காண்பிக்காமல் ஒடி ஒளிந்து கொண்டிருந்ததாக நமது பாராளுமன்ற நிருபர் தெரிவிக்கிருர்.

சிம்மாசனப் பிரசங்கத்திலோ, வரவு செலவுத் திட்ட விவாதத்திலோ, கமிட்டிநிலையிலோ எதையும் வாய்விட்டுப் பேசாத திரு. துரையப்பா ஊர்காவற்றுறைத் தேர்தலுக்குப் பின் ஒடி ஒளித்ததாகக் கேள்வியுற்ற அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த அநேகர் 'மச்சான்' துரையப்பாவுக்கு ஏதும் நடந்து விட்டதோ எனக் கூட சந்தேகிக்கிருர்களாம்.

### பிந்தி வந்த செய்தி

சில அரசாங்க உறுப்பினர்களின் தயவைப் பெற்று பெல்கிரேடுக்குப் போய்விட்டதாகப் பிந்தி வந்த செய்தி ஒன்று கூறுகிறது.

"உரோமாபுரி தீப்பிடித் தெரியும் போது நீரோ மன்னன் வீணை வாசித்தானும்" இதைப் போன்றுதான் திரு. துரையப்பாவின் நிலையும் உள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை, தமிழ் பேசும் இனத்துக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களையிட்டுக் கவலை கொள்ளாது வெளிநாடு சென்று விட்டார்" என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பிரமுகர் நமது நிருபரிடம் கூறினுர்.

## வன்னியசிங்கம் நினைவு விழா

எதிர்வரும் 21-9-63 சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு புத்தூர் நவக்கிரியில் அச்சுவேலி கிராம சபைத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி தலைமையில் அமரர் வன்னியசிங்கம் நினைவு விழா நடைபெறும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி புத்தூர் கிளைத் தலைவர் திரு. க. சின்னத்துரை வரவேற்புரை நிகழ்த்துவார். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனேகர் விழாவில் கலந்து உரை நிகழ்த்துவார்கள். நாத விநோதன் திரு. தியாகராசாவின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும்.

## பந்தம் பிடித்தும் பயனில்லை!

கல்முனைப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் எம். சி. அகமது தாம் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்பதைப் பகிரங்கமாகக் கூறுகிருர்:

.........என்னை மட்டுமல்ல கிழக்கு மாகாணம் முழுவதையுமே சுகாதார இலாகா ஏமாற்றுகிறது. சிறுபான்மை மக்களை நோயாளிகளாகத் தொலைக்க வேண்டுமென்று தான் இந்த சுகாதார இலாகா கருதுகிறது போலும்.

.........என்னை ஒரு பொம்மையாகப் பாவித்திருக்கிருர்களே அன்றி ஒருவித பயனும் ஏற்படவில்லை என்பதைத் துக்கத்துடன் கூறுகிறேன்.

......பந்தம் பிடிப்பவர்களுக்கு இந்த அரசாங்கத்தில் இடம் கிடைக்கமாட்டாதென்பதை நான் கூற விரும்புகிறேன். இந்த அரசாங்கத்துடன் கடந்த இரண்டு வருடங்கள் ஒத்துழைத்தும் எதுவித பயனும் இல்லை.

# அநீதி ஆட்சி செலுத்தும் அரசாங்கத்திடம்

## பழைய தலைமையை நம்பினால் பரிதாப நிலையே அடைவோம்

### இலங்கைத் தொழிலாளர் கழகம் சேர்ந்து பணியாற்றுவோம்

—கோ. இ. து. கோவிந்தராஜன்—

வரும் ஜனவரி மாதத்திலிருந்து அரசாங்க அலுவல்கள் யாவும் சிங்களத்திலேயே நடைபெற வேண்டுமெனச் சிங்கள மொழி நம்மீது திணிக்கப்படவிருக்கிறது. துவேஷம் இப்போதே தலைவிரித்தாடுகிறது. பல அரசாங்க அலுவலகங்கள் சிங்களத்திலேயே செயல்படத் தொடங்கிவிட்டன. இனி, தமிழ் படித்த, ஆங்கிலம் படித்த வாலிபர்களின் நிலை என்ன?

இந் நாட்டில்தான் பிறந்தோம்; வளர்ந்தோம்; ஆனால் நாமோ நாடற்றவர், கள்ளத்தோணிகள். இது போன்ற அவலப் பெயர்களுடன்தான் நடமாடவேண்டியிருக்கின்றது. இன்று நமது தாய் மொழியாம் தமிழ் மொழி—அய்யாவு, பிரான்சிஸ் போன்றவர்களை அர்ப்பணம் செய்து காக்க முனைந்த தமிழ் மொழி—பலதான்தோன்றித் தமிழர்களால் அவல நிலையை அடைந்து விடவிருக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் இந்நாளில் சோசலிசம் பேசும் அரசாங்கம் சிறுபான்மையினரை நசுக்கிப் பிழிகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயற்சி நடைபெற வேண்டிய இந்த நேரத்தில் இரண்டு மாபெரும் பிரிவினரான சிங்கள, தமிழ் மக்களிடையே நல்லெண்ணத்தை நாசமாக்க வழி செய்து விட்டது. இரு சமூகத்தினரையும் பிளவுபடுத்தி நாட்டில் பொருளாதார வளர்ச்சியைக் குன்றிப் போகச் செய்கிறது. இதுதான் இன்று இலங்கை அரசாங்கத்தின் சோசலிசம் போலும்!

#### பேச்சொன்று செயலொன்று

பேச்சிலே நல்லவையைப் பேசும் இந்த அரசாங்கத் தலைவர்கள், செயலில் நல்லவையை விட்டுக் கெட்டவைகளையே கடைப்பிடித்துவருகிறார்கள். இந்த வாய்ப் பேச்சு வீரர்கள் சென்ற காலங்களிலே வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க, பல தொழில்களைத் தேசியமயமாக்கினார்கள்.

தேசிய மயமாக்கப்பட்டதில் வேலை கிடைத்தோர் எத்தனை பேர்? இலாபம் கிடைத்ததா? இல்லையே அரசாங்கத்திற்கு நஷ்டம் தான். வேலைதான் ஒழுங்காக நடக்கிறதா? அதுவும் இல்லை.

#### தொழிற் சங்க நிலை என்ன?

இந்த நிலையில் நாம் மூல்லோயா கோவிந்தனையும், டயகமா ஏப்ரகாம் சிங்கோவையும் பலி கொடுத்துக் காக்க முனைந்தோமே, அந்த தொழிற் சங்கங்களின் நிலை என்ன என்பதை நாம் சற்றுச் சிந்திப்போம்.

சிங்களம் ஓர் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டுமென 'மக்களின் தலைவன் நான்' என்று கூறிக்கொள்ளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சொல்லுகிறார். ஆனால் அதே நேரத்தில் சிங்களவர் தமிழ் படிக்க வேண்டுமென வற்புறுத்தவில்லை. ஏன்? பதவி, பணநலம் பாதிக்கப்படும் என்றா? ஜனாப் அஸீஸ் 17-50 அலவன்ஸுக்காகப் பெரிய போராட்டம் நடத்தப் போவதாகச் சொல்லுகிறார். அதுவும் பேச்சோடு சரி போலும்!

#### ஏன்?

நமக்குப் பிரஜா உரிமை, மொழி உரிமை கிடைத்துவிட்டால், இந்த நாட்டுப் பிரஜைகளுக்குக் கிடைப்பது போன்ற எல்லாச் சலுகையையும் நாமும் பெற முடியும். இந்த உயிர்ப் பிரச்சினைக்குப் போராடாத சங்கமும் கட்சியும் ஏன்?

#### இ.தொ.க. தலைமையில் செல்வோம்

சர்வாதிகார ஆட்சியில் நடப்பது போன்று இன்று நம் தொழிற்சங்கங்கள் நடைபெறுகின்றன. இ. தொ. காங்கிரஸிலும், ஜ. தொ. காங்கிரஸிலும் இருவர் ஆயுட் தலைவர்களாகிவிட்டனர். தத்தம் தலை

(13-ம் பக்கம் பார்க்க)

## அடி பணியும் தலைவர் நமக்கு வேண்டாம்

### உரிமை பெறும் போராட்டத்திலிருந்து ஒதுங்கி நிற்கட்டும் அவர்கள்

வாழத் தகுதியற்ற, காடும் மேடுமாக கருமுகிலன்ன பாறைகளாக, ஆடும் பாம்பும் கொடும் மிருகங்களும் வாழும் காடுகளாக, இருண்ட கண்டமெனப்பயனற்றுக் கிடந்தது ஈழத்து மலையகம் அன்று.

அழகற்று—பொலிவற்றுக் கிடந்த மலையகத்தை இன்று கலை வளரும் நல்லுலமாக மாற்றினர்—மலையக மண்ணிற்கு தம்முடலையும் ஈந்து, கொட்டும் மழையிலும், கொடும் பனியிலும், கடும் வெய்யிலிலும் குளிர்வாட்ட, உளம் சோர, உழைப்பால் உறுதி பெற்ற உடல் சோர, சீர்திருத்தி பச்சைக் கிளிகள் கொஞ்சும் பசுஞ் சோலையாக மாற்றினர்—நாட்டின் வருமானத்தை உயர்த்தி, ஈடு இணையற்ற நாடாக ஈழத்தை மாற்றினர் மலையக மக்கள்.

#### யார்......? எப்படிப்பட்டோர்......?

மனித இனத்திற்கே மிக மிக அவசியமான உரிமைகளை இழந்து, நாடற்றவர்களாக, நாடோடிகளாக தத்தளிக்கும் மலைநாட்டுத் தமிழர்கள் — உலகெங்கும் கொடி கட்டி ஆண்ட பழந் தமிழ்க் குடியினர்.

பிரச்சினைகளுக்குப் பஞ்சமில்லை. ஈழத்திற்கு வாழ்வளித்தவர்களுக்கு அரசாங்கத்தினரால் அளிக்கப்படும் அநீதிகள் பல. அதனால் பிரச்சினைகள் தீரவில்லை—

நூரளை தமிழ்ச் செல்வன்

வளர்ந்து கொண்டே செல்லுகின்றன. குடியுரிமைப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை, கல்வி. மொழிப் பிரச்சினை... இப்படி இன்னும் எத்தனையோ இப் பிரச்சினைகளில் தலையாய பிரச்சினை குடியுரிமையே!

#### வர்த்தக நிலையங்கள் அபயம் தந்தன

நாடற்றவர்களுக்கு வேலை வசதிகளும் மறுக்கப்பட்டன. ஆரம்பத்தில் 'நாடற்றவர்' பட்டியலில் சேர்ந்தவர்களுக்கு அரசாங்க வேலைகள் மாத்திரம் மறுக்கப்பட்டன. பின், 'இலங்கையர் மய மசோதா'வினால் தோட்டங்களிலும் வேலை பெறும் வசதிகள் நிறுத்தப்பட்டன. அதனால் ஆட்சியால் நாடற்றவர்களென வர்ணிக்கப்பட்டவர்களுக்கு அபயம் தந்தன வர்த்தக நிலையங்கள். இன்று அவைகளை நம்பியே வாழ்ந்து வருகின்றனர் பலர். சிலர் வியாபாரமே செய்து காலத்தை ஓட்டுகின்றார்கள். தற்பொது அதற்கும் தடையிட்டிருக்கிறது அரசாங்கம். இனி அவர்கள் (நாங்கள்) வாழ்வதெப்படி? வாழ வழியற்று, பசிக்குப் புசிக்கவுமின்றிச் சாக வேண்டுமா? ஓடெடுத்து வீடு வீடாய் யாசிக்க வேண்டுமா?

#### யார் நாடற்றவர்...?

இலங்கை அரசாங்கம் நாடற்றவர்கள் பெயரால் தமிழர்கள் பலரை நசுக்க அநீதியான சட்டங்களை இடுகிறது. ஆனால் எத்தனையோ முறை குரலெழுப்பியும் இலங்கை இந்தியர் பிரச்சினை தீரவில்லை. அதற்கு மாறாக, நாடற்றவர்களுக்கென்று பல சட்டங்களை இட்டிருக்கிறது — இடுகிறது. அப்படியானால் யார் நாடற்றவர்கள்? இலங்கை இந்தியர் பிரச்சினை தீருமுன் அரசு யாரை நாடற்றவர்களெனக் கண்டது?

அதற்கு முன் ஏன் இந்த சட்டங்கள்? இந் நாட்டில் தமிழர்கள் அறவே வாழாது அழித் தொழிக்கும் திட்டமா?

#### கை விரித்தனர்

ஆட்சியின் ஆணவச் சட்டங்களை முறியடித்து, உரிமைகளைப் பெற்ற அடிமைத் தளையிலிருந்து மீள, ஒன்றுபட்டுப் போராடுவோமென மலையகத்தில் இயங்கும் சில கட்சிகளை நம்பினோம். ஆனால், சிறையிலிருக்கும் நிரபராதியை விடுவிடுக்க முயலாமல் அவனுக்கு நல்ல சோறும், உடையும் கொடுத்துத் திருப்திப்படுத்தும் வக்கீல்களைப் போல் இப் 'பொறுப்பான'' தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் செய்யும் வேலை சம்பந்தமான ''சில'' பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாத்திரமே திருப்தியடையச் செய்கிறார்கள். உரிமையற்றவர்களுக்கு இவைகள்தான் 'முதலில்' முக்கியமா?

#### போராட்டமே வழிவகுக்கும்

'மயிலே மயிலே என்றால் இறகுபோடுமா?' அதேபோல் தான் இருக்கிறது இலங்கை இந்தியர் பிரச்சினை. பல

(13-ம் பக்கம் பார்க்க)

## பாரதியின் கனவை நனவாக்க சபதம் ஏற்பீர்

இன்று மலைநாட்டில் வாழும் தமிழ் மக்களின் நிலைக்கும் பாரதி படைத்துள்ள மறவனின் நிலைக்கும் நிறைய ஒருமைப்பாடு உண்டு. காலமெல்லாம் கொடுமைப் பட்டு கடுமையாக உழைத்த மறவன் இறுதியில் ஏமாந்து ஏக்கமடைந்து வாடும் நிலைக்கும், இன்று நமது மலை

தமிழோவியன்

யக மக்கள் வாழும் வாழ்க்கைக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை என்பதை—

"மண்வெட்டிக் கூலிதினலாச்சே! — எங்கள்
வாள்வலியும் வேல்வலியும் போச்சே!
விண்முட்டிச் சென்றபுகழ் போச்சே! — இந்த
மேதினியிலே கெட்ட பெயராச்சே!"

என்ற இவ்வரிகள் எவ்வளவு அழகாக உணர்த்துகின்றன. இலங்கை நாட்டின் தேட்டத்தை உயிராக எண்ணி

"கன்னங் கரியவிருள் நேரம் — அதில்
காற்றும் பெருமழையும் சேரும்;
சின்னக் கரியதுணி யாலே — எங்கள்
தேகமெல்லாம் [illegible] போலே"

இரவு பகலாக உழைத்தவர்கள் நம் தமிழ் மக்கள். அவர்களை 'நா[illegible]ற்றவர்களாக்'கி இன்று வி[illegible]றவர்களாக்கவும் முயலும் அ[illegible]ச் செய்கையை அறிந்து கொதிப்பவர்கள் நாம். "நாம்



இருக்கும் நாடு நமது" என்னும் நல்ல நினைப்போடு தன்னலங் கருதாமல் பாடுபட்ட மக்களுக்கு இன்று வந்துள்ள இழிவை நினைத்தால், "சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்" என்று பாரதி நடையிலே பாடவே தோன்றும். தோட்டத் தொழிலாளர்களின் மோசமான வாழ்க்கை நிலைமையைப் பார்க்கும் போது,

"நாயும் பிழைக்கும் இந்தப் — பிழைப்பு;
நாளெல்லாம் மற்றிதிலே உழைப்பு;"

என்று உள்ளங் கலங்கிடச் செய்கிறது. என்றாலும், உளந்தேர்ந்து, 'புதிய கோணங்கி குடுகுடு" போடும் பாரதி, தொழிலாளிக்கு ஆறுதல் கூறுகிறார்.

"தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்,"

என நல்ல காலம் வருகுது என்கிறார். முன்னேக்கிப் பாடுவதில் புகழ்பெற்றப் பெரும் புலவன் பாரதியின் வாக்கு வரும் நாளில் பலிக்காமல் போய் விடுமா? 'உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்' என்ற பாரதி—

".........வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்.
விழலுக்கு நீர்ப்பாய்ச்சி மாய மாட்டோம் — வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓய மாட்டோம்"

என்று ஏமாளியாகி, ஏழையாகி வாடும் தொழிலாளியை எச்சரிக்கை செய்கிறார். "வீணருக்கு உழைக்காதீர். விழலுக்கு நீர் இறைக்காதீர். உரிமையை இழக்காதீர்" என்று மறைமுகமாக உரைக்கின்றார்.

#### தமிழினப் பற்று

பாரதியை இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப் பற்றற்றவராக்கி மகிழும் உலகப் பொது நோக்கு வாதிகளையும் மீறி, அவர் தமிழனாகவே — தமிழர் நலம் பேணும் தமிழ்க் கவிஞனாகவே நம் முன் நிற்கின்றார். "தமிழகத்தை விட்டேகிய இந்தத் தமிழ்ச் சாதியினர் எப்படி வாழ்வார்கள்? அவர்களின் எதிர்காலம் எப்படி? ஏ, விதியே! சொல்" — என்று அன்றே ஆழ்ந்து நோக்கியவர் பாரதி. வருங்காலத்தில் இவ்வெளிய தமிழ் மக்கள் எப்படி வாழப் போகிறார்களோ? என்ற கவலை, ஐயம்

(13-ம் பக்கம் பார்க்க)

## மலைநாடு


### ஆரோக்கியாமிருத லேகியம்

மலபந்தம், பசியின்மை, வயர்வீர்பு, மூலரோகம், சொறி சிரங்குகள், குஷ்டம், இருமல், குன்மம், இடுப்பு வலி, வாதம் முதலிய வியாதிகளை விரைவில் சுகப்படுத்துகிறது. இம் மருந்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், நாட்பட்ட மலச்சிக்கலை நீக்கி இரத்த விருத்தியும் பலமும் கொடுக்கிறது. பிரதி தினமும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

விலை : ¼ ரூ. 2-00, ½ ரூ. 3-50, 1ரூ. 6-50.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்,
80, புதுச் செட்டித் தெரு, கொழும்பு-13.

# அறவழி அரசியல் வாழ்வு கண்டவர்

## தந்தை செல்வாவின் உள்ளம் கவர்ந்தவர்

## தமிழ் உரிமைக் காவலன் கோப்பாய் தந்த கோமான்

உலகத்தில் காலத்துக்கு காலம் மகான்கள், உத்தமர்கள் தோன்றித் தொண்டாற்றுகிறார்கள். பெருமக்கள் அரசியல் வழியிலோ ஆத்மீக வழியிலோ பெரும் பணியாற்றுவது மக்கள் செய்த பாக்கியமே. பாரத நாட்டில் தோன்றிய கருணாமூர்த்தி காந்தியடிகள் அரசியலையும் ஆத்மீக வழியையும் ஒன்றாகப் பிணைத்து தொண்டாற்றிய பெருமையில் முன்னிற்பவராவர்.

### உலகம் வியக்க உழைத்தவர்

நம் நாட்டிலும் பெருமக்கள் தோன்றித் தொண்டாற்றியிருக்கின்றனர், தொண்டாற்றுகின்றனர். இந்த வரிசையிலே எமது கண் முன்னே உலகமே கண்டு வியக்கத்தக்க வழியில், தனது தாய் நாட்டிற்காக, தனது தாய் மொழிக்காக, தனது இனத்துக்காக, பண்பாட்டிற்காக உழைத்தவர் தான் நமது காலஞ்சென்ற கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கமவர்கள்

### உரிமைக் காவலன்

திரு. வன்னியசிங்கமவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி, தொண்டு - நிறைவேறுவதற்கு முன்னே அவர் அகால மரணமெய்தியது தமிழ் பேசுமினம் செய்த தவக் குறையே! தமிழினத்தின் உரிமைக் காவலனாகத் திகழ்ந்து, எந்தக் குறிக்கோளுக்காக அவர் வாழ்ந்து தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தாரோ அந்தக் குறிக்கோள் இன்றும் நிறைவேறாதிருக்கின்றது. இன்று மொழிச் சுதந்திரம் இழந்து இனத்தின் ஒரு பகுதியினரின் குடியுரிமை பறிக்கப்பட்டு பாரம்பரிய வாழ்விடம் மெல்ல மெல்ல விழுங்கப்பட்டுவரும் ஓர் துன்பச் சூழ்நிலையில் அவரை நினைவுகூர எத்தனிக்கிறோம்.

### காந்தியும் பண்டிதரும்

பண்டிதர் நேருவுக்கு கிடைத்த மதிப்புரைகளில் தலைசிறந்தது காந்தியடிகளால் அவருக்கு அளிக்கப்பட்ட "ஜவகர் மனிதருள் மாணிக்கம் என்பின் எனதிடத்தை வகிக்கஅவரே உரிமையாளர்" என்பது. அதே போன்று, சொல்லின் பொருள் அளந்து சொல்லும் "ஈழத்துக் காந்தி" செல்வநாயகம் தம்மோடு இணைபிரியாது உழைத்த 'ஈழத்துப் பண்டிதர்' வன்னியசிங்கத்தைப்பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் "திருவாளர் வன்னியசிங்கமில்லாமல் தமிழரசு இயக்கம் உற்பத்தியாகி இருக்கவும் மாட்டாது. இன்று அதிருக்கும் உயர்வுக்கு வளர்ந்திருக்கவும் மாட்டாது...... வன்னியசிங்கம் ஒரு பெரும் தியாகி" என்று அவர் விடுதலை இயக்கத்தில் காட்டிய ஊக்கத்தைப்பற்றியும் ஆற்றிய தொண்டின் தரத்தைப் பற்றியும் போற்றியுள்ளார்.

**இணுவையூர் கனேசன்**

இலங்கைத் தமிழரசுக் கட்சி நிறுவுவதற்கு உறுதுணையாய் இருந்த தலைவர் வன்னியசிங்கம் தமிழ் இனத்தின் அரசியல் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை உண்டு பண்ணினார் என்றால்



அது மிகையாகாது. நிலையான அடிப்படைக் கொள்கைகள் எதுவுமின்றி சுயநலமும் சமயோசிதமுமே குறிக்கோளாகக் கொண்டு தமிழ் அரசியல் வாதிகள் வாழ்ந்த காலத்தில், அறத்தின் அடிப்படையில் நேர்மை, தொண்டு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, வீரம், அகிம்சை என்ற தூண்கள் நாட்டி தமிழரசுக் கட்சி என்ற மணிமண்டபத்தைக் கட்டி எழுப்புவதில் அவர் பெரும் பங்கெடுத்தது யாவருமறிந்ததே. அன்று தொடக்கம் இறக்கும் வரை, அவர் தமிழினத்தை எதிர் நோக்கியுள்ள அபாயங்களைப் பற்றியும், அவைகளினின்றும் தப்புவதற்கு தமிழரசுக் கட்சி ஆய்ந்து எடுத்த நாற்பெரும் அம்சக் கொள்கைகள் பற்றியும் மக்களிடையே பரப்புவதற்கு அரும்பாடுபட்டார், ஓர் அளவு வெற்றியும் கண்டார். ஆனால் முதலில் எங்கும் எதிர்ப்பையே கண்டார். ஒரு புறம், தமிழினத்தை அழிக்கும் திட்டம் வகுத்து அதை மறைமுகமாகச் செயற்படுத்தும் அரசாங்கத்தின் எதிர்ப்பு; மறுபுறம் அந்த அரசாங்கத்தை சுயநலனுக்காக ஆதரிக்கும் தமிழ் அரசியல் வாதிகளின் குதர்க்கம்; இன்னொருபுறம், அந்த அரசாங்கத்தின் மறைமுகத் திட்டத்தின் பயங்கர விளைவை ஊகித்தறிய மாட்டாத பொதுமக்கள் பலரின் ஆதரவின்மை. இத்தகைய எதிர்ப்புச் சக்திகளுக்கிடையில் நின்று போராடி வன்னியசிங்கம் பெரும் தொண்டாற்றினார். இத்தொண்டின் பலனாகவும், 56ம் ஆண்டில் ஆட்சிபீடம் ஏறிய பண்டார நாயக்கா அரசாங்கத்தின் வெளிப்படையான தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கை காரணமாகவும், தமிழரசுக் கட்சியின் தீர்க்கதரிசனத்தின் திறனைத் தமிழ்ப் பொது மக்கள் சந்தேகமற விளங்கினர்.

### தீர்க்கதரிசனம்

இன்று ஒருசிலர், அரசாங்க சேவையை விட்டு விட்டுப் போய்த் தமிழர்கள் என்ன செய்ய முடியும், தமிழினம் தங்களின் ஊதியத்தைக் கொண்டு தானே வாழ்கிறதுஎன்றும் ஒருசிலர், அரசாங்க மொழியைப் படித்து உத்தியோகத்தில் தொடர்ந்து இருக்கலாம் என்றும் கூறித் திரிகின்றனர். அரசாங்க சேவையில் தமிழ் மகனுக்கு இனிமேல் இடமே கிடைப்பது அரிது என்பதை, திரு. வன்னியசிங்கம் அவர்கள் தீர்க்க தரிசனமாக கூறினார்கள். அவர் 1956ம் ஆண்டு திருமலை மாநாட்டில் ஆற்றிய உரையில் இருந்து ஒரு பகுதி வருமாறு:- "இதுகாலவரை தமிழ் பேசும் மக்களே அரசாங்க சேவைகளில் நிறைந்து கிடக்கிறார்கள் என்றும், சேவைகளில் 60 சத வீதத்தினர் தமிழர் என்றும், 80 வீதத்தினர் தமிழர் என்றும் தப்பான பிரசாரங்கள் செய்து வந்தார்கள். இப்பொழுது புள்ளி விபரங்களைச் சரியாக ஆராய்ந்து பார்த்ததில் சில துறைகளில் 35 சத வீதம் என்றும் எல்லாத் துறைகளிலும் சராசரி கணக்குப் பார்க்கும்போது தமிழ் பேசும் மக்களின் வீதசாரம் 30க்கும் குறைகிறதென்றும் தெரிகிறது. இவ்விதம் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் தமிழ் பேசும் மக்கள் தொகை மொத்த தமிழ் பேசும் மக்களின் தொகையில் 1 சத வீதத்துக்கும் குறைவாகவே காணப்படுகின்றது.

### மிகச் சொற்பம்

ஒவ்வொரு அரசாங்க ஊழியனுடன் தனது சீவனத்துக்கும் தன்னுடைய உழைப்பில் தங்கியிருக்கும் வேறு 4 பேருக்கும் பொறுப்பாளி என்று கணக்கிட்டால், தமிழ் பேசும் இனத்தின் 5 சத வீதம் மட்டுமே அரசாங்க சேவையில் தன் சீவனத்துக்குத் தங்கியிருக்கிறது என்பது தெளிவு. அரசாங்க நன்கொடை, பெறும் பணம் பெறும் பள்ளிக்கூடங்கள் போன்ற ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்களையும் சேர்த்துக் கணக்கிட்டாலும் கூட நமது மக்களின் மொத்தத் தொகையில் 10 சத வீதத்துக்குட்பட்டாரே அரசாங்க சேவையிலோ பண உதவியிலோ தங்கியிருப்பவர் ஆவார்.

### எப்படி நம்புவது?

சிங்களம் தனி அரசகரும மொழியான பின், சிங்களம் படிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு உத்தியோகம் கிட்டுமெனபதற்கில்லை. மொழி விஷயத்தில் அநீதியாக நடப்பவர்கள் உத்தியோகம் கொடுக்கும் விஷயத்தில் நீதியாக நடப்பார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அன்றியும் சிங்களம் மட்டும் என்ற திட்டத்தில் தமிழ் பேசும் மக்களை அரசாங்க சேவையிலிருந்து ஒழித்துக் கட்டி அவர்களின் இடங்களைச் சிங்களவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற நோக்கமும் சேர்ந்து இருக்கின்றது. அல்லாவிடில் மொழியுரிமை பற்றிப் பேசும் போது பெருந்தொகையான தமிழர்கள் அரசாங்க சேவையிலிருக்கிறார்கள் என்ற வீண் கூச்சல் எழுந்திருக்கத் தேவையில்லை. அன்றியும் சமீபத்தில் திரு. மேத்தானந்தா அவர்கள் அந்த வேலைக்கு ஒரு கத்தோலிக்கரை ஏன் நியமிப்பான்? மற்ற வேலையை ஒரு பௌத்த மதத்தினருக்கு ஏன் கொடுக்கவில்லை? என்ற கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கிறார். மற்ற சமயங்களுக்குப் பங்கம் விளையாமல் பௌத்த கமிஷன் அறிக்கை வழி நடப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்று பிரதமர் கூறியிருக்கிறார். மொழிச் சட்டத்தில் எவ்வளவு "நியாயமான இடம்" தமிழுக்குக் கிடைத்ததோ அவ்விதமே மற்றச் சமயங்களும் பாதுகாக்கப்படும் என்பதில் ஐயமில்லை. தீவிரவாதிகளின் முயற்சிகள் இந்த முடிவைத்தான் கொண்டுவரும். மொழி வழியொடுக்கப் படுவது மட்டுமல்லாமல், மத வழியாலும் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவர். ஆகவே நம்மீது சிங்களம் திணிக்கப் படுவதை எதிர்த்து நிற்க வேண்டும். சிங்களம் படிப்பதை நிறுத்துவது நம் சுயமரியாதையைப் பேண மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாகும்."

### சமஷ்டி விளக்கம்

சமஷ்டி என்றால் பிரிவினை என்றும் இரு மாகாணங்

(11-ம் பக்கம் பார்க்க)

### இராசவரோதயம் வீதி

மறைந்த தலைவர் திரு. ந இ. இராசவரோதயத்தின் ஞாபகமாக, கோயிலடி வீதியை இராசவரோதயம் வீதி என்று மாற்ற வேண்டும் என்றும், நகராண்மைக் கழகத்தில் அன்னாரின் புகைப்படத்தை வைக்க வேண்டுமென்றும், அடுத்துவரும் திருமலை நகராண்மைக்கழக மாதாந்தக் கூட்டத்தில் ஒரு பிரேரணை கொண்டுவர 1ம் வட்டார உறுப்பினர் திரு. ஞா. லுக்காஸ் அவர்கள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார் என்று தெரிகிறது.


## 'சுதந்திரன்'
### புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'



## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழிந்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# ஆளவந்தார் முதன்மையை ஏற்பதில்

## விடுதலையாளர் மத்தியில் முரண்பாடு

### அரங்கம் 5

ஆதர் கிரிபித்திடமிருந்து டி வேலராவுக்குக் கிடைத்த கடிதத்தில், அயர்நாடு ஆங்கில மன்னரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஆங்கிலேயர் கட்டாயப்படுத்துகிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆங்கில மன்னரை ஒற்றுக் கொள்வதைப் பற்றிய கேள்விக்கே இடமில்லை என அயர் பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே கூறப்பட்டிருந்தும் இவ்வாறாக ஆதர் கிரிபித் எழுதியது டி வேலராவுக்குத் திகிலூட்டியது. அவர் பேராளர் குழுவின் ஒற்றுமை சிதறடிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார். எனினும் ஆதர் கிரிபித்தின் மேலும் மைக்கேல் கொளின்ஸின் மேலும் தான் வைத்திருக்கும் நம்பிக்கையின் பேரில் தன்னைத் தேற்றிக் கொண்டார்.

அக்டோபர் 27ம், 28ம் திகதிகளில் சின் பீனின் ஆண்டு மாநாடு டப்ளினில் நடைபெற்றது. ஏமன் டி வேலரா மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தெரிவின் பின் பேசுகையில், ஆங்கில மன்னரை அயர் மக்கள் ஏற்றுக் கொள்ளுதல் என்ற கேள்விக்கு அறவே இடமில்லை என வலியுறுத்தினார். ஆயினும் பிரித்தானியப் பொதுநலவமைப்பு நாடுகளில் ஒரு சுதந்திர நாடாக அயர்நாடு விளங்குவதற்குத் தாராளமாக இடமுண்டு என்று கூறினார்.

லண்டனில், பேச்சுவார்த்தைகள் அள்ஸ்ரார் மாகா

போது சிறுபான்மையினர் கேட்கும் ஆறு மாவட்டங்களில் அரைவாசிப் பகுதியையே அவர்களுக்குக் கொடுக்கும் என்பதால் சிறுபான்மையினர் பிரிவினைக்கு ஒத்துக் கொள்ளமாட்டார்கள் எனத் தான் திடமாக நம்புவதால்தான் இந்த வாக்குறுதிகளைத் தான் ஆங்கிலப் பிரதமருக்குக் கொடுத்ததாகக் குடியதிபதி டி வேலராவுக்கு ஆதர் கிரிபித் விளங்கப்படுத்தினார்.

முடியும்; நாடுகள் கழகத்தில் அயர்நாடு இங்கிலாந்தோடு சமத்துவ நிலையில் இடம்பெற வேண்டும்; முப்படைகளும் அயர்நாட்டுக்கு இருக்க வேண்டும்; ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு ஆங்கில ஆட்சியினருக்கு அயர் நாட்டில் ஆங்கில அரசுக்குக் கடற்படை, விமானப்படை வசதிகள் அளிக்க இடமுண்டு—இவ்

மடைந்த பொலீசார் சபை அலுவலகங்களில் தேடுதல் நடாத்தி, ஆவணங்களைக் கைப்பற்றினர்.

இவ்வளவோடு புரட்டஸ்தாந்தர்கள் நிற்கவில்லை. பெல்பஸ்ற்றில் ஒரு புகை வண்டி நிறையப் பிராயாணஞ் செய்த கத்தோலிக்கத் தொழிலாளிகள் மீது குண்டுகள் பொழிந்தனர். நான்கு நாட்களாக நடைபெற்ற கலவரத்தில் 24 பேர் மாண்

பிரிவினைக்கு இடமளிக்கும் எந்த உடன்படிக்கையையும் ஆங்கில மன்னர்தான் அயர் நாட்டின் மன்னர் என்று கூறும் எந்த உடன்படிக்கையையும் அயர் பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்ளக் கூடாதென அமைச்சரவை முடிவு செய்தது. அத்தோடு அயர் மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத உடன்படிக்கை எதிலும் அயர் பிரதிநிதிகள் எவரும் கைச்சாத்திடப்படாதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அயர் பேராளர் குழு லண்டனை அடைந்ததும் கவன் டபி, றொபட் பார்ட்டன், ஏஸ்கின் சில்டேஸ் ஆகிய மூவரும் உத்தேச உடன்படிக்கை உறுப்புரைகளுக்குத் திருத்தங்களை வரைந்தனர். இத்திருத்தங்கள் அமைச்சரவையின் முடிவுக்கு ஏற்றனவாயிருந்தன.

இத்திருத்தங்களோடு லொயிட் ஜோர்ஜைச் சந்திக்கும்படி திருத்தங்களை வரைந்த மூவரும் கேட்டுக் கொண்ட பொழுது கிரிபித்தும் கொளின்ஸும் மறுத்துவிட்டனர். திருத்தங்களை வரைந்தவர்களே அவற்றைக் கொண்டு செல்லட்டும் எனக் கொளின்ஸ் ஆத்திரத்துடன் கூறினார். நிலைமை அவ்வாறாயின், பார்ட்டனும் டபியும், தாமே தனியாகச் செல்வதாகக் கூறி அதற்குத் தயாரானார்கள்.

(வளரும்)

## பல்கலைக் கழக வேந்தராக நாட்டின் முதல்வர் நியமனம்

எனினும் சேர் ஜேம்ஸ் கிறெயிக், ஆதர் கிரிபித்தின் விட்டுக் கொடுக்குந்தன்மையை ஏற்கத் தயாராக இருக்கவில்லை. பெரும்பான்மை மக்கள் ஆங்கில மன்னருக்கு நிபந்தனையற்ற விசுவாசம் காட்ட வேண்டும் என அவர் கோரினார். அதனால் லொயிட் ஜோர்ஜ் திரும்பவும் ஆதர் கிரிபித்திடம் சரண் புகுந்தார்.

அயர்நாட்டிலோ, மக்களும் தலைவர்களும் குடியரசில் தமக்கொண்ட நம்பிக்கையை வலியுறுத்தாம

வாறு இருந்தது அயர் பிரதிநிதிகளின் நிருபம்.

### அரங்கம் 6

அயர் பிரதிநிதிகளின் வேண்டுகோளைக் கேள்வியுற்ற லொயிட் ஜோர்ஜ் செய்வதறியாது திக்குமுக்காடினார். பேச்சுவார்த்தைகள் முறிந்தால உடனடி யுத்தம் ஏற்படும் என்று பய

---

**'கோமகன்'**

**'மாமல்லன்'**

---

முறுத்தினார். இதை ஆராய்வதற்காக ஆதர் கிரிபித்தும் மைக்கேல் கொளின்ஸும் 25-11-1921ல் நடைபெறவிருந்த அமைச்சரவைக் கூட்டத்திற்காக டப்ளினுக்குச் சென்றனர். பொதுநல நாடுகளின் தலைமைச் சின்னமாகவன்றி வேறெந்த முறையிலும் ஆங்கில மன்னரை அயர் பிரதிநிதிகள் ஏற்கப்படாது என்று அமைச்சரவை வலியுறுத்தியது. அதன்பின் லண்டனையடைந்த அயர் பிரதிநிதிகளிடம் 28-11-1921ல் ஆங்கிலேயரின் நிருபம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நேரத்தில் சிறுபான்மையினர் வசிக்கும் வட

டனர். இவற்றையெல்லாம் கண்ணுற்ற குடியதிபதி டி வேலரா குடியரசு இராணுவத்தைப் பலப்படுத்துவதற்காக நாடெங்கும் பிரயாணஞ் செய்யலானார்.

ஆங்கிலேயரின் உத்தேச உடன்படிக்கை உறுப்புரைகள் 1-12-1921ல் அயர் பேராளர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றை ஆராய்வதற்காக அயர் பிரதிநிதிகள் அனைவரும் அயர்நாட்டுக்கு விரைந்தனர்.

அயர் சுதந்திர மாநிலம் என்னும் பெயருடன் ஒரு பிரித்

## சமரசத்திட்டத்தில் அபிப்பிராய பேதம்

ணத்திலுள்ள சிறுபான்மையினர் பற்றித் திரும்பியது. அயர்நாட்டைத் துண்டு போடுவதை அயர் பிரதிநிதிகள் வன்மையாக எதிர்த்தனர். ஆயினும், ஆங்கில மன்னரை ஏற்றுக் கொள்ளாததென் அயர்நாட்டோடு தாம் ஒத்துழைப்பது என்ற பிரச்சினைக்கு இடமேயில்லை என்று வட அயர்நாட்டுப் பிரதமர் சேர் ஜேம்ஸ் கிறெயிக், லொயிட் ஜோர்ஜிடம் கூறியிருந்தார். இந்த இரண்டும் கெட்ட நிலையை அகற்றுவதற்காக லொயிட் ஜோர்ஜ் அயர் பிரதிநிதிகளின் முதல்வர் ஆதர் கிரிபித்திடம் தஞ்சம் புகுந்தார்.

அயர் சிறுபான்மையினர் அகில அயர்நாட்டுப் பாராளுமன்றம் ஒன்றிற்குக் கீழ்ப்படிந்த ஒரு பாராளுமன்றத்தை ஏற்றுக் கொண்டால், அயர் பிரதிநிதிகள், பொதுநல நாடுகளின் தலைமைச் சின்னமாக ஆங்கில மன்னரை ஏற்றுக் கொள்வதாகவும், சிறுபான்மை மக்கள் விரும்பினால், ஓர் ஆண்டுக்குள் பிரிந்து செல்லலாமெனவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டும் அயர்நாட்டுக் கரைகளில் ஆங்கில ஆட்சியினருக்குக் கடற்படை, விமானப்படை வசதிகள் அளிக்க ஒத்துக் கொள்வதாகவும் ஆதர் கிரிபித் அயர் பிரதிநிதிகள் சார்பில் லொயிட் ஜோர்ஜுக்குக் கூறினார். அயர்நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கக் கூறப்பட்ட இக் கருத்து உண்மையில் ஆதர் கிரிபித்தின் தனிப்பட்ட கருத்தே!

புரட்டஸ்தாந்துச் சிறுபான்மையினர் பிரிந்து செல்ல விரும்பினால், எல்லை ஆணைக்குழு ஒன்றினாலேயே எல்லைகள் நிர்ணயிக்கப்படும் எனவும் அவ்வாறு நிர்ணயிக்கப்படும் எல்லை தற்

லில்லை. அயர்நாட்டுத் தேசியப் பல்கலைக் கழகம் டி வேலராவை வேந்தராகத் தெரிந்தெடுத்தது. குடியரசின் இரண்டாவது வெளிநாட்டுக்கடன் 15-11-1921ல் ஆரம்பமாகியது. அயர் வாக்காளர் இடாப்புகள் திருத்தியமைக்க ஆவன செய்யப்பட்டன.

ஆதர் கிரிபித்துடன் தொடர்பு கொண்ட லொயிட் ஜோர்ஜ், கனடாவுக்

## திட்டம் வகுப்பதில் கருத்து வேறுபாடு

தானிய ஆநிலமாக அயர்நாடு விளங்கும் எனவும் அந்த மாநிலத்தின் மன்னராக ஆங்கில மன்னர் இருப்பார் எனவும் அம் மன்னருக்கு அயர் மகன் ஒவ்வொருவனும் விசுவாசமாக இருக்க வேண்டும் எனவும் கரையோரப் பாதுகாப்பு அனைத்தும் பிரித்தானியாவின் கையில் இருக்க வேண்டும் எனவும் வட அயர்நாடு

## இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

குப் போன்று, அயர்நாட்டுக்கும் ஆநிலப் பதம் அளிக்கத் தாம் விரும்புவதாக அறிவித்தார். இதற்குப் பதிலாக, பேராளர் குழுச் செயலாளர்களில் ஒருவரான ஏஸ்கின் சில்டேஸ், ஜோர்ஜ் கவன் டபி, றொபட் பார்ட்டன் ஆகியோரால் தயாரிக்கப்பட்ட நிருபம் ஆங்கிலேயருக்கு அனுப்பப்பட்டது.

அயர்நாட்டின் சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும்; பிரித்தானியப் பேரரசின் தலைமைச் சின்னமாகவே ஆங்கில மன்னரை அயர்நாடு கருத

பகுதியில் ஆட்சி புரியும் சேர் ஜேம்ஸ் கிறெயிக் ஒரு பெரும் போருக்குத் தயார் செய்யத் தொடங்கினார். படைக்குப் பல்லாயிரக் கணக்கானோரைத் திரட்டினார். இளைப்பாறிய இராணுவ அதிகாரிகளை மீண்டும் சேவைக்கு அழைத்தார். ஆனால் அவருடைய ஆட்சியின் கீழிருந்த இரண்டு மாவட்டங்களான திரோன், பேர்மனா ஆகியவற்றின் மாவட்ட சபைகள் சின் பீனின் அதிகாரத்திலுள்ள பாராளுமன்றத்திற்குத் தமது விசுவாசத்தைத் தெரிவித்தன. இதனால் ஆத்திர

ஏனைய பகுதியிலிருந்து பிரிய விரும்பினால் பிரியலாம் எனவும் உத்தேச உடன்படிக்கையில் இருந்தது.

இந்த உத்தேச உடன்படிக்கையைக் குடியதிபதி டி வேலரா, ஜோர்ஜ் கவன் டபி, றொபட் பார்ட்டன், ஏஸ்கின் சில்டேஸ், சுதல் புருகா, ஒஸ்ரின் ஸ்ரக் முதலியோர் எதிர்த்தனர். மைக்கேல் கொளின்ஸ், மன்னருக்கு விசுவாசம் தெரிவிக்கும் பகுதியைத் தவிர்ந்த ஏனைய பகுதியை ஆதரித்தார்.

## சிக்கலைக் கொடுக்கும் சிறுபான்மையினர் பிரச்சினை

---

### தமிழ் மறைத் தேர்வு பின் போடப்பட்டது

செப்ரம்பர்த் திங்கள் மூன்றாஞ் சனியன்று நடத்த இருந்த அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு அடுத்த ஆண்டு மார்ச்சுத் திங்கள் மூன்றாஞ் சனிக்கிழமை நடத்தப்படும். பல ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கேற்பவே தமிழ் மறைக் கழகம் தேர்வைப் பின்னர் நடத்த முடிவு செய்துள்ளது. தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் யாவரும் மார்ச்சு மாதத் தேர்வுக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர். இவர்கள் மீண்டும் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டியதில்லை எனவும், புதிதாக விண்ணப்பம் அனுப்ப விரும்புவோர் ஜனவரி முதலாந்திகதிக்கு முன் அனுப்பலாம் எனவும் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

---

### வன்னியர் வாய்மொழி

எமது மொழி உரிமைக்காகப் போராடுவது தேசத் துரோகம் என்றால்!......

எமது வாழ்விடத்தைக் காக்கப் போராடுவது தேசத் துரோகம் என்றால்!......

எமது சகோதரரின் பிரஜா உரிமைக்காகப் போராடுவது தேசத்துரோகம் என்றால்!......

சமஷ்டி ஆட்சி வேண்டுமென்று போராடுவது தேசத் துரோகம் என்றால்!...

இத்தனை தேசத்துரோகங்களையும் நான் நிறைவேற்றி அவற்றின் விளைவை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

# சுதந்திரன்

SUTANTIRAN

1963 செப்டம்பர் மாதம் 15-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## பகிஷ்கார இயக்கம்

மீண்டும் போர்ச் சங்கநாதம் கேட்கிறது. தமிழ் பேசும் மக்களின் நிலை ஒரு நெருக்கடியான கட்டத்துக்கு வந்துள்ளது. ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்கள்தொழிலை இழக்கும் அபாயமும், சிங்களத் திணிப்பும் மக்களின் மென்னியைப் பிடித்துள்ளன.

எனவே அக்டோபர் 1-ல் பகிஷ்கார இயக்கம் ஆரம்பிப்பதென தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. தமிழரசு இயக்கம் மக்கள் இயக்கம்—அதன் முடிவு மக்கள் முடிவு.

பகிஷ்கார முடிவைத் தமிழரசுத் தந்தை, பிரதமருக்கு அறிவித்துள்ளார். அறப்போரிலே இரகசியங்கள் கிடையா. வன்முறைகள் கிடையா. பொதுசனப் போரில் மறைமுகத் திட்டங்கள் எவ்வகையிலும் தேவைப்படா. பகிஷ்காரம் பற்றி ஆட்சியாளருக்கு முன் கூட்டியே அறிவித்ததிலிருந்தே அந்த உண்மை தெளிவாகிறது. காந்தீயப் போர் முறையும் அதுதானே! அறப்போருக்கு முன், ஆட்சியாளருக்கு அறிவிக்க காந்திஜி என்றுமே தவறியதில்லை.

1956-ல் தொடங்கிய சிங்களத் திணிப்பு அடுத்த மாதம் முதற்திகதி உச்சக்கட்டத்தை அடைகிறது. இது வெற்றி பெற்றால், இனமாற்ற வேலைகள் சிங்களத் தலைவர்களுக்குமிக எளிதாகிவிடும். சிங்களத் திணிப்பு தொடங்கிய காலந்தொட்டு அதனை எதிர்த்துப் போராடி வந்துள்ளனர் தமிழ் பேசும் மக்கள். எனவே திணிப்பு முழு உருவத்தில் அமுல் நடைபெறும் போது மக்களின் எதிர்ப்பும் அந்த அளவுக்கு வலுவடைய வேண்டும்.

உரிமைப் போரை பெருமளவில் தொடர்ந்து நடத்த வேண்டியவேளை அண்மிவிட்டது. அதன் முன்னோடியே பகிஷ்கார இய்க்கம்.

சிங்களத் திணிப்பை அமுல் நடத்துகிறவர்கள் சிங்கள அதிகாரிகளாயிருந்தாலும் சரி, தமிழ் அதிகாரிகளாயிருந்தாலும் சரி மக்கள் அவர்களைப் பகிஷ்கரித்துவிடுவர்.

அவர்களுக்குத் தமிழ் மண்ணிலே குடியிருக்க வீடு கிடைக்காது. அவர்களுக்கு உணவுப் பொருட்களையோ, துணிமணிகளையோ, இதர பொருட்களையோ விற்க வியாபாரிகள் மறுத்துவிடுவர். சலவை, சலூன், ஹோட்டல் தொழிலாளரும் அவர்களைப் புறக்கணிப்பர். வீதியிலும், ஆலயத்திலும், பஸ், புகைவண்டிகளிலும் மக்களால் ஒதுக்கப்படுவர். எவரும் எந்தச் சமயத்திலும் அவர்களுடன் பேசவோ, சிரிக்கவோ மாட்டார்கள். இது போன்ற இதர எல்லா வகைகளிலும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுவார்கள். சுருங்கக் கூறின் அவர்கள் "தீண்டத்தகாதவர்களா"க் கப்படுவார்கள்.

அயர்லாந்து மக்கள் ஓர் எட்டப்பரை எப்படியெல்லாம் பகிஷ்கரித்து வெற்றி பெற்றனர் என்பதைத் திரு. நவரத்தினம் பா. உ. இந்த இதழில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் தெளிவு படுத்தியுள்ளார். ஐரிஷ் மக்களின் பகிஷ்காரம் நமக்கு ஒரு வழிகாட்டி!

இந்த இயக்கம் சிங்களப் பொது மக்களுக்கு மாறான நடவடிக்கையல்ல என்பதைக் கட்சி தெளிவு படுத்தியுள்ளது. இது எவ்வகையிலும் அவர்களுக்கு ஆத்திரமூட்டும் செயலுமல்ல. சிங்களத் திணிப்பை அமுல் செய்யக் கருவியாக இருப்பவர்களைப் பகிஷ்கரித்தல் சிங்களத் திணிப்பைத் தடுத்து நிறுத்துவதே!

இயக்கத்துக்கு மக்களின் ஆதரவு பெருமளவு திரட்டப்பட்டாலும் கூட, ஐந்தாம் படையினரும், எட்டப்பர் கும்பலும் பகிஷ்கார இயக்கத்தை முறியடிக்க பல்வேறு உபாயங்களைக் கையாளக் கூடும். அவர்களின் உபாயங்களைச் சிதறடிக்கச் சாத்வீக மறியலில் ஓரளவு ஈடுபடவேண்டிய நிர்ப்பந்த நிலைமையும் மக்களுக்கு ஏற்படலாம்.

பகிஷ்காரமும் மறியலும் சாத்விகப் போரின் இரு அம்சங்கள். இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பகிஷ்காரத்தின் வெற்றிக்கு மறியல் செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படக்கூடும். பகிஷ்காரத்தைப் போலவே மறியலும் முற்றிலும் சாத்வீகமானவை — சட்டபூர்வமானவை.

பாரத நாட்டிலே அன்னியத் துணிக் கடை, கள்ளுக் கடை மறியல் இயக்கத்தின் போது பகிஷ்காரமும், மறியலும் இணைந்தே நடைபெற்றன. (இக் கடைகளுக்கு முன்னால் 100 கெஜ தூரத்தற்கு அப்பால நின்று மறியல் செய்வது சட்டபூர்வமானதென பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அறிவித்தது)

சொந்த இனத்தவரையே பகிஷ்கரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறதே என்று யாரும் எண்ணவே வேண்டாம். விடுதலைப் போராட்டங்களிலே இதற்கெல்லாம் நிச்சயம் இடம் கிடையாது.

உறவினர்களைச் சிலர் பகிஷ்கரிக்கலாம். மகன் தந்தையையும், சகோதரி சகோதரனையும் பகிஷ்கரிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம் தமிழினத்தின் அழிவைத் தடுக்க வேண்டுமானால், உறவு முறைகள் அதற்குத் தடையாக இருக்கவே கூடாது.

சிங்களத் திணிப்பை அமுல் நடத்தும் ஓர் ஊழியரைப் பகிஷ்கரித்தல் உண்மையில் தனிப்பட்ட முறையில் அந்த நபருக்கு எதிரான செயலன்று சிங்களத் திணிப்பை நடத்தி, தமிழ் மொழியையும் தமிழ் பேசும் இனத்தையும் அழிக்க அவர் கருவியாயிருப்பதால், சிங்களத் திணிப்பு அமுலைத் தடுப்பதற்காகவே அவர் பகிஷ்கரிக்கப்படுகிறார். இதில் உறவு முறைக்கு இடம் ஏது?

பகிஷ்கார இயக்கத்திலே பெண்மணிகளுக்குப் பெரும் பங்கு உண்டு. அவர்கள் உறவு முறைப் பிரச்சினை பகிஷ்கார இயக்கத்திலே தலைகாட்டாது பெருமளவு தடுக்க முடியும்.

பகிஷ்கார இயக்கத்திலே பலாத்காரத்துக்கு இம்மியும் இடம் கிடையாது. மக்கள் அனைவரும் காந்திகளோ, செல்வநாயகங்களோ அல்லர் என்பது உண்மையே. கடந்த சத்தியாக்கிரகத்தின்போது ஒரு சிறு வன்முறைச் சம்பவம் கூட நடைபெறவில்லை என்பதும் உண்மையே. ஆயினும் சிங்களத் திணிப்பை நடத்துகிறவர்கள் மீது ஏற்படும் அதிருப்தியிலோ விடுதலை வேட்கையின் வேகத்திலோ ஒரு மூலையில் ஏதோ ஒரு சின்னஞ் சிறு பலாத்காரச் சம்பவம் நடைபெறுவது அசாத்தியமன்று. அதற்காக ஆட்சியாளர் தம் கையாட்களைக் கொண்டு மக்களுக்கு ஆத்திரமூட்டவும் கூடும்.

அப்படி ஒரு சம்பவம் ஏற்படின், தமிழ் பேசும் மக்களின் அரசியல் விரோதிகளும் ஆட்சியாளரும் அதனைப் பிரமாதப்படுத்துவார்கள். அதைக் கொண்டு நம் புனித இயக்கத்துக்கு மாசு கற்பிக்க முனைவார்கள். எனவே இயக்கம் நடைபெறும் போது எந்த விடயத்திலும், எந்த நேரத்திலும் சிறிதளவு பலாத்காரச் சம்பவம்கூட நிகழாதிருக்க கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டியது கட்சியினதும் கட்சித் தலைமையினதும் கடமையாகும். (பொலீஸ் நிலையமொன்றுக்கு ஒருசிலர் தீ மூட்டினார்கள் என்பதற்காக காந்தி பாரதத்தின் முதல் ஒத்துழையாமை இயக்கத்தையே நிறுத்தி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது)

பகிஷ்கார இயக்கம் நம் மத்தியிலுள்ள எட்டப்பர் கூட்டத்துக்கும் சரியான படிப்பினையாக இருத்தல் வேண்டும். "சொந்த இனத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள் மக்களால் பகிஷ்கரிக்கப்படுவர்" என்பதை அவர்களுக்கு உணர்த்த வேணடும்.

பகிஷ்கார இயக்கம் மக்கள் இயக்கம். அது வெற்றி பெற தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த ஆதரவு வேண்டும். தங்கள் மீது பாய்ந்து வரும் சிங்களத் திணிப்பின் பயக்கர விளைவுகளை உணர்ந்து, மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு துணிவுடன் முன்னேற வேண்டிய வேளை வந்து விட்டது. தாமதத்துக்கு இனி இடமில்லை.

# பகிஷ்கார இயக்கத்திற்கு அயர்லாந்துப் போராட்டம் காட்டும் வழி

## காட்டிக் கொடுப்பவர்களும் பகிஷ்கரிக்கப்படுவார்கள்

பகிஷ்காரம், பூரண பகிஷ்காரம். ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் பலாத்கார வழிகளைப் பின்பற்றிப் போராடிக்கொண்டிருந்த ஐரிஷ் மக்களே இந்தப் "பகிஷ்காரம்" என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தினார்கள் என்றால், அஹிம்சையையும் சத்தியாக்கிரக முறையையும் கையாண்டு எதிர்ப்பியக்கத்தை நடத்தி வரும் நாம் இந்த ஆயுதத்தை இன்னும் பன்முறை அதி தீவிரமாகக் கையாள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆகவேதான், ஒக்டோபர் முதலாந் திகதி தொடக்கம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவலகங்களைச் சிங்கள மயமாக்கும் கருத்துடன் சிங்களத்தில் கருமமாற்ற வல்ல சிங்கள உத்தியோகஸ்தர்கள் அல்லது சிங்களம் கற்ற தமிழ் உத்தியோகஸ்தர்கள் அனுப்பப்படவிருக்கிறார்கள் என்ற அரசாங்கத் திட்டத்தைத் தோல்வியடையச் செய்ய வேண்டுமென்றும் இந்தப் "பகிஷ்காரம்" என்ற சாத்விக ஆயுதத்தைப் பூரணமாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுத் தமிழரசுக் கட்சி, தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.



திரு. வ. நவரத்தினம்
பாராளுமன்ற உறுப்பினர்

பகிஷ்கார இயக்கம் எத்தன்மையது, நடைமுறையில் அதன் கருத்தென்ன, தொண்டர்கள் நடத்துவதா அல்லது பொது மக்கள் ஈடுபடுவதா என்பன போன்ற கேள்விகள் விளக்கங் கேட்டு எழுகின்றன.

### ஐரிஷ் வரலாறு

அயர்லாந்திலே கப்டன் போய்க்கட் (Captain Boycott) என்ற ஒருவர் ஐரிஷ் தேச பக்தர்கள் நடத்தி வந்த சுதந்திரப் போராட்டத்துக்கு மாறாக ஆங்கிலேயர்களோடு ஒத்துழைத்து ஆங்கிலேயர்களுக்கு உடந்தையாக இருந்து வந்தார். இந்த ஒருவரோடு நிற்குமாயிருந்தால் ஐரிஷ் தேச பக்தர்கள் இவரைச் சுட்டுத் தள்ளியிருப்பார்கள். ஆனால் இவரைப் போன்ற பலர் ஐரிஷ் மக்களிடையே இருப்பார்களானால் எல்லோரையும் கொன்று தீர்க்க நேரிடும். தம்மினத்தவர்களையே அழிக்கும் பணியை அவர்கள் விரும்பவில்லை.

ஆதலினால் ஒரு நவீன முறையைக் கையாண்டார்கள். கப்டன் போய்க்கட் அன்றாடம் தனக்குத் தேவையான உணவுப் பொருட்களையோ ஆடை அணி முதலிய சாமான்களையோ வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றால் கடைக்காரன் சாமான் விற்க மறுத்துவிடுவான்.

குடியிருக்க வீடு வாடகைக்கு அமர்த்த எந்த இடம் சென்றாலும் வீடு கொடுக்க மறுத்துவிடுவார்கள்.

### உண்ண உணவின்றி......

உணவருந்த அல்லது தாகம் தீர்க்க ஹோட்டலுக்குச் சென்று மேசையருகில் ஒரு நாள் முழுக்கக் காத்திருந்தாலும் ஒரு சிப்பந்தி தன்னும் அவரை ஏன் வந்தாய் என்று கூடக் கேட்க மாட்டான்.

க்ஷவரக்கடைக்களுக்குச் சென்றால் அவருக்குச் சேவை செய்ய மறுத்து விடுவார்கள்.

சலவைத் தொழில் செய்ய மறுத்து விடுவார்கள்.

அவருடைய கமங்களில் வேலை செய்ய மறுத்துவிடுவார்கள். கோவிலுக்குச் சென்றால் அவரை ஒருவரும் கண்ணெடுத்துப் பார்க்கவும் மாட்டார்கள். பேசவும் மாட்டார்கள். மத குரு கூட கொமிசாரிக்க மறுத்துவிடுவார்.

நன்மை தீமைக்கு அவர் வீட்டுக்கு எவரும் போக மாட்டார்கள்.

### சொந்த ஊரில் நடைப்பிணமாக நடமாடினார்

தெருவில் நடக்கும் பொழுது அவரைக் கண்டால் எல்லோரும் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொள்வார்கள்.

சுருங்கச் சொன்னால் மனித சஞ்சாரமற்ற சந்திரபிம்பப் பாலைவனத்தில் நடைப்பிணம் போல் நடமாடினார், அதிலும் தன் சொந்த ஊரில்.

நரக வேதனையைக் கூடச் சகித்துக் கொள்ளலாம். ஆனால் இந்த வேதனை அதனையும் விஞ்சியதாயிருந்தது. வேதனை பொறுக்க முடியாமல் நொந்து நொந்து உயிர்நீத்தார். பகிஷ்காரம் என்ற பொருள்படும் ஆங்கிலச் சொல் "Boycott" இவரிலிருந்தே உற்பத்தியாகியது.

இது மிகவும் கடுமையான போர் முறை என்பது சொல்லாமலே விளங்கும். இலேசாகச் சொல்லிவிடலாம். ஆனால் நடைமுறையில் பல கஷ்டங்கள் உள. முதலாவது வடக்குக் கிழக்கு மாகாண மக்கள் நூற்றுக்கு நூறு ஒற்றுமைப் பட வேண்டும்.

ஒரு சிலர் தானும் ஒத்துழைக்காவிட்டால் அவ்வளவுக்குப் பகிஷ்கார இயக்கம் பலவீனப்படும்.

மற்றொன்று, சிங்களம் படித்துச் சிங்களத்திலே கட

(9ம் பக்கம் பார்க்க)

# மாணவ ஆசிரியர் பரீட்சை
# தமிழ் மொழி மூலமும் நடைபெறும்

## பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு இம்மாத முடிவிற்குள் நியமனம்

### தமிழரசார் முயற்சி வெற்றி

சிங்கள மொழி மூலம் மட்டுமே மாணவ ஆசிரியர்களைத் தெரிவு செய்வது என்ற கல்வி இலாகாவின் முடிவு அநீதியானது என்பதை தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் வவுனியா, உடுப்பிட்டிப் பிரதிநிதிகளும் கல்வி அமைச்சருக்கு எடுத்துக் கூறியதன் பேரில் தமிழ் மொழி மூலமும் மாணவ ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு கல்வி இலாகா நடவடிக்கை எடுக்கும் என்று தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி மூலம் மாணவ ஆசிரியர் பரீட்சைக்குத் தோன்றுபவர்கள் ஜீ. ஸி. ஈ. பரீட்சையில் ஆங்கிலம் 'அ' பாடத் திட்டத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அல்லது 'ஆ' பாடத் திட்டத்தில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும். இவர்கள் தமிழ் பாடசாலைகளில் ஆங்கில உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள். முஸ்லிம் மாணவர்கள் தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாயினும் அவர்களைப் பொறுத்த மட்டில் இவ்வித கட்டுப்பாடுகள் இருக்கமாட்டா.

#### பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

கடந்த பல ஆண்டுகளாக வேலையற்றிருக்கும் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கும் இம் மாத முடிவிற்குள் நியமனம் வழங்குவதற்கு கல்வி அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் பலர் பல ஆண்டுகளாக வேலையற்றிருக்கும் நிலையை தமிழ் அரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் காலத்துக்குக் காலம் கல்வி மந்திரிக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களின் விடா முயற்சி காரணமாக, அவர்கள் முயற்சி பலனைக் கொடுத்துள்ளது.

இம்மாத முடிவிற்குள் சகல பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைத்து விட வேண்டும் என்று கல்வி மந்திரி தமது இலாகாவிற்கு உத்தரவு கொடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

#### வன்னியர் வாய்மொழி

சிறுபான்மையினர் முக்கியமாக இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் கர்ப்பத் தடை முறையை அநுசரிப்பதை நான் முற்றாக எதிர்க்கிறேன்.

## அமரர் வன்னியசிங்கம் நினைவு விழா

கொழும்பு, செப். 11

கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் நினைவு விழா எதிர்வரும் 21ம் திகதி சனிக்கிழமை மாலை கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகாநந்த மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட அனேக பாராளுமன்ற உறுப்பினர்களும் தொழிற் சங்கப் பிரமுகர்களும் சர்வகலாசாலை மாணவர்களும் உரை நிகழ்த்துவார்கள்.

## தீவிரமான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதிலும் எதிர்வரும் நேரடி நடவடிக்கைக்கான திட்டங்களையிட்டு ஒழுங்குகளைச் செய்வதிலும் அவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய இடங்களிலுமுள்ள கிளை அலுவலகங்கள் தீவிரமாகச் செயல் புரிய ஆரம்பித்துள்ளன. இம் மாதம் 15ம் திகதி முதல் ஆங்காங்கே பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது.

கொழும்புக் கிளை, தான் தயாரிக்கும் திட்டங்கள் பற்றிக் கட்சி மேலிடத்துக்கு ஆலோசனைகள் கூறுமேயன்றி, கொழும்பிலோ வடகிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களிலோ நடவடிக்கைகள் எடுக்க எதுவும் செய்யமாட்டாது என்று பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### அரசாங்கத்தின் நிலை

தமிழரசுக் கட்சியின் பகிஷ்கரிப்பு சம்பந்தமாக அரசாங்க வட்டாரங்களில் சலசலப்புத் தென்பட்டுள்ளதாக நம்பகமாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. பகிஷ்கரிப்பு இயக்கம் எத்தன்மையதாக விருக்கும் என்பதை அறிய முடியாது பொலீசார் தவிக்கின்றனர். இரகசியப் பொலீசார் பலர் வேவு பார்த்தும் கூட புறக்கணிப்பு இயக்கம் எவ்வாறு இயங்கும் என்பதை அறிய முடியவில்லையாம். இயக்கம் ஆரம்பமாகி நடைபெறும் வரை பொறுமையாகக் கவனித்திருக்கும்படியும், நடைமுறைகளை ஆராய்ந்தறிந்த பின்னர் எவ்வாறு நடவடிக்கை எடுக்கலாம் என்பதை ஆராயலாம் என்றும் அரசாங்க மேலிடம் பொலீசாருக்கு அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## 1-10-63ல் பகிஷ்கரிப்பு இயக்கம் ஆரம்பமாகும்

### தமிழரசு செயற்குழுத் தீர்மானங்கள்

தமிழரசுக் கட்சி நடத்தவிருக்கும் நேரடி நடவடிக்கைக்கும் அதன் முன்னோடியாகப் போகும் சிங்களத்தை அமுல் செய்யும் ஊழியரைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்துக்கும் வேண்டிய ஒழுங்குகள் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டன. ஒக்டோபர் மாதம் முதல் தேதியன்று புறக்கணிப்பு இயக்கம் யாழ்ப்பாணம் — மாவட்டத்தில் தொடக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருகோணமலை உப தேர்தலில் கட்சியின் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காக திரு. சி. மூ. இராசமாணிக்கம், டாக்டர் இ. மு. வி. நாகநாதன், திரு செ. இராசதுரை, ஜனாப் எம். இ. எச். முகம்மதலி, திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரைக் கொண்ட உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு விரைவில் முன்னறிவித்தலுடன் திருகோணமலையில் கூடி, மக்களுடைய அபிப்பிராயத்தை ஆராய்ந்தறிந்த பின் வேட்பாளரைத் தெரிவு செய்யும்.

பண்டாரவளையில் கடந்த மாதம் 25ம் திகதி தொடக்கம் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தைப் பற்றி நேரில் சென்று விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இருவரைக் கொண்ட உபகுழு நியமிக்கப்பட்டிருக்கிறது. இக்குழு தமது விசாரணை முடிவுகளை உடனடியாக பாராளுமன்றத்திலும், அரசாங்கத்திடமும் சமர்ப்பித்து ஆவன செய்ய வேண்டுமென்றும் செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

## பகிஷ்கார இயக்கத்திற்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாற்றச் சம்மதங் கொடுத்துவரும் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கெதிராக இயக்கம் நடத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படலாம். இதைத் தவிர்க்க முடியாதா? விடை, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கையில்தான் இருக்கிறது.

#### வெந்த புண்ணில் வேல்

யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோரிலிருந்து ஒரு தமிழ் போஸ்ட்மாஸ்டர் அனலைதீவு போஸ்ட்மாஸ்டருக்கு அனுப்பும் ஒரு மனி ஆர்டரை — அதுவும் ஒரு தமிழர் இன்னுமொரு தமிழருக்கு அனுப்பும் பணத்துக்காக-சிங்களத்தில் எழுத வேண்டிய நிலை உருவாகிக் கொண்டு வருகிறது என்பதை நினைத்தால் யார்தான் சகிக்க முடியும்.

எந்த உத்தியோகத்தனும் இதற்கு உடந்தையாக இருக்க முடியாது என்பதே எங்கள் நம்பிக்கை. இருந்தால் அதனால் ஏற்படும் விளைவுகளையும் அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்னுமொன்று, எந்த நாட்டிலும், எந்த சமூகத்திலும், எந்த யுகத்திலும் மக்களிடையே பெரும்பான்மையானவர்களோடு ஒத்துச் செல்லாமல் புறம்பாக நின்று எதிரிக்குக் காட்டிக் கொடுக்கும் ஒரு சிலர் இருக்கவே செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நமது தமிழ் பேசும் சமூகத்திடையேயும் இருக்கிறார்கள். இவர்கள் பகிஷ்கார இயக்கத்தோடு ஒத்துழைக்காமல், தனிப்பட்ட சலுகைகள் பெறுவதற்காகவும் வருவாய்க்காகவும் பட்டம் பதவிகளுக்காகவும் அரசாங்கத்தின் தனிச் சிங்களக் கொள்கையை அமுல் நடத்தும் உத்தியோகஸ்தர்களுக்கு உடந்தையாக விருந்து உதவி புரிவார்கள்.

இவர்களையும் பொது மக்கள் தயவு தாட்சண்யமின்றி இனமுறை நட்புமுறைகள் பாராட்டாது பகிஷ்கரிக்க வேண்டும். அப்பொழுதுதான் பகிஷ்கார இயக்கம் நாம் விரும்பும் பயனை அளிக்கும்.

#### இனக் கொலை

இன்று இலங்கையில் சிங்கள ஏகாதிபத்தியம் கையாண்டு வரும் கொள்கைகளுக்கு ஒரேயொரு இலட்சியம்தான் உண்டு. அதாவது தமிழ் பேசும் மக்களை இனமாற்றம் செய்வது. இது வெறும் பாஷைப் பிரச்சினையல்ல. ஒரு இனத்தையே அழிக்கும் செயல். சர்வதேச சட்ட பரிபாஷையில் அதை (Genocide) "இனக் கொலை" என்றழைப்பார்கள். நமது கண்முன்னே இப்படியான கருத்தோடு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வரும் பொழுது நாம் பார்த்துக் கொண்டு வாளாவிருந்தால் நமது இளஞ் சந்ததிக்கும் பிற் சந்ததிக்கும் நாமிழைக்கும் பெரும் துரோகம் என்றே சொல்ல வேண்டும்.

## இ. போ. ச. வில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களப் பயிற்சி பெறும் வரையில் பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

சிங்களச் சுற்று நிருபம் அனுப்பப்பட்ட சென்ற வாரத்திலேயே பதவி உயர்வு செய்யப்பட்ட இ. போ. ச. 'கணக்காளர்' ஒருவர் உடனடியாக அந்தப் பதவியிலிருந்து இறக்கப்பட்டிருக்கிறார். இந்த உத்தியோகத்தர் ஒரு தமிழர். இது போன்ற அட்டூழியங்கள் தொடர்ந்து நடைபெற இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.





சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்.

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது,

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

# எல்லாம் தமிழென வாழ்ந்த ஏந்தல்

## அண்ணல் வன்னியசிங்கம்

## தமிழ் வாழ தமிழியக்கம் கண்ட மேலோன்

## அவர் கனவை நனவாக்க வாரீர்

மறைந்த தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் தமிழ்ப் புலமையும் சீரிய பண்பும் நிறைந்த குடும்பத்திலே பிறந்தவர். தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் வாழ்ந்தவர். எனவே அவர் வாழ்வு முழுவதும் தமிழ் ஒலித்துக்கொண்டே இருந்தது.

### ஊதியம் மறப்பினும் ஊழியம் மறவாத செம்மல்

இக் காலத்தில் உள்ள ஏனைய தலைவர்களுக்கும் அவருக்கும் அடிப்படையில் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. தன் வாழ்க்கை பூராவையும் தமிழின் நன்மைக்காகத் திறை கொடுத்தவர் அவர். ஊதியம் மறப்பினும் ஊழியம் மறவாத சீரிய செம்மல் அவர். அவர் மறைவு குறித்துப் பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட இரங்கல் உரைகளில் ஒரு சதமேனும் மிச்சம் பிடிக்காது, கொண்ட இலட்சியத்துக்கே உடலும் பொருளும் கொடுத்து ஈற்றிலே அதன் விளைவாக உயிரையும் கொடுத்த மா வீரன் என்ற கருத்துக்களை எல்லாக் கட்சிகளினதும் தலைவர்கள் எடுத்துக் கூறினர்கள். அவரைப் போல் இந்த மாதிரி இலட்சியத்துக்காக உழைப்பவர்கள் இன்று எத்தனை பேர்? அவர் கட்டி வளர்த்த உறுதியும் விதைத்த கருத்துக்களும் தான் இற்றைவரை தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

### மக்கள் இயக்கம்

1956ம் ஆண்டு இந்த நாட்டில் தனிச் சிங்கள மசோதாவுக்கு எதிராக நடத்திய சத்தியாக்கிரகத்தின் போது, ஏற்கனவே உழைத்துழைத்து இளைத்துப் போன உடலில் வாங்கி விட்ட அடியும் உதையும் தாம் அவரது இரத்தக் கொதிப்புக்குக் காரணமாக விருந்தன. தனிச் சிங்கள மசோதா சட்டமாகியதும், தமிழ் மொழி நலிவடையலாம் என்ற கருத்துக் கொண்டு தமிழின் நிலையைக் காக்க அவர் எடுத்த நடவடிக்கைகளில் "எல்லாம் தமிழ் இயக்கம்" ஒன்று. இந்த இயக்கத்துக்கு அரசியல் சார்பு கற்பிக்க ஒருசிலர்

**ஆ. தேவராசன்**

முற்பட்டாலும், உண்மையில், அரசியல் வரம்புக்குக் கட்டுப்பட்டதல்ல இந்த இயக்கம். இது தமிழ் பேசும் ஒவ்வொரு தனி மனிதனும் பங்கு கொள்ளக் கூடிய, பங்கு கொள்ள வேண்டிய இயக்கம்.

### வேதனை அடையும்

மக்கள் பாவிப்பதால்தான் ஒரு மொழி உயிர் பெறுகின்றது. பாவிப்பு இல்லாத மொழி செத்த மொழி. எந்த அளவுக்கு ஒரு மொழியை மக்கள் பாவிக்கிறார்களோ அந்த அளவுக்கு அந்த மொழியின் வளமும் ஆற்றலும் நிலையும் உயரும். பாவிக்காது விட்டுவிட்டால் எந்த மொழியும் மெல்ல மெல்லச் சாகும். அதுவும் அரசியல் புறக்கணிப்பும் சேர்ந்துவிட்டால் இந்தச் சாவு சற்று துரிதப்படுத்தப் பட்டுவிடும். இது மொழிகள் வரலாறு எடுத்துச் சொல்லும் உண்மைகள். இந்த நாட்டிலே வாழும் இரண்டு கோடித் தமிழ் மக்களும் தங்கள் வாழ்வின் துறை அனைத்திலும் தமிழ் மொழியைப் பாவித்தால்—வீட்டில் உள்ள தொடர்பு முதல் அரசாங்கத்துடன் உள்ள தொடர்புவரை இடைப்பட்ட அத்தனை துறைகளிலும் தமிழைப் பாவித்தால், தமிழ் மொழியின் நிலை உயர்ந்து தமிழ் மொழியையோ தமிழ் அரசாங்க ஊழியர்களையோ புறக்கணிக்க முடியாத நிலை உருவாகும் என்பது அவர் கண்ட கனவு. அந்த நிலையில் தமிழ் மொழிக்கும் ஏற்ற இடம் கொடுத்தேயாக வேண்டி ஏற்படும் என்று அவர் நம்பினார். 1956ம் ஆண்டு முதல் அவர் மறையும் வரை எடுத்துரைத்து வந்த இந்தக் கருத்துரைகளுக்கு இன்று வரை சரியான மதிப்புக் கொடுக்காத மக்கள் நிலையையும், அந்த இயக்கத்தை மேலும் வளர்க்கத் திட்டமிட்ட முயற்சி எடுக்காதவர்களையும் அவர் ஆவி பார்க்கும்போது எவ்வளவு வேதனை அடையும்?

### தமிழியக்கத்தின் தந்தை

எல்லாம் தமிழில் செய்ய வேண்டும் என்று அன்று அவர் சொன்ன கருத்துக்களை அதற்கு முன்னரும் நோகாது எடுத்துக் கூறியவர்களும் உண்டு. ஆனால் அவை மக்கள் மத்தியில் ஊறித் திளைக்கக் கூடிய மாதிரி நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் திரு. வன்னியசிங்கம் இந்தக் கொள்கைகளை ஓரளவில் நாட்டிலே பரப்பி மக்களையும் சிந்திக்கத் தூண்டிச் செயற்பட வைத்தார். எனவே 'எல்லாம் தமிழ் இயக்கத்தை" இயக்க அடிப்படையில் உருவாக்கி ஓரளவில் வளர்த்து விட்ட பெருமை திரு. வன்னியசிங்கத்துக்கே உரித்தானது இந்தப் புகழில் யாரும் திருட்டுச் செய்துவிட முடியாது. அவர் கூறிய கருத்துக்களைத் தொடர்ந்து பல பாகங்களிலும் தனித் தனியான இயக்கங்கள் தோன்றின. ஆனல் அவற்றை ஒரே அணியில் திரட்டி, கூடிய வேகத்துடன் இயங்க வைப்பதற்குள் தமிழியக்கத் தந்தை மறைந்தார். அவரது முயற்சிகளைப் பற்றி 28—4—1957 'சுதந்திரன்' "தமிழியக்கம் ஓங்குக" என்ற தலைப்பில் தீட்டிய தலையங்கத்தை இங்கே தருவது பொருந்தும்—

"தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் சமீபகாலமாக எந்த மேடையில் பேசினலும் ஒரு முக்கிய விஷயத்தை வற்புறுத்தி வருகின்ருர். அதாவது, தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடனும், வர்த்தக ஸ்தாபனங்களுடனும் செய்யும் சகல கடிதப் போக்குவரத்துக்களையும் தமிழ் மொழியிலேயே செய்ய வேண்டுமென்று அவர் கூறி வருகின்ருர்........."

தமிழ் மொழி உரிமை இழந்து போகிறதே என்று நாம் பரிதவிக்கின்ருேம். சிங்களம் மட்டும் சட்டத்தினல் தமிழ் பேசும் மக்களுக்கு உத்தியோகம் கிடைக்க வழியில்லையே என்று கவலைப்படுகின்ருேம். உள்ள உரிமையை நாம் நிலை நாட்டத் தவறிவிட்டு, உத்தியோகம் கிடைப்பதற்கான வழிகளை உதறித் தள்ளிவிட்டுப் பிரலாபிப்பதாலும், கவலைப் படுவதாலும் என்ன பிரயோசனம் ஏற்படப் போகிறது?

### ஐயத்திற்கு இடமில்லை

இதிலிருந்து திரு. வன்னியசிங்கமே இந்த இயக்கத்தைக் கட்டி வளர்த்தவர் என்பதில் ஐயம் எழக் காரணம் இல்லை. அவர் மறைவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பும் அச்சுவேலியில் நடந்த திருக்குறள் மாநாட்டிலும் "எல்லாம் தமிழிலேயே செய்யுங்கள்' என்று முழக்கமிட்டுத்தான் மறைந்தார். இறுதி மூச்சுவரை அவர் கண்ட ஒரு நிதான வழி—தமிழ் மொழியைக் காப்பாற்றும் உறுதியான வழி இதுவாகும்.


### செயல் வீரன்

அவர் அடிக்கடி சொல்லுவார் "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று. அந்தக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதற்கேற்ப நடந்து காட்டினர் செயல் வீரனுக. இன்றுள்ள சூழ்நிலையில் அவரை நினைவு கூரும்போது இந்தத் தமிழியக்கத்துக்குப் புத்துயிரளித்து அதை மேலே வளர்க்க யாராவது முன்வருவார்களா? அவர் கண்ட இந்த ஒரு கனவையாவது நனவாக்குவதுதான் நாம் அவருக்குச் செய்யும் உண்மைக் கைம்மாருகும்.

---

### அர்ச் பிரான்சிஸ் சவேரியார் சன சமூக நிலையம்

புங்குடுதீவு அர்ச் பிரான்சிஸ் சவேரியார் சன சமூக கொழும்புக் கிளை ஸ்தாபனத்தின் 5வது வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கப் பணிமனையில் தற்காலிகத் தலைவர் திரு. ம. அருளப்பு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வானெலிக் கலைஞரும் பிரபல நாடக நடிகருமான திரு. உதயகுமார் அவர்கள் பேசுகையில் "பொதுநல எண்ணங் கொண்டவர்களும் சமுதாய மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சேவை செய்யக் கூடியவர்களுமே சமூக சேவைக்குத் தேவை" என்று வலியுறுத்திக் கூறினர். பின்பு புதுவருட உத்தியோகத்தர் தெரிவில், தற்காலிகத் தலைவர் திரு. ம. அருளப்பு அவர்களே நிரந்தரத் தலைவராகவும், திரு. நீ. அந்தோனிப் பெர்னந்து, உபதலைவராகவும், காரியதரிசியாக திரு. பி. மைக்கேல் அவர்களும், உப காரியதரிசியாகத் திரு. டே. அத்தனஸ் அவர்களும், தனதிகாரியாக திரு. தே. அந்தோனிப் பிள்ளை அவர்களும், உப தனதிகாரியாக திரு. ச. அன்ரனி அவர்களும், பரிசோதகராகத் திரு. மி. அமிர்தவாசகம் அவர்களும், தெரிந்தெடுக்கப்பட்டனர்.

**திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கை வாய்ந்த பம்ப்.**

**விங்கெட்**

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலகப் பிரசித்தி பெற்ற மெஸ்ஸெர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான உறுதி வாய்ந்த தண்ணீர் பம்ப்கள் அதிக காலம் மிகத் திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்ரோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உப உறுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கைஉருளைகளும் கிடைக்கும்.

1½" மொடல்- மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.

2" மொடல் -மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.

3" மொடல்- மணித்தியாலம் 4300-16809 கலன் இறைக்கிறது.

டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை.

ஆகக் கூடிய ஏற்றும் உயரம் 70 அடி.

ஆகக் கூடிய உறிஞ்சும் ஆழம் 25 அடி

விற்பனையாளர்கள்

சண்முகம் ஸ்டோர்ஸ்.
222, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எம். எல். நாகலிங்கம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.

ஏ. எஸ். அரசரத்தினம் அன் கோ.
11, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ.
வவுனியா.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

**கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்,**

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.]

தபாற் பெட்டி இல: 33. கொழும்பு-2.

காட்சி அறை : சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை. போன்: 79351.

ஈழத்து

# அரசியல் வானில் புதுவழி கண்ட செம்மல்

## தாழ்ந்த தமிழினத்தை தட்டி யெழுப்பிய பெரியார்

## வீர இளைஞர் சமுதாயத்திற்கு மங்காத ஒளி விளக்கு

### நமது மறைந்த தலைவர் அமரர் வன்னியசிங்கம்

'இந்திய விடுதலைப் போரில் சாவைத் தழுவுகின்ற ஒவ்வொரு சாதாரண தொண்டனும் தனக்கு விடுதலைபெற்ற இந்தியாவில் அழியாத நினைவுச் சின்னம் எழுப்பப்படும் என்ற எண்ணத்தோடு இறக்க வேண்டும்' என்று உலகப் பெரியார் உத்தமர் காந்தி ஒருமுறை சொன்னார்.

சுதந்திரத்துக்கும் விடுதலைக்கும் ஓயாது, ஒழியாது போரிட்டு உயிர் நீத்த வீரர்களை எந்த நாடு நினைவுகூர மறக்கிறதோ, அந்த நாடும் மக்களும் சுதந்திர வாழ்வுக்கு சிறிதும் அருகதை யற்றவர்கள் என்ற அரசியல் உண்மையை மனதில் இருத்தித்தான் காந்தியார் மேற்கண்டவாறு கூறியிருக்க வேண்டும்.

எனவே மறைந்த மாணிக்கம், விடுதலை வீரர் கோப்பாய்க் கோமான் வன்னியருக்கு ஆண்டு தோறும் நினைவு விழா எடுக்கிறோமென்றால், அஃது அவர் புகழ்பாடவல்ல. அவர் புகழ் குன்றிலிட்ட விளக்கு. அவர் பணி காலத்தை வென்றது. அவரை நினைவு கூருவதெல்லாம், வன்னியனார் எந்தத் தமிழ் மக்களது விடுதலைக்கு, சுதந்திரத்துக்கு உடல், பொருள், உயிர் அத்தனையையும் தத்தம் செய்தாரோ, அந்த விடுதலையை, சுதந்திரத்தையடைய எங்களை நாங்களே தயார் செய்து கொளள்வேயாகும்.

காலமென்னும் ஏட்டிலே தங்கள் வீர வரலாற்றின் சுவடுகளைப் பொறித்துப் போன மனிதருள் மாணிக்கங்களின் வாழ்வு எங்களது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையட்டும் என்ற கருத்துப்பட ஒரு ஆங்கிலக் கவிஞன் பாடிப் போயிருக்கிறான். மறைந்த எமது தலைவர் வன்னியனாரது வாழ்க்கை வரலாறும் எங்களுக்கு — விடுதலை விரும்பிகளுக்கு வழிகாட்டுவதாக அமைந்த ஒரு வாழ்வாகும்.

மறைந்த தலைவர் வன்னியனார் காலமெல்லாம் தமிழ் உரிமை, தமிழர் விடுதலை என்பதே பேச்சும் மூச்சுமாக வாழ்ந்தவர். இந்தப் பேச்சினாலேயே அவர் மூச்சும் நின்றது. உண்மை; இது வெறும் புகழ்ச்சியல்ல.

தலைவர் வன்னியனாரது ஆற்றலை, அறிவை, தியாகத்தை, தொண்டை சரிவர எடைபோட வேண்டுமென்றால், தமிழ் மக்களின் ஆரம்ப அரசியல் வரலாறு தெரிய வேண்டும். ஏனென்றால் வன்னியனாரைப் பொறுத்தளவில், 1947ம் ஆண்டு தொடக்கம் அவருக்கென ஒரு தனிப்பட்ட வரலாறு கிடையாது. அவரது வாழ்வு அவ்வளவு தூரம் தமிழ் மக்களது அரசியல் வாழ்வோடு பின்னிப் பிணைந்து கிடந்தது.

இன்றைய அரசியல் நிலைக்கும, பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முந்தியிருந்த அரசியல் நிலைக்கும் பலத்த வேறுபாடுகள் இருந்தன.

அன்று தமிழ் மக்கள் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் நிலை.

அன்று அரசியல் உண்மை நேர்மைக்கு இடமில்லாதிருந்தது. அதுமட்டுமல்ல; அரசியல் என்றால் அது மிகக் குறுகிய ஒரு எல்லைக்குள், சுருங்கிய கருத்தை மட்டும் கொண்டிருந்தது.

தேர்தலுக்கு நின்று பாராளுமன்றம் புகுந்து அழகான ஆங்கிலத்தில கேட்பவர் வியக்கும் வண்ணம் மணித்தியாலக் கணக்கில் பேசுவது அரசியல் என்று கருதப்பட்டது.

அரசியல் பணம் படைத்த ஒருசிலரின் சொந்த லாபத்துக்கும், முன்னேற்றத்திற்கும் உபயோகப்படுத்தப்பட்டது. மக்கள் அந்த முயற்சிக்கு வெறும் ஏணிகளாகப் பயன்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையை முற்றிலும் மாற்றி, அரசியலில் நேர்மைக்கு, நீதிக்கு, நியாயத்துக்கு, கண்ணியத்துக்கு இடமிருக்கிறது; உண்மை வெல்லும், பொய் தோற்கும் என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமை, சிறப்பு இருவரைச் சேரும். ஒருவர் தந்தை செல்வநாயகம்; மற்றவர் தலைவர் வன்னியர்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் சரிபாதித் தொகையினரான மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறிக்க சதித்திட்டம் தீட்டி, பெரிய

**தாமரைபணுளன்**

சேனநாயக்காவால் நிறைவேற்றப்பட்டபொழுது, அந்த சதி நிறைவேற உடந்தையாக இருந்தவர் திரு. பொன்னம்பலம். எந்த மலைநாட்டு மக்களின் உரிமைக்குப் போர்க் கொடி உயர்த்துவேன் என்று திருவாளர் பொன்னம்பலம் முழங்கினாரோ, அதே பொன்னம்பலம் அவர்களை ஒரு மந்திரிப் பதவிக்காகக் காட்டிக் கொடுத்தார்.

இந்த அரசியல் துரோகமே 1949ல் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தோற்றத்துக்குக் காரணமாக இருந்தது.

அன்றைய அரசியல் சூழ்நிலையில் திரு. பொன்னம்பலத்தைப் பகைப்பதென்பதோ, எதிர்ப்பதென்பதோ அரசியல் தற்கொலைக்கு சமமானதாகும். திருவாளர்கள் அ. மகாதேவா, சு. நடேசன் போன்ற காக்கை வன்னியர்களை அரசியல் உலகத்திலிருந்து துரத்தியடித்துவிட்டுதமிழர்களின் ஒரே தலைவனாக, முடிசூடா மன்னனாக, ஏகச் சக்கராதிபதியாக திரு. பொன்னம்பலம் அரசோச்சிய காலமது. திரு. பொன்னம்பலத்தின் சுட்டு விரலின் அசைவில் அவரது அரசியல் எதிரிகளின் வாழ்வு அஸ்தமனமாகிவிடும் என்றிருந்த நேரம்.

ஆனால் தலைவர் வன்னியனார் இந்த அரசியல் தற்கொலை முயற்சியில் இறங்கி திரு. பொன்னம்பலத்தின் அரசியல் வாழ்வுக்கு முடிவு கட்டினார்.

இங்கேதான் தலைவர் வன்னியனாரின் ஆற்றல், அறிவு, துணிவு, தொண்டு, பெருமை, சிறப்பு—இவை பளிச்சிடுகின்றன.

அரசியல் ஒரு சிலருடைய பொழுது போக்காக இருந்த நிலைமாறி, அது வலுவான மக்கள் சக்தியாகப் பரிணமித்தது.

அதுமட்டுமல்ல; தமிழ் பேசும் இனத்தை வாட்டி வதைக்கும் நோய் இன்னதென்றறிந்து, அதற்குத் தகுந்த மருந்தும் சொல்லப்பட்டது. அந்த நோய் ஒற்றையாட்சி. அதற்கு மருந்து இணையாட்சி. மருத்துவர் தலைவர் வன்னியர்.

ஆனால் இந்த அரசியல் மாற்றம், புரட்சி, இணையாட்சித் தத்துவம் மக்கள் மத்தியில் சுலபத்தில் வேரூன்றி விடவில்லை.

அதற்குத் தலைவர் வன்னியசிங்கம், இரவு பகல் பாராது, காட்டிலும், மேட்டிலும், சுகம் துறந்து, தூக்கம் இழந்து, சொல்லடியும் கல்லடியும் பட்டு, ஆடி, ஓடி, அயராது, சோராது, துவளாது உழைத்தார். அந்தப் பணியிலேயே அவரது உயிரையும் அர்ப்பணித்தார்.

சுருங்கச் சொன்னால், தமிழரசு என்ற பயிர் முளைப்பதற்கு அவர் வாழ்வு எருவாக்கப்பட்டது.

இந்த அரசியல் பின்னணியை, வரலாற்றை, இந்தத் தலைமுறை தெளிவாக புரிந்து எடை போட்டுப் வைத்திருக்கவேண்டும். அப்போதுதான் தலைவர் வன்னியனார் காண விரும்பிய தமிழரசை இந்நாட்டில் நிலை நிறுத்துவதற்கு நம்மை நாமே தயார் செய்து கொண்டவர்களாவோம். எந்த நாட்டு இளைஞர்களது உள்ளம் எஃகு போல இருக்கிறதோ அந்த நாட்டுக்கு வாள் தேவையில்லை. தலைவர் வன்னியரின் வாழ்வு தரும் பாடம் இதுதான்.

## அ. எ. வி. சங்கம் அனுதாபம்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் சென்ற 8-9-63-ல் (ஞாயிறு) சங்கப் பணிமனையில் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் காலஞ்சென்ற திருமலை தந்த மாமலை திரு. ந. இ. இராஜவரோதயத்தின் நினைவாக இரண்டு நிமிட நேரம் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது. சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் சங்கம் அரசாங்கத்தின் மீது தொடுத்துள்ள வழக்குகளின் நிலை பற்றி எடுத்துக் கூறினார். தமிழ் பேசும் அரசாங்கத் தொழிலாளர் சம்மேளனம் அமைப்பதற்கும் அதில் சங்கம் உறுப்புரிமை வகிப்பதற்கும் செயற்குழு அனுமதி வழங்கியது.

ஈற்றில் திருமலை பாராளுமன்ற உறுப்பினரின் பிரிவுக்கு வருத்தம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் பிரதிகள் திரு. இராஜவரோதயத்தின் குடும்பத்திற்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

# அறவழி அரசியல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் மட்டும் நம்மை அடைத்து வைக்க எடுக்கப்படும் திட்டம் என்றும் பலர் குறை கூறுவதை அறிந்த வன்னியசிங்கனார் அன்று கூறிய விளக்கத்தை நாம் நினைவு கூருவது வேண்டற்பாலது.

"சமஷ்டி ஆட்சி மூலமே தமிழ் பேசும் மக்கள் தம் மொழியையும் பாரம்பரியமாகத் தமக்குரிமையான பிரதேசத்தையும் பாதுகாக்க முடியும். சமஷ்டி முறையில் அரசியல் அதிகாரத்தை மாகாண அரசுகளுக்கும் மத்திய அரசுக்குமிடையில் பங்கிடவேண்டியிருப்பதால் ஒன்றின் அதிகாரத்தை மற்றது பறித்துக்கொள்ளாமல் பாதுகாப்பதற்கு விதிகள் அமைக்கப்படும். அன்றியும் சமஷ்டிக்குட்பட்ட ஒவ்வொரு அரசும் யதேச்சாதிகாரமாக நடக்க முடியாது. அத்துடன் சமஷ்டித் திட்டங்கள் அனைத்திலும் அடிப்படை உரிமைகள் அரசியல் சட்டத்திலேயே வரையறுக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் இருக்கும். மொழியுரிமை, மத உரிமை ஆகிய இவ்விரண்டும் இவ்வாறு பாதுகாக்கப்படுவதால் மதத்தினாலோ, மொழியினாலோ சிறுபான்மையாக இருப்பவர்கள் ஒற்றையாட்சி முறையில் போலல்லாது சமஷ்டியின்கீழ் போதியளவு பாதுகாக்கப்படுவர். சமஷ்டியாட்சி முறைதான் சிங்களச் சகோதரர்களின் பாதுகாப்புக்குப் பங்கமின்றி நியாயமான முறையில் தமிழ் பேசும் மக்கள் நலவுரிமைகளையும் பேணுவதற்கு வழி."


அன்னார் வகுத்த இத்திட்டத்தை அடைய தொடர்ந்து வரும் சாத்வீகப் போராட்டங்களில் தமிழ் பேசும் மக்கள் தைரியத்துடனும் ஒற்றுமையுடனும் தியாக சிந்தனையுடனும் பங்குபற்றி "தமிழரசு' நிறுவப்போராடுவதே நாம் அவரின் ஆத்மா சாந்தியடையச் செய்யும் மாபெரும் தொண்டாகும்.

வாழ்க அவர் திருநாமம்.

வளர்க அவர் விட்ட பணி.

"அரியவற்றுள் எல்லாம் அரிதே
பெரியாரைப் பேணித் தமராகக்
கொளல்"

(தமிழ்மறை)


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.

# கலைஞர்கள் கொண்டாடும் பாரதி விழா

## ஜெமினி-சாவித்திரி முக்கிய பங்கெடுக்கின்றனர்

### சென்னையிலிருந்து கோலாகல ஊர்வலம்

சென்னை, செப்டம்பர் 10.

**க**விஞர் பாரதி பிறந்த இடமான எட்டயபுரத்தில் இம்முறை பாரதி விழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. அமரர் பாரதிக்குத் திரைப்படக் கலைஞர்கள் இம்முறை திறமையான விழாவெடுக்கின்றனர். இதுகால வரைப் பொது நிகழ்ச்சிகளில் ஈடுபாடு வைத்துக்கொள்ளாத ஜெமினி கணேசன் முன்வந்து பல ஒழுங்குகளை நடாத்துவது குறிப்பிடத்தக்கது. நெல்லை மாவட்டத்திலுள்ள பல ஊர்கள் குடி தண்ணீர் இன்றி அல்லலுறுவதைத் தவிர்க்கவும் ஜெமினி கணேசன் முயலுகிறார்.

சாவித்திரி 10,000 பேருக்கு பாரதி விழாவின்போது உணவளிக்கிறார்.

கடந்த சில ஆண்டுகளாக தென்னகச் சினிமாக் கலைஞர்கள் பாரதிவிழாவை எட்டயபுரத்திற்குப் போய்க் கொண்டாடுவதை ஒரு பழக்கமாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளனர். இம்முறையும் சினிமா நடிகர்க



ளும், கலைஞர்களும் பாரதிக்கு விழாவெடுக்க எட்டயபுரத்துக்கு விரைகின்றனர்.

இத்தகைய விடயங்களில் ஓரளவு பின்னுக்கு நிற்கும் ஜெமினி கணேசன் இம்முறை முன்னுக்கு வந்து கருமமாற்றுவது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். பாரதிக்கு விழாவெடுக்கும் இவ்வேளையில் நெல்லை மாவட்டத்தில் ஏற்படும் குடி தண்ணீர் வசதிக்குறைவைப் போக்கவும் ஜெமினி கணேசன் அரசாங்கத்துடன் சேர்ந்து பெரிய திட்டம் ஒன்றைப் போட்டுள்ளார்.

பாரதி விழாவுக்குப் புறப்படும் குழுவினர் இன்று



சென்னையிலிருந்து 'மோட்டார் பவனி'யாகச் செல்லுகின்றனர். முக்கியமான நடிக நடிகைகளும், டைரக்டர்கள், கலைஞர்கள், மற்றும் பேச்சாளர்களான திருவாளர்கள்: ம. பொ. சி., டாக்டர் மு. வரதராசன், சீனிவாசராகவன், கொத்தமங்கலம் சுப்பு, கவிஞர் கண்ணதாசன், துறைவன், ஏ. பி. நாகராஜன், எஸ். டி. சுந்தரம், திருமதி சகுந்தவா பாரதி, சவுந்தரம் கைலாசம், வசுமதி ராமசாமி ஆகியோரும் இன்று புறப்படும் பவனியில் எட்டயபுரம் செல்லுகின்றனர். வழி நெடுகிலும் இவர்களுக்கு

திருச்சியில் வைத்துப் புதுக்கோட்டை மகாராஜா இவர்களுக்கு விருந்தளிக்கிறார். மதுரை ரசிகர்கள் மாலையில் தேநீர் விருந்தளிக்கின்றனர். விருதுநகர், சாத்தூர், கோயில்பட்டி ஆகிய இடங்களிலும் வரவேற்புகள் இடம் பெறும் எனத் தெரிகிறது.

பாரதி விழாவில் கே. வி. மகாதேவனின் இசைக் குழுவினர் இன்னிசை வழங்குவர். சவுந்தரராஜன், சுசீலா, சீனிவாசன், ஈஸ்வரி, ஜமுனாராணி, சந்திரபாபு முதலியோர் பாடுவார்கள்.

தங்கவேலு, நாகேஷ், சரோஜா, மனோரமா, ராஜகோபால் ஆகியோரின் நகைச்சுவை நாடகங்களும், ராகினி கோஷ்டியின் நடன நாடகமும் விழாவில் இடம் பெறும். சகஸ்ரநாமத்தின் சேவாஸ்டேஜ் குழுவினரின் 'இளைய பாரதம்' நாடகமும் இடம் பெறுகிறது.

### எரிமலையும் பெட்டிப் பாம்பும்

பிரபல தமிழ் நாடகத் தயாரிப்பாளர் திரு. ஆர். ஜெகசோதி தயாரித்தளிக்கும் 'எரிமலை' என்ற நாடகம் ஒக்டோபர் 13-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிகிறது. அத்துடன் 'பெட்டிப் பாம்பு' என்ற நகைச் சுவை ஓரங்க நாடகமும் இடம் பெறுகிறது.

சிறந்த நடிகர்களான கே. என். நவரெத்தினம், ஒ. ஜெரோம், கே, எம். வாசகர், செல்வி தர்மதேவி, செல்வி நிர்மலா முதலியோர் தோன்றும் இந்நாடகங்களை திரு. ஜெகசோதியே டைரக்ட் செய்துள்ளார்.

காருக்குறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வரக் கச்சேரிகளும் இடையிடையே நடைபெறும்.

#### 10 ஆயிரம் பேருக்கு உணவு

விழா தினத்தன்று நடிகை சாவித்திரி 10 ஆயிரம் ஏழைகளுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

கலை நிகழ்ச்சிகளினால் கிடைக்கும் பணத்தைப் பாரதி விழாப் பொறுப்பாளர்களிடம் கொடுத்து வருடாவருடம் பாரதி விழா சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுமெனவும் தெரிகிறது.

டைரக்டர்-கதை, வசன கர்த்தா கே. எஸ். கோபால கிருஷ்ணன் நிகழ்ச்சிகள் யாவற்றையும் திரைப்படமாக்கிறார்.



சினிமாஸ் திரைகளுக்கு விரைவில் வரவிருக்கும் சரவணபிலிம் சாரின் "பணத்தோட்ட"த்தில் எம். ஜி ராமச்சந்திரன் ஆங்கில நடனம் ஆடுகிறார் போலத் தோன்றுகிறது.

நாடக விமர்சனம்

## பல்கலைக் கழக தமிழ்ச்சங்கம் அளித்த இரட்டை வேடம்

**ஊ**ருக்கு உபதேசம் செய்யும் செல்லையாபிள்ளை உண்மையிலேயே சாதி வெறியன். யாழ்ப்பாணத்திலே மணம் புரிந்திருந்தும், அவர் மலைநாட்டுத் தமிழ்ப் பெண் கறுப்பாயியுடன் களவாக உறவு கொண்டு, ஒரு மகனுக்குத் தந்தையாகி விட்டாலும், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுத்தவர். அவருடைய நண்பனும் 'புரட்சிவாதியும்' நாஸ்திகனுமான சந்திரசேகரனின் போதனை மூலம் செல்லையாபிள்ளை மனம் மாறினார் என்பது தான் கதைச் சுருக்கம்.

சந்திரசேகரனை ஒரு 'புரட்சிவாதி'யாக உருவாக்குதற்காகத்தான் அவர் ஒரு சிங்களத்தியை மணம் புரிந்ததாக நாடகாசிரியர் கூற வந்திருப்பது போல் தோன்றினாலும் யாழ்ப்பாணத்திலே 1958ம் ஆண்டுக் கலவரத்தின்போது சிங்களவர்களைத் தமிழர்கள் கொல்லப் போனார்கள் என்ற அபாண்டத்தைச் சுமத்துவதற்காகத்தான் அவ்வாறு கூறியிருக்கிறார் என்பது வெள்ளிடைமலை. ஏன், ஒரு சிறுபான்மைத் தமிழ்ப்பெண்ணை அவர் மணம் புரிந்ததாகக் கூறியிருக்கலாமே! உண்மையில் சிங்களப் பெண்ணான சோமாவதியின் பாகம் அவசியமற்றது.

கத்தோலிக்கர்களுக்கும் புரட்சிக்கும் வெகு தூரம் என்று எண்ணும் ஒரு சில பொதுவுடைமை வாதிகளுக்குக் கறுப்பாயியின் மகனும் உண்மைக் கத்தோலிக்கனுமான பச்சைமுத்து புரட்சி வாதியாக மாறியது சாட்டையடிப்பதாக இருக்கிறது. இந்த இடத்தில் நாடக ஆசிரியரைப் போற்றத்தான் வேண்டும்.

செல்லையாபிள்ளை பார்ப்பதற்காக அல்பிரட்டை நடிக்க விட்ட பொழுது, அவர் உணர்ச்சிவசப்பட்டு சிறுபான்மைத் தமிழன் அல்பிரட்டைக் கட்டித் தழுவியதைக் கண்ட 'புரட்சிவாதி' சந்திரசேகரன் இதில் ஏதோ இரகசியம் இருக்கிறது என்று ஆங்கிலத்தில் கூறுவது கதையிலிருந்த சிறு விறு விறுப்பையும் கெடுத்து விடுகிறது.

பச்சைமுத்துவாக நடித்த சந்தியாகு மிகவும் நன்றாக நடித்தார். வேலைக்காரன் கந்தப்புவாக வந்த சிவானந்தன் நல்ல நகைச்சுவை நடிகராகுவதற்குரிய திறமையுள்ளவர். செல்லையாபிள்ளையாக வந்த இராஜேந்திரன் கடினமான தனது பாத்திரத்தைத் திறமையாக நடித்தார். சந்திரசேகரனின் வேடம் அவரது வயதுக்குப் பொருத்தமல்ல. சந்திரசேகரனாக வந்த சிவதொண்டனின் நடிப்பு நன்றாக இருந்தது.

நாடகாசிரியர் அவசியமற்ற வசனங்களைப் பல இடங்களில் புகுத்தியிருந்தும் அவை நீர் மேல் ஊற்றிய நெய் போல் வேறாக விலகி நின்றன. ஏன்தான் அடிக்கடி சாராயப் போத்தல் காட்டப்பட்டதோ தெரியவில்லை.

இறுதியாகக் கூறுவதானால் பல்கலைக் கழக மாணவர்கள், தமக்குத் தாமே அடைமொழி அமைத்துக் கொள்ளும் ஒரு சில எழுத்தாளர்களின் நாடகங்களை நடிப்பதற்காகத் தேர்ந்தெடுப்பதும் அவர்களிடமே தம்மை அடைக்கலம் கொடுப்பதும் தம் அறிவையே அடகு வைப்பதற்குச் சமானம் என்பதைத்தான் 'இரட்டை வேடம்' மிகவும் துலக்கமாகக் காட்டியது.

—கணபதி

நாடக விமர்சனம்:

## மன்னாரில் "ஒரே இரத்தம்"

மன்னார் கலா நாடக மன்றத்தாரின் "ஒரே இரத்தம்" என்னும் சமூக நாடகம் 30-8-63 வெள்ளி இரவு மன்னார் சென்ட்ரல் படமாளிகையில், மன்னார் பட்டின சபைத் தலைவர் திரு. பெர்ணண்டோ அவர்களின் தலைமையில் அரங்கேற்றப் பட்டது.

அரசாங்கத்தில் உயர்ந்த பதவி வகிக்கும் உத்தியோகத்தர் பலரால் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது வரவேற்கத்தக்கது.




அழகும் இளமையும் போட்டி போடும் இந்த நங்கை யார் தெரியுமா? 'ஒரே இரத்தம்' நாடகத்தில் சுரேசினியாகத் தோன்றிய திரு. வே. இராசலிங்கம் தான் இப்படித் தோன்றுகிறார்.

சகோதரத்துவத்தின் மகத்துவத்தை விளக்கும் இந்நாடகத்தின் கதை வசனம், பாடல்கள் ஆகிய பொறுப்புகளை திரு. வே. இராசலிங்கம் அவர்கள் ஏற்று மிகச் சிறப்புற எழுதியிருந்தார். காலத்திற்கேற்ற முறையாக குறைந்த நடிகர்களுடன் நான்கு காட்சிகளில் நாடகம் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

கதாநாயகன் மனோகரனாக திரு. எஸ். இ. சீத பொன்கலனும், தர்மலிங்கமாக திரு. ஜே. கே. ஞானப் பிரகாசமும், அமரசிங்கமாக திரு. ஆர். இராசரத்தினமும், பொன்னம்பலமாக திரு. ரீ. சிதம்பரநாதனும் பாத்திரங்களை உணர்ந்து நன்கு நடித்தனர். திரு. சீத பொன்கலன் காதல் கட்டத்திலும் திருவாளர்கள் ஞானப்பிரகாசம், ஆர். இராசரத்தினம் ஆகியோர் சோகக் கட்டத்திலும் நன்கு சோபித்தனர். நகைச் சுவைப் பாத்திரத்தை ஏற்ற திரு. ஆர். வைத்திலிங்கம் தமக்கே உரித்தான பாணியில் நகைச்சுவைத் துணுக்குகளை அள்ளி வீசினார்.

கதாநாயகி சுரேசினியாக வந்தவர், நாடக கதாசிரியர் திரு. வே. இராசலிங்கம் எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் அசல் பெண்ணாகவே காட்சியளித்தார். காதல் காட்சியின் போதும், தனிமையில் நின்று பாடும் பொழுதும் அவருடைய முக பாவனையும் நடன அபிநயங்களும், அங்க அசைவுகளும் இரசிகர்கள் உள்ளத்திலே கிளுகிளுப்பை ஏற்படுத்தின. மற்றும் திரு. வி. குமாரசாமி, கே. அம்பலவாணர், ரி. மகாதேவா, ஏ. மாசிலாமணி, கே. நித்தியானந்தம், மாஸ்ரர் ஜே. ஜி. மதுரநாயகம், பேபி வெண்ணிலா ஆகியோரும் தத்தம் பாத்திரங்களைத் திருப்திகரமாகச் செய்தனர்.

## ஓய்வு பெறுகிருர்



மட்டக்களப்புப் பகுதியில் தமிழ் கல்வித் துறைக்கு அரும்பாடு பட்டவரான திரு. எப்.என். இராஜசிங்கம் அவர்கள் ஆசிரியப் பணியிலிருந்து 1-8-63 முதல் ஓய்வு பெறுகிருர்.

அரசடி மெதடிஸ்த சங்கப் பாடசாலையில் பல வருடங்களாகத் தலைமை ஆசிரியராகக் கடமை புரிந்து வந்துள்ள திரு. இராஜசிங்கம் சிறந்த பொதுத் தொண்டர். கல்லாற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மதத் துறையில் மட்டுமல்லாமல் பொதுச் சேவையிலும் மும்முரமாகப் பாடுபட்டுழைத்தவர்.

1957ம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசு மாநாட்டில் கலந்து கொண்ட எவரும் திரு. இராஜசிங்கத்தை மறந்திருக்கமாட்டார்கள். பாலுடனும் தேனுடனும் விருந்தாளிகளை மகிழ்வித்த பெருமை அவரைச் சார்ந்ததே. மாநாட்டுக்கு வருகை தந்த பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுக்கு இன்முகங் காட்டி உபசரித்து உணவும் உறைவிடமும் கொடுத்துதவி 'உணவு மந்திரி' என்ற பெயருக்குப் பொருத்தமாக உழைத்தவர்.

மட்டக்களப்பு மக்கள் வர்த்தகத் துறையில் முன்னணிக்கு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் பாடுபடும் திரு. இராஜசிங்கம் தாமாகவே கலாநிதிப் புத்தகசாலை என்ற நிறுவனத்தை ஆரம்பித்துள்ளார். தொடர்ந்து வர்த்தகத் துறையில் ஈடுபட விரும்பும் இவருக்கு மென்மேலும் பல வாய்ப்புகள் பெருக வேண்டுமென்று விரும்புகிருேம்.

## அந்நிய ஆட்சி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை கூடினர். கூடியும் பயனில்லை. பண்டா அரசாங்கமோ மழுப்புகிறது. நேரு அரசாங்கமோ அலட்சியம் செய்கிறது. நாம் இந்த அரசாங்கத்தையோ நேரு அரசாங்கத்தையோ நம்பிப் பயனில்லை. எனவே போராட்டமே கடைசி ஆயுதம். குடியுரிமை பெற நாம் போராடியே தீரவேண்டும். அதுவே நமக்கு வழிவகுக்கும். இல்லையேல் நாம் நாயினும் கேவலமாகத்தான் வாழ வேண்டும்.

மலையக மக்கள் இங்கு இயங்கும் கட்சிகளை நம்பி வாழ்கிருர்கள். ஆனுல் அவைகளால் என்ன......? சுரண்டலால் தொழிலாளிகள் நலிந்ததும், ஒருவருக்கொருவர் சண்டையிட்டு, ஒற்றுமையற்று வாழ்வது தான் மிச்சம்.

கட்சித் தலைவர்களே! தொழிலாளர்- மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராட முடியுமா? முடியாதா? ஆட்சியின் அடக்கு முறைக்கும் சிறைத் தண்டனைக்கும் பயமா? அல்லது ஆட்சியாளரின் அடிவருடிகளாக வாழ வேண்டுமென்ற எண்ணமா?

## தேஜா நியமனத்துக்கு எதிர்ப்பு

பத்திரிகைக் கமிஷனுக்கு திருமதி தேஜா குணவர்தனுவையும், திரு. வல்பித்தவையும் நியமனம் செய்ததையிட்டு மந்திரி சபைக்குள் பலத்த அபிப்பிராயபேதம் ஏற்பட்டுள்ளதாக நம்பப் படுகிறது. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இவ்விருவரது நியமனங்களையும் பலமாக ஆட்சேபிப்பதாகவும் அரசாங்கத்தின் பின் வரிசை எம். பிக்களைத் தூண்டிவிட்டு பிரதமரை இதுவிடயமாக அணுகும்படி செய்வதாகவும் வதந்திகள் அடிபடுகின்றன.

பாராளுமன்றத்தில் பத்திரிகைக் கமிஷன் பற்றியவிவாதம் நடைபெற்ற பொழுது டாக்டர் நாகநாதன், திரு. ஜே. ஆர். ஜெயவர்தனு போன்ருேர் திருமதி தேஜா குணவர்தனு சீன சர்க்காரிடம் கூலி பெறுபவர் என்று பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளனர். டாக்டர் நாகநாதன் பேசும் போது, 'சீனுவில் பத்திரிகை சுதந்திரம் கிடையாது. சீனுவின் போக்கைப் பின்பற்றும் திருமதி தேஜா குணவர்தனு இங்கும் பத்திரிகை சுதந்திரத்தை அபகரிக்க ஆவனசெய்யக்கூடும். தனது வீட்டை சீனச் செய்தி ஸ்தாபனத்துக்கு 'பெரிய' வாடகைக்கு திருமதி தேஜா கொடுத்திருக்கிருர். அவருடைய இரு குழந்தைகளும் பீகிங்கில் சீனுவின் தயவில் கல்வி பயின்று வருகின்றனர். திரு. வல்பித்தவும் ஒரு சீனச் சார்புடையவர்', என்று குறிப்பிட்டார்.

நிதி மந்திரியாக நியமனம் பெற்றுள்ள திரு. ஏ. பி. பெரேரா இலங்கையின் தூதுவராக சீனுவில் பணிபுரிந்து திரும்பியவர். சீனுவிற்கு ஆதரவாகவும் இருப்பவர் என்று பலராலும் கருதப் படுபவர். அவரே சீனச் சார்புடைய இருவரை பத்திரிகைக் கமிஷனுக்கு நியமித்தது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நியமனங்களை முன்னிட்டு நீதி மந்திரி தமது பதவியை ராஜினுமாச் செய்ய வேண்டுமென்று காலி எம். பி. திரு. தகநாயக்கா வற்புறுத்தியுள்ளார்.

மேலும், சீனச் சார்புடையவர் என்று கூறப்படும் திரு. தேசப் பிரிய செனநாயக்கா இப்பத்திரிகைக் கமிஷனின் காரியதரிசியாக நியமிக்கப் படுவார் என்ற வதந்தியும் அடிபடுகிறது.

## பழைய...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மைக்காகத் தலைக்கொரு காங்கிரஸ் வைத்துக்கொண்டனர். இக் காங்கிரஸ்களை இனியும் நம்பினுல் சென்ற காலங்களில் நம்மை அழைத்துச் சென்ற பாதையில்தான் அழைத்துச் சென்று கடைசியில் அரசியல் அனுதைகளாக்கப்பட்டு விடுவோம். இனி இவர்களை நம்பிப் பலன் உண்டோ? ஆகவே படைபல நடத்தி வெற்றி கொண்ட தந்தை செல்வா அவர்களைக் காப்பாளராகக் கொண்டுள்ள "இலங்கைத் தொழிலாளர் கழக" த்தில் அங்கம் வகித்து இந்த உரிமைக்காகப் போராடி வெற்றி பெறுவோம்! வாரீர்!!

ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு பயந்து, அடிவருடிகளாக, மானமிழந்து வாழவேண்டுமென்ற ஆசையிருந்தால் உங்கள் கட்சிகளைக் கலைத்து விடுங்கள், எங்கள் சுயமரியாதைகளைப் பெறும் போராட்டத்திற்குத் தடையாக நில்லாதீர்.

## கிண்ணியாவில் "புஹாரி - முஸ்லிம்"

கிண்ணியா யாகுவப் பள்ளி வாசலில் நடந்த "புஹாரி முஸ்லிம்" நான்காவது வருடப் பொதுக் கூட்டத்தில் இம்மாதம் 16-ம் திகதி புஹாரி-முஸ்லிம் ஓதலை ஆரம்பித்து அடுத்த மாதம் 27-ம் திகதி தமாம் செய்து, பெரிய கந்தூரி நடத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்திற்கு மூதூர் முதலாவது பிரதிநிதி ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி தலைமை வகித்தார். நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: ஜனுப் எம். எஸ். எம். இபுருகீம், உப தலைவர்: ஜனுப் ஏ. அப்துல் மஜீது, காரியதரிசி: ஜனுப் ஏ. எம். சாகுல் ஹமீத், தனுதிகாரி: ஜனுப் அ. முகம்மதனிபா.

19 பேர்களடங்கிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## இரங்கற் கூட்டம்

கொழும்பு, செப். 11

திருமலை தந்த தீரர் திரு. இராசவரோதயத்தின் மறைவு குறித்து 13ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஊர்காவற்றுறைப் புதிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் தலைமையில் ஓர் இரங்கற் கூட்டம் நடைபெறும்.

திருவாளர் சா. ஜே. வே. செல்வநாயகம், வைத்திய கலாநிதி இ. மு. வி. நாகநாதன், திருவாளர்கள் சி. மூ. இராசமாணிக்கம், மு. சிவசிதம்பரம், செ. இராசதுரை, இரா. பத்மநாதன், ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி, எஸ். இசட். எம். மசூர் மௌலானு ஆகியோர் மறைந்த தலைவரின் தொண்டு குறித்து உரை நிகழ்த்துவார்கள்.

### துறைநீலாவணைக்கு குழாய் நீர்

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள துறைநீலாவணை குழாய் நீர்த் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க தலத்தாபன அமைச்சு திட்டமிட்டிருப்பதாக அறியப்படுகிறது. பட்டிருப்பு பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம் பேற்படி அமைச்சரோடும், நிரந்தரக் காரியதரிசியோடும் அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பேரில் இம் முடிவு ஏற்பட்டுள்ளது.

தலத்தாபன இலாகா மானியத்தின்போது இவ்விடயம் திரு. சி. மூ. இராசமாணிக்கத்திஞல் பிரதிநிதிகள் சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### வன்னியர் வாய் மொழிகள்

எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டு சீரழிந்து காலப் போக்கினில் ஒழிந்து போவதைப் பார்க்கிலும், நான் தேசத் துரோகி என்று குற்றஞ் சாட்டப்பட்டு, தூக்குக் கயிற்றில் தொங்க விடப்படுவதையே என்றும் மகிழ்வோடு வரவேற்கிறேன்.

ஃ

சமஷ்டி அரசமைப்பா அல்லது சுதந்திர ஈழமா என்பதே இன்று தமிழ் மக்கள் முன்னிலையிலுள்ள பிரச்சினை! நாங்கள் சமஷ்டி அரசியலையே விரும்புகிருேம்! ஆனுல் திட்டமிட்டுத் தமிழர்களை அழிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுமாஞல் சுதந்திர ஈழம் உருவாகும் நிலை வருமென எச்சரிக்கை செய்கிறேன்.

## பாரதியின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரை மிகவும் கவலையில் ஆழ்ந்திடச் செய்துள்ளது.

"விதியே, விதியே, தமிழச் சாதியை
என்செய நினைத்தாய்? எனக்குரை யாயோ?
ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவினும் பரவியிவ் வெளியே
தமிழச் சாதி, தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறுது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினுற் சாதலும்
இஃதெல்லாங் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்."

என்று துயரத்தில் கிடந்த உள்ளக் கொதிப்பைக் கொட்டிய பாரதி;

"விதியே! விதியே! தமிழச் சாதியை
என்செயக் கருதி யிருக்கின் ருயடா?"

என இறுதியிலும் கோபாவேசத்தோடு முடிக்கின்ருர். இக் கவிதையைப் படிக்கும் போது 1958ம் ஆண்டு நம் தமிழ் மக்கள் இங்கு பெற்ற அவதியையும், அதைத் தொடர்ந்து இன்னும் படும் இடரினையும் நமது நெஞ்சம் நம்மை அறியாதே நினைக்கின்றது.

### பாரதியின் சபதம்

"...இந்த நிமிசம் சத்தியமில்லை. நாளை வரப் போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழரின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பேரை மாற்றி அழையுங்கள்," என்று 1916ம் ஆண்டு பாரதி போட்ட சபதம் வருமாண்டுகளின் நிச்சயம் நிறைவேறும். இச் சபதத்தை ஒவ்வொரு தமிழனும் ஏற்றுக் கொண்டால் வெற்றி.

## நிழல்கள்

நிழல்கள் தொடர் கதை இடமின்மையால் இவ்வாரம் வெளி வரவில்லை. அடுத்த வாரம் முதல் தொடர்ந்து வெளிவரும்.

ஆ—ர்.

## சீனக் கோஷ்டி மீது நடவடிக்கை

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருக்கும் சீனக் கோஷ்டியைச் சேர்ந்த இரண்டு முக்கியஸ்தர்கள் மீது கட்சி நடவடிக்கை எடுக்க விருப்பதாக அறியப் படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் கீழுள்ள தொழிற் சங்கங்களின் முக்கியஸ்தர் திரு. மூர்த்தி என்பவர் மீது சில குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டிருப்பதாகவும் அவருடைய சமீபத்திய போக்குப் பற்று விளக்கம் கேட்கப் பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது,

திரு. மூர்த்தி, சீனக் கோஷ்டியின் 'தலைவர்' திரு. சண்முகதாசனின் வலக் கரம் போன்றவராகும். இவர் மீது கட்சி எடுக்கும் நடவடிக்கை திரு. சண்முகதாசனுக்கு எச்சரிக்கை செய்வதாகவே இருக்குமெனவும் கம்யூனிஸ்ட் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதே வட்டாரங்கள் எந்தச் சமயத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடம் சண்முகதாசன் மீதும் கை வைக்கலாமென இரவு பகலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

இதே சமயத்தில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. எட்மண்ட் சமரக் கொடி இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கெதிராகக் கருத்துத் தெரிவித்து வருவதையும், இ. ஐ. மு வைச் சேர்ந்த சிலர் கண்டித்திருப்பதுடன் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்களாம்.


கையிருப்பிலிருந்து பெறலாம்

**அஸ்பெஸ்டாஸ் தகடுகள்**
(தட்டையானது)

**கல்வனைஸ்ட் நெளிவுத் தகடுகள்**
24, 26, 28, 30, 32 BWG & 35 USG

**கல்வனைஸ்ட் பைப்புகள்**
(கனம் குறைந்ததும் மத்திய தரமும்)

**பித்தளைத் தகடுகள்**
**செம்புத் தகடுகள்**
4' X 4' - 18, 20 X 22 ருத்தல்களாக

**மைல்ட் உருக்கு ஆங்கிள்களும் தட்டையானவையும்**
எல்லா அளவுகளிலும்
**மூட்கம்பியும், கம்பி ஆணிகளும்.**
(கிராண்ட்பாஸ் மெட்டல் இன்டஸ்ட்ரீஸ் ஸ்தாபனத்தாரின் உள்ளூர் தயாரிப்பு)

தொடர்பு கொள்ளவும்:

**ஜபார்ஜி பிரதர்ஸ்,**
**நிர். 161, குமார வீதி,**
**புறக்கோட்டை, கொழும்பு-11.**

தொலை பேசி : 78501




மர்மத் தொடர் கதை:

# புதுமைத் திருடன்

—மாஸ்டர் சிவலிங்கம்—

“மன்னிக்க வேண்டும்...! இதுதானே பழனியப்பனின் வீடு?” என்று செட்டியாரிடம் புன்முறுவலுடன் கேட்டான் அந்த இளைஞன். ஆமாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்த செட்டியார், “பழனியப்பனின் தகப்பனுர்தான் நான்......” என்று தன்னையே அறிமுகம் செய்தவாறு உள்ளே அழைத்துச் சென்ருர்.

“நான் அவருடைய நண்பன்...பேராதனைப் பல்கலைக் கழகத்திலேதான் நானும் பயிற்சி பெற்று வருகிறேன். விடுதலைக்குக் கண்டிப்பாக யாழ். நகருக்கு வர வேண்டும் என்று உங்கள் மகன் வற்புறுத்தியிருந்தார். எனக்கும் யாழ். நகரைப் பார்க்க வேண்டும் என்று நெடுநாட்களாக ஆசை...எங்கே பழனியப்பனைக் காணவில்லை?” என்று மிக ஆர்வத்தோடு வினவினுன் இளைஞன்.

“சென்ற வாரம் கொழும்பிலுள்ள அவங்க அத்தை வீட்டிற்குப் போயிருக்கிருர். நாளை மறுநாள் வந்து விடுவார். நீங்கள் இங்கு தங்கியிருந்து தம்பி வந்த பிறகு தான் போக வேண்டும்” மகனின் நண்பன் என்ற உரிமை உணர்ச்சியுடன் வற்புறுத்திஞர் செட்டியார்.

“நீங்கள் இவ்வளவு வற்புறுத்தும் போது நான் மறுத்துச் சென்ருல்,...அப்புறம் உங்க மகன் என்னைச் சும்மா விடமாட்டார்...” வாய்விட்டுச் சிரித்தான் கறுப்புக்கண்ணுடி. சிரிப்பில் செட்டியாரும் சேர்ந்து கொண்டார்.

அன்று இரவு...! உணவை முடித்துக் கொண்டு தனது பிரத்தியேக அறைக்கு அழைத்துச் சென்ருர் செட்டியார். தனது கவர்ச்சிகரமான பேச்சால் செட்டியாரைத் தன் வசமாக்கிக் கொண்டான் அந்த இளைஞன்.

அங்கு காணப்பட்ட பெரிய இரும்புப் பெட்டியைக் கண்டதும், ஏனே அந்த இளைஞனுடைய புருவங்கள் சற்று அகன்று விரிந்தன.

இரும்புப் பெட்டிக்குப் பக்கத்தில் காணப்பட்ட இரும்புக்கட்டிலில் அமர்ந்து கொண்டு எதிரில் காணப்பட்ட கட்டிலில் அமரும்படி சைகை காட்டிஞர். தனது பிரயாணப் பையைக் கட்டிலுக்கு அடியில் வைத்துவிட்டு இளைஞன் ‘ஜம்’ என்று உட்கார்ந்தான்

உலக அரசியல் விடயங்களைப் பற்றி வெகு நேரம் வரைப் பேசிக் கொண்டிருந்தனர். இளைஞன் உலக விவகாரங்களைப் பற்றி மூச்சு விடாமல் பேசிக்கொண்டேயிருந்தான். மகுடியில் கட்டுண்ட நாகத்தைப் போல செட்டியாரும் அவனுடைய விமர்சனத்தில் சொக்கிப் போயிருந்தார்.

அப்போது.........! “டாங்! டாங்!!” என்று சுவர்க்கடிகாரம் பதினெரு தடவை அடித்துவிட்டு ஓய்ந்தது. “அடடே! பதினெரு மணியாகிவிட்டதே.. உங்களுடன் பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.........இனித் தூங்குவோம்......” என்று கூறிக்கொண்டே மின்சார விளக்குகளை அணைத்தார். எங்கும் ஒரே இருள்—ஒரே அமைதி. சிறிது நேரத்திற்கெல்லாம் அமைதியைக் குலைத்துக் கொண்டு “கொர்” என்ற குறட்டை ஒலி செட்டியாரிடமிருந்து கிளம்பியது.

நேரம் சரியாகப் பன்னிரெண்டு மணி...! ஓசைப் படாமல் மெதுவாக எழுந்தான் அந்த இளைஞன். செட்டியாரின் கட்டில் பக்கம் திரும்பினுன். அவர் குறட்டை ஒலியைக் கிளப்பிக் கொண்டே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்.

பலமாக இருமினுன், அந்த இளைஞன் செட்டியார் அசையவில்லை — குறட்டை ஒலியும் நிற்கவில்லை கட்டிலுக்கடியில் இருந்த தனது பிரயாணப் பையை எடுத்து மெதுவாகத் திறந்தான். உள்ளேயிருந்த ஒரு சிறிய தகர டப்பா அவனுடைய கையில் அகப்பட்டது. தகர டப்பா சகிதம் செட்டியாரின் கட்டிலோரத்திற்குச் சென்ருன்......

அப்போது செட்டியாருடைய குறட்டை ஒலி மிகவும் பயங்கரமாக ஒலித்தது! இளைஞனுக்கு வியர்த்துக் கொட்டியது! அவனுடைய கை இலேசாக நடுங்க ஆரம்பித்துவிட்டது.

கையிலிருந்த தகர டப்பாவை மெள்ளத் திறந்து செட்டியாரின் முகத்திற்கு நேரே பிடித்தான்...அடுத்த நிமிடம்......குறட்டை ஒலி “டப்” என்று நின்றது!

(தொடரும்)

## தமிழ் அன்னை தந்த தவப் புதல்வர்

—தி. மதுரம், அளவெட்டி—

ஈழத்து தமிழ் மக்கள் செய்த தவப் பயன் காரணமாக தமிழ் அன்னை ஓர் தவப் புதல்வரை ஈழத்துத் தமிழ் இனத்திற்கு ஈன்றளித்தாள். 1911-ம் ஆண்டு பிறந்த அவ்வுத்தமர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினுர். ஒரு பட்டதாரியாகவும் விளங்கிய அப்பெருமகனுர், அரசியலில் ஆர்வமிக்கவராகவும் விளங்கினுர். அதற்குச் சட்டக் கல்வி அவருக்குத் துணை புரிந்தது.

தமிழ்க் காங்கிரஸ் கட்சி அபேட்சகராகப் பாராளுமன்றத்தில் சிறிது காலம் இருந்து, பின்பு திரு. செல்வநாயகம் அவர்களுடன் தமிழரசு என்ற ஸ்தாபனத்தை நிறுவினுர்.

தமிழரின் சிறப்பு தரணியெங்கும் தலையெடுத்து வாழ வேண்டும் என்பதே அவர் அவா. அற்காக ஆயுதமின்றிச் செய்யும் புனித அறப்போரிலே ஈடு பட்டு, ஆர்வம் காட்டி மக்களை ஊக்கப் படுத்திஞர். தமிழன்னையின் புகழ் எட்டுத் திக்கும் பரவ வேண்டும் என்று எண்ணினுர். அதற்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த தியாகி தான் திரு. கு. வன்னியசிங்கம்.

வீறுகொண்ட இத் தமிழனைத் தடுப்புக் காவலில் வைத்து அடக்கப் பார்த்தது இலங்கை அரசாங்கம். அதனுல் அவர் உடல் நலிந்தது; ஆனுல், உள்ளம் தளரவில்லை.

மனித மாணிக்கமாய், அணையாத ஜோதியாய், ஒப்பற்ற தியாகியாய், பேச்சாளராய் வாழ்ந்து கன்னித் தமிழைக் காத்த அப்பெரியார், எங்களை விட்டு என்றும் அகலமாட்டார். அவர் நமக்குச் செய்த இப் பேருதவிக்கு நாம் செய்ய வேண்டிய கடமை மீண்டும் நமது போராட்டத்தைச் சிறந்த முறையில் நடத்துதலே. அதற்குத் தமிழர் ஒன்று கூடி ஒத்துழைப்பதே முக்கியம். அவர் எமக்கு அளித்த சுதந்திர உணர்ச்சியுடன் இறுதிவரை போராடுவோம். அவருக்கு எமது மனப்பூர்வமான அஞ்சலி உரித்தாகுக. வாழ்க அமரர் வன்னியசிங்கம்.

## பைந்தமிழ்ப் பாவலன்

—முதல்வனுர்—

தமிழிலே பாட்டுக்கள் பாடவும்,—அதில்
தக்க கருத்துக்கள் தேடவும்,
அமிழ்தை நிகர்த்த கவிதையில்—மூழ்கி
ஆனந்தக் கூத்துக்க ளாடவும்,

அன்னையைத் தெய்வமாய்ப்பேணவும்,—புது
ஆரணங்கின் தன்மை காணவும்,
பெண்ணுக்குப் பெருமைகள் நல்கவும்,—அந்தப்
பேற்றினைப் போற்றியே சொல்லவும்,

கொடுமைகளை யிங்கு சாடவும்,—உயர்
கொள்கையிலே ஒன்று கூடவும்,
அடிமை நிலையை அகற்றவும்,—நல்ல
உரிமை உணர்வைப் புகட்டவும்,

சிந்தையிலே புத் துணர்வுடன்—ஒரு
விந்தை உலகில் உலாவவும்,
பைந்தமிழ்ப் பாவலன் பாரதி—அவன்
பாடல்களை நாமும் நாடுவோம்!

கவனிக்கவும்:

# பேச்சுப் போட்டி இடை, இறுதித் தேர்வு விபரங்கள்

தமிழ் பேசும் இளைஞர்களுக்குச் சுதந்திரன் நடாத்தும் அகில இலங்கைப் பேச்சுப் போட்டிக்குரிய இடை இறுதிப் போட்டிகள் அடுத்த வாரம் முதல் [21ம் திகதி] தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. இடையிறுதிப் போட்டி நடைபெறும் இடமும் காலமும் முதற் பக்கத்தில் வெளியாகியுள்ளன.

போட்டி விதிகளுக்கு அமைய, கட்டுப்பாடாக இயங்க வேண்டியது போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு இளைஞரதும் தலையாய கடமை.

போட்டியில் பங்கு கொள்பவர்களது கவனத்திற்கு:

(1) குறித்த தினத்தில் குறித்த இடத்தில் காலை ஒன்பது மணி [பதுளை, ஹட்டன் மாவட்டங்களில் பத்து மணி] தொடக்கம் மாலை ஐந்து மணி [பதுளை, அட்டன் மாவட்டங்களில் நாலு மணி] வரை பேச்சுப் போட்டி நிகழும். நண்பகல் ஒரு மணித்தியாலயம் உணவுக்கு இடைவேளை கொடுக்கப்படும். ஒரு நாளில் போட்டி முடியாது விட்டால் தொடர்ந்து அடுத்த நாட்களிலும் நிகழும்.

(2) பேச்சாளர்கள் குறித்த நேரத்திற்கு மண்டபத்தில் நிற்க வேண்டும். சிறிது நேரம் [அரை மணி கூடியது] பிந்தி வருபவர்களைத் தலைவர் விரும்பினுல் மண்டபத்தில் அனுமதிப்பார்.

(3) பேச்சாளரது கருத்து வளம், மொழிவளம், ஆழ்த்துவம் [நிலை, தொனி, அசைவு] பேச்சுத்திறன் என்பவற்றிற்குப் புள்ளிகள் அளிக்கப்படும்.

(4) சீட்டுக் குலுக்குதல் மூலம் பேச்சாளர்கள் வரிசைப்படுத்தப் படுவார்கள்.

(5) ஒவ்வொரு பேச்சாளரும் பத்து நிமிடம் பேச அனுமதிக்கப்படுவர். ஒன்பதாவது நிமிடம் தலைவர் மணியொலி செய்வார். தொடர்ந்து ஒரு நிமிடம் பேசிப் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். பேச்சு முடியாத விடத்து பத்து நிமிடம் முடிய அடுத்த மணி ஒலியைத் தலைவர் எழுப்புவார். அவ்வமயம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

(6) வயது குறித்து நடுவர்கள் சந்தேகப்பட்டால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காட்டத் தயாராக இருக்க வேண்டும்.

(7) போட்டி முடிவு, அடுத்து வரும் சுதந்திரன் இதழில் வெளிவரும்.

(8) முதல் மூவரைத்தவிர, நடுவர்களின் முடிவுக்கு இசையைப் பாராட்டத் தக்க பேச்சாளர்களுக்கும் பரிசுப் பத்திரங்கள் உண்டு.

(9) போட்டி முடிவு வெளியாகிய ஒரு வாரத்திற்குள் தெரிவு செய்யப்பட்டவர்கள் பாஸ்போட் அளவு தங்கள் நிழல் படங்களைப் பேச்சுப் போட்டி ஆசிரியர், சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு-12. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(10) பரிசுக்குரிய முதல் இருவர் கொழும்பில் நடைபெறும் இறுதிப் போட்டியில் சமுகமளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

(11) விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தலைப்பிலேயே பேச வேண்டும்.

## நீவிர் அறிவீர்!

கேள்வி

(1) அவுஸ்திரேலியாவிலுள்ள சிரிக்கும் பறவையின் பெயரென்ன?
(2) அமெரிக்காவிலுள்ள சுதந்திரச் சிலையின் உயரமென்ன?
(3) இங்கிலாந்தின் இலக்கிய மேதை யார்?
(4) முதல், முதல் எங்கே தபால் முத்திரை வெளியாகியது?
(5) குருந்தேயா நீர்வீழ்ச்சியின் உயரமென்ன?
(6) டில்லிக்கு முதல், இந்தியாவின் தலைநகரமாக விளங்கியது எது?
(7) சினிமாவைக் கண்டு பிடித்தவர் யார்?
(8) இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் யார்?
(9) அவுஸ்திரேலியாவைக் கண்டு பிடித்தவர் யார்?
(10) இலங்கைப் பாராளுமன்றத்திலிருந்து முதன் முதல் வெளியேற்றப்பட்டவர் யார்?

விடை

(1) லயா.
(2) 984 அடி.
(3) பேர்னுட் ஷா.
(4) பெரிய பிரித்தானியா.
(5) 620 அடி.
(6) கல்கத்தா.
(7) எடிசன்.
(8) றிச்சாட் அலுவிகார.
(9) ஜேம்ஸ் குக்.
(10) எச். ஆர். பிரிமென்.

—மதியரசு

## திருமலை தந்த தியாகச் செம்மலே!

—ஜெயராணி சபாபதிப்பிள்ளை—

நான்கு வருடங்களில் நான்கு தமிழ்த் தலைவர்களை ஒருவர் பின் ஒருவராகக் கூற்றுவன் பறித்துவிட்டான். நினைக்க நெஞ்சம் பற்றி எரிகிறது. கண்கள் குளமாகின்றன.

கோப்பாய்க் கோமகனை இழந்த துக்கம் மாறுமுன், அண்ணலை இழந்த பேரிழப்பு மாறுமுன், அமரர் கந்தையாவை இழந்தோம். நற்றமிழின் பொற்காவலனை இழந்த தமிழினம் கண்களிலுள்ள நீரை அகற்றுமுன் திருமலையின் மாமலையை இழந்தது. இவர்களுக்கு ஆறுதல் கூற ஒருவரும் இல்லை. ஐயோ! என்ன கொடுமை? என்ன சோதனை! கூற்றுவனின் விழிகளும் நம் பக்கமோ கோபக் கனலை வீசுகின்றன? துன்பத்திற்கு மேல் துன்பம்; கொடுமைக்கு மேல் கொடுமை; இழப்புக்கு மேல் இழப்பு; மாமலையே! தியாகச் செம்மலே! நம்மை விட்டுப் பிரிந்துவிட்டாயே! நாம் என்ன செய்தோம்! அமரர் கந்தையா அழைத்து விட்டாரா?

உலகம் உள்ளளவும் உனது புகழ் சுடர் விட்டுப் பிரகாசிப்பதாக. நீ விட்டுச் சென்ற நற்பணியை இன்று தொடக்கம் நாம் மேற்கொள்வோம். உமது ஆத்மா சாந்தி அடைவதாக!

# சேயகம் தந்த...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போர்க்குரல் எழுப்பினர். வழக்காற்றில் இல்லாத சமய மொழியாக மட்டும் வந்த வடமொழியே தமிழ் மொழியின் வளத்தைப் பெருமளவு குன்றச் செய்த போது ஆட்சி மொழியாக வரும் இந்தி தமிழ் மொழியை எவ்வாறு தூரம் மாசு படுத்தும், அழிவுறுத்தும் எனக் கூறி தமிழ் மக்களை பேரணியாகத் திரட்டினர். அவர் தலைமையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாடு தமிழக வரலாற்றில் மறக்க முடியாத ஓர் நிகழ்ச்சி என்பதை யாம் நினைவில் வைத்தால் நலம். வெறும் பேச்சுக்களுள் நிறைவடையாத மறைமலையடிகள் "இந்தி பொது மொழியா?" என்ற சிறு நூலினைப் பல்லாயிரக் கணக்கில் வெளியிட்டு, பரப்பி மக்களுக்கு அறிவைப் புகட்டியதோடு, மக்களை உரிமை வேட்கை உடையவர்களாகவும் விளங்கச் செய்தார். அவரின் குடும்பமே இந்தியை எதிர்த்து சிறை சென்றது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. அரசியல் நுண்ணறிவில் ஒரு சாணக்கியர் எனக் கருதப்பட்ட இராஜாஜி அவர்கள் 1938ல் இந்தியைத் தென்னகத்தில் தினிப்பதற்கு உடந்தையாக இருந்தவர்களில் ஒருவர். அதே இராஜாஜி அவர்கள் 20 ஆண்டுகள் கழித்து 1958ல் ஏறக்குறைய மறைமலையடிகள் எடுத்துக் கூறிய அதே காரணங்களைக் காட்டி, இந்தியை எதிர்த்து இந்திய அரசியல் வானில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தினர். அரசியலில் அவ்வளவு ஈடுபடாது மொழியியல் துறையில் மட்டும் ஈடுபட்ட மறைமலையடிகளுக்கு இருந்த முன்கூட்டி உணர்கின்ற அறிவு (தீர்க்க தரிசனம்) அரசியலிலே தோய்ந்திருந்த இராஜாஜிக்கு 1958ல் தான் ஏற்பட்டது. அத்தளவிலாவது அவரின் அறிவில் தெளிவு ஏற்பட்டது மகிழ்ச்சிக்குரியது.

### வன்னியசிங்கத்தின் சிங்கள எதிர்ப்பு

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற எந்த நாட்டிலும் ஒற்றையாட்சி தொடர்ந்து இருப்பின் அது சிறுபான்மை இனங்களின் அழிவிலேயே முடியும் எனக் கூறி 1948ம் ஆண்டு தொட்டு ஈழத்தில் இணையாட்சி (சமஷ்டி) ஏற்பட பாடுபட்டவர்களில் வன்னியசிங்கம் ஒருவர். மலைநாட்டுத் தமிழ் மக்களில் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்படத் துணை புரிந்த ஒற்றையாட்சி, தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் ஏற்படவும் உடந்தையாக இருந்தது. இறுதியில் 1956ல சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறிய நாட்டொட்டு வன்னிய சிங்கம் அவர்கள் தாம் இறக்கும்வரை பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நிகழ்த்திய சிந்தனைத் தெளிவுமிக்க வீர உரைகளையும், மொழிகாக்க சிறைத் தண்டனையைப் பல்முறை புன்சிரிப்போடு ஏற்று சிறைச்சாலையைப் பூஞ்சோலையாக்கிய பெருமையையும் நாம் மறக்க நினைத்தாலும்மறக்க முடியாது. அவர் இறப்பிற்கு சில காலத்திற்கு முன் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய நீண்ட, உள்ளம் உருக்கும் உரை. அவர் தமிழ் மீதும் தமிழினத்தின் மீதும் வைத்திருந்த மீளுக் காதலை எடுத்துக் காட்டுகிறது. இப்பேருரையை ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் படித்துப் பயன் பெறுவார்களாக.

### மறைமலை-வன்னியரின் சாதி ஒழிப்பு

மாவட்ட அடிப்படையிலும் மத வேறுபாட்டிலும் சாதியின் பெயரிலும் தமிழ் இனம் தென்னகத்திலும், ஈழத்திலும் பிளவுபட்டு சிதறும் நிலையில் இருந்தது. இந்த இழிநிலையை நீக்க மறைமலையடிகள் தம் பேச்சிலும், தம் நூல்கள் வாயிலாகவும் முயன்று பெறுமளவு வெற்றி கண்டார். "சாதி வேற்றுமையையும் போலிச் சைவரும்" என்ற அன்னவரின் நூல் அன்னாரின், உள்ளக்கிடக்கையை எடுத்துக் காட்டும் சிந்தனைக்கு விருந்தளிக்கும் நூல். வன்னியசிங்கம் அவர்கள் சாதி உணர்ச்சியில் ஊறிய ஒரு குடும்பத்தில் தோன்றினர். எனினும் தனது சூழ்நிலை, சுற்றுடல் அனைத்தையும் எதிர்த்து சாதி வெறிக்குச் சாவுமணி அடித்தார். அவர் வெறும் பேச்சோடு மட்டும் நிற்கவில்லை. செயலிலேயே தம் கொள்கையை நிலைநாட்டினர். தாழ்ந்த சாதியினர் என்று கருதப்பட்டவரோடு பலரும் அறிய உடன் இருந்து உணவு (சமபோசனம்) அருந்தினர். அத்தோடு அவர்களை நம் இல்லத்திற்கு அழைத்து அன்போடு இன்முகம் காட்டி நல்விருந்தளித்தார். செயல் வீரன் வன்னியசிங்கம் என்பதற்கு இதற்கு மேலான சான்று என்ன வேண்டும்.

### மறைமலையின் தமிழ் வழிபாடும் தமிழ் மண விழாவும்

மறைமலையடிகள் தமிழின் தனித்தன்மையைத் தூய்மையைக் காப்பதோடு நில்லாது, தமிழரின் சிந்தனை, செயல் அனைத்தையும் தமிழ் மயமாக்கினர். கோயில்களில் இறைவனை வழக்கிழந்து எமக்குப் புரியாத வடமொழியில் வழிபடாது ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும் உள்ளம் தொடும் தமிழ் மொழியால் இறைவனை இறைஞ்சி இன்புறுக, அருள்பெருகுக என வற்புறுத்தித்தாமும் அவ்விதமே வாழ்ந்து காட்டினர். அது போன்றே எம் இல்லங்களில் நடைபெறும் மண நிகழ்ச்சிகள், பிணநிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழிலே செய்யும்படி சொல்லி செயலிலும் காட்டினர். இன்று தமிழர் வதியும் பல இடங்களில், தமிழ் வழிபாடும், தமிழ் மண வாழ்த்துக்கள், தமிழில் பிணச் சடங்குகளும் நடைபெறுவதற்கு மறைமலையடிகளின் பணி தான் அடிப்படைக் காரணம் என்பதை எவரும் மறக்க முடியாது.

### வன்னியரின் எல்லாம் தமிழ் இயக்கம்

வன்னியசிங்கம் அவர்களும் எம் தமிழ் அன்னை அரியணையில் இருந்து அகற்றப்பட்டு விட்டாலே சிங்களம் மட்டும் சட்டம் எம்மை சிரழிக்கிறதேயென நாம் சிந்தை நொந்து அழும் முன், தமிழர்களாகிய யாம் நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழில் வைக்கவேண்டும் எனக்கூறி "எல்லாம் தமிழ் இயக்கத்தை"த் தோற்றுவித்தார். "எல்லாம் தமிழில் செய்தே எம் வாழ்வில் தமிழைக் காப்போம் வாரீர்" என்று அன்று அவர்விடுத்த அழைப்பை இன்று பலர் ஏற்கத் தொடங்கி விட்டனர். இன்று புலர் தமிழிலேயே அரசாங்கத்தோடும், வணிக நிலையங்கள், ஏனைய நிறுவனங்கள், தனிப்பட்டோர் ஆகியோரோடும் தொடர்பு கொள்ளத் தொடங்கி விட்டனர். "வாழ்விடத்தைக் கா[illegible] வன்னியசிங்கத்தை வாழ்த்து" என்ற பல உணர்ச்சி ஊட்டும் கடித உறைகள் இன்று தமிழ் மக்களின் கைகளில் தவழத் தொடங்கி விட்டன. எனினும் நிலைமை இன்னும் திருந்த இடமுண்டு என்பதை நாம் வலியுறுத்தியே யாக வேண்டும். மருந்தளவும் செங்குருதி சிந்தாது, வெற்றிகரமாக நடைமுறையில் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்க்கும் இயக்கம் எல்லாம் தமிழ் இயக்கம் என்பதை நாம் மறக்க முடியாது.

### தமிழினம் தலையெடுக்கும்

சுருங்கக்கூறின், தாயகம் தந்த மறைமலையடிகள் மொழியியல் துறையிலும் சேயகம் தந்த வன்னியசிங்கம் அவர்கள் அரசியற் துறையிலும்சிறப்பாகப்பணியாற்றினர்கள் எனினும், வன்னிய ஆற்றியபல்துறை பணி தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தவரை அதன் நிலைத்த நல் வாழ்விற்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்துள்ளது என்பதை சிந்தனைச் செறிவு படைத்த எந்தச் செந்தமிழ் மகனோ, தமகளோ மறக்க முடியாது.

# கழகச் செய்திகள்

## பயிற்றப்பட்டு வேலையற்றிருக்கும் ஆசிரியர்கள் நிலை (2)

யாழ்ப்பாணம் பயிற்றப்பட்ட வேலையற்ற தமிழாசிரியரொருவர் 1-9-63 'சுதந்திரன்' வாயிலாக விடுத்திருந்த அறிக்கையைப் படித்தேன். படித்த மாத்திரத்தே மட்டக்களப்புப் பயிற்றப்பட்ட வேலையற்ற தமிழாசிரிய சங்கத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்தாவிட்டால் இரு பகுதியாரில் எவருக்கும் நிம்மதியிருக்காது தென்றெண்ணிச் சுதந்திரன் வாயிலாகவே இவ்வறிக்கையை வெளியிடுகின்றேன்.

இவ்வாறு மட்டக்களப்பு பயிற்றப்பட்ட வேலையற்ற ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. வி. க. குமாரசாமி சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

அவர் தொடர்ந்து கூறுவதாவது:-யாழ்ப்பாணம்பயிற்றப்பட்ட வேலையற்ற ஆசிரியர்களுக்கும், மட்டக்களப்புப் ப. வே. த. ஆசிரியர்களுக்கும் எதுவித வித்தியாசமுமில்லை. கருத்து மாறுபாடும் கிடையாது. நாம் வாழும் நிலத்தால் வித்தியாசப்பட்டாலுங் கூட, மற்றெல்லா விதத்தாலும், பேசும் மொழியாலும் கொண்ட தொழிலாலும் ஒன்று பட்டவர்களே! கல்விப் பகுதியிலுள்ள ஒருசில அதிகாரிகளின் நியாயத்துக் கொவ்வாத நிருவாகத்தால் நியமனமின்றி எவ்விதம் நாங்கள் வேதனைக் குமுறலோடு வெந்து சாகிறோமோ, அவ்விதமே யாழ். ப. வே த. ஆசிரியர்களும் துயரச் சுமையை நெஞ்சில் சுமத்திக் கொண்டு வாழ்கிறார்களென்பதை நாங்கள் உணர்கிறோம்—உணர்ந்தும் வந்திருக்கிறோம்.

தமிழரசுத் தலைவர்களிடமோ அன்றி வேறெவரிடமோ நாங்கள் "எங்களுக்கு மட்டும் நியமனம்" என்று தனியாகக் கேட்க வேண்டுமென்று திட்டமிட்டது கிடையாது. யாழ். ப. வே. த. ஆசிரியர்களைப்புறக்கணிக்கவோ அன்றி உதாசீனஞ் செய்யவோ நாங்கள் எண்ணியதுமில்லை. எனினும் நாங்கள் சில கட்டங்களில் மட்டக்களப்பு ஆசிரியர்களைப் பற்றியே பேச வேண்டிய நிலைக்கும் இட்டுச் செல்லப்பட்டிருக்கிறோமென்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

கடந்த காலங்களில் எங்கள் சங்கம் பொதுப்படையாகவே குரலெழுப்பி வந்துள்ளது. பத்திரிகைகளில் எழுதியும் வந்துள்ளோம். எங்கள் சங்க வெளியீடான "ஆசிரியன் குரல்" என்ற சஞ்சிகையில் கூட இத்தகைய எங்கள் உள்ளத்தின் பிரதிபலிப்பு துலாம்பரமாகக் காட்டப்பட்டதைப் படித்த யாழ். ஆசிரியரொருவர் மகிழ்ச்சி பொங்க எமக்கு மடல் வரைந்திருக்கிறாரென்பதையும் தெரியப்படுத்துவதோடு, 11-11-62 சுதந்திரன் அறிக்கையையும் ஞாபகப் படுத்துகின்றோம். இது போல் அனேகம் உள.

சில தவிர்க்க முடியாத கட்டடங்களில் நாங்கள் மட்டக்களப்பு ப. வே. த. ஆசிரியர்களையிட்டு மட்டும் பேசவேண்டி வந்த துர்ப்பாக்கிய நிலைகளைக் குறிப்பிட வேண்டியதும் அவசியமாகும். அதற்காக நாங்கள் மனம் வருந்தியதுமுண்டு.

கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நாம் பேசும் போது "காலியான இடங்களில்லை" என்று அவர்கள் பதிலளித்தார்கள். இந்த நேரத்தில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் காலியான இடங்களின் நிலை எமக்குத் தெரியாதிருந்த படியால் நாங்கள் எங்கள் பகுதிகளில் உள்ள காலி இடங்களைப் பற்றி மட்டும் பேச வேண்டிய கட்டத்துக்குள்ளாக்கப் பட்டோம்.

மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள எந்தெந்தக் கலாசாலையிலிருந்து எந்தெந்த ஆண்டில் எத்தனை ஆசிரியர்கள் வெளியேறினர்கள்; அவர்களில் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர்; மதவாரியான பிரிவினர், தாழ்த்தப்பட்டோர் உயர்த்தப்பட்டோர் என்ற பகுப்பினர் எத்தகையது என்ற விபரங்கள்—தெரியாதிருந்தனாலும், நாங்கள் யாழ். ஆசிரியர்களையிட்டுச் சுட்டிப்பாகவாய் திறந்து பேசத் தகுதியற்றவர்களாக இருந்துள்ளோம். இப்படியான காரணங்கள் சந்தேகமுண்டாக்கியிருக்கலாமேயன்றி வேறு காரணங்களில்லை.

யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு என்ற வேற்றுமை தமிழாசிரியர்களாகிய எமக்குள் இல்லை-அது வேண்டாம். சில சுய இச்சை பூர்த்தி செய்யும் அரசியல் வாதிகள் எமக்குள் இதைப் புகுத்த முயலினும் அதற்கு இடம் கொடாதிருப்போம்.

துன்பம் நம் இரு பகுதியாரையும் தொடர்ந்து வந்திருக்கிறது—வருகிறது. அந்தத் துன்பம் இருபகுதியாருக்கும் ஒரே தினத்தில் கழிய வேண்டும். எல்லோரும் மகிழ்வு பொங்க வாழும் நாள் விரைவில் உண்டு; தமிழரசார் இதை ஆக்கித் தருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

### மூதூரில் மாதாசபை மாநாடு

ஆவணி 26-ம் 27-ம் திகதிகளில் மூதூர் மாதா சபையாரின் வருடாந்த மாநாடு வெகு விமரிசையாக நடைபெற்றது. 26-ம் திகதி காலை பாடல் பூசையுடன் ஆரம்பமான விழா வண. ஹென்றி பொன்னையா சுவாமியவர்கள் தலைமையில் நடைபெற்றது. பக்திப் பாடல்களுடன் கோயிலிலிருந்து மாதாசபையார் பவனி சென்று நாட்டு அரங்கையடைந்தனர்.

"அமல உற்பவ மாதா. மங்கள வார்தைை மாதா. மோட்ச ஆராபண மாதா. மோட்ச இராக்கினி மாதா" என்ற தலைப்புகளில் முறையே திரு. க. அ. ஜேச்சடீவாஸ், செல்வன் ஜீவரெத்தினம் பெர்ணண்டோ, செல்வி. அ. இராஜேஸ்வரி பாய்வா, திருமதி மேரிமலர் ஸ்ரனிஸ்லரிஸ் ஆதியோர் சொற்பெருக் காற்றினர். மாலையில் வேஸ்பர் ஆராதனையும் திரு. வ. அ. இராசரத்தினம் ஆசிரியரின் 'வசையற்ற கன்னி' என்ற கதாப் பிரசங்கமும், மாதாசபையாரின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. 27-ம் திகதி காலை பாடற் பூசையும் அதையடுத்து ஆசீர்வாதமும் நடைபெற்றன.

செல்வன் க. சிப்பிரியாஸ் பாய்வ, திரு. சா. சு. அ. குரூஸ், திரு. க. வ. ஜேச்சடீவாஸ், திரு. அ. பாஸ்கரன் பாய்வ, செல்வன் சூ. யோகேஸ்வரன், பெர்ணண்டோ, செல்வன் சிவரட்ணம் பெர்ணண்டோ, வில்மட் குரூஸ், செல்வன் றபியல் கொறேரா, செல்வன் ஞானப்பிரகாசம், செல்வன் திருஞானதீபன், செல்வன் ஞானதுரைபாய்வா, செல்வன் தயாபரன் பாய்வா, செல்வன் ஞானம் பர்ணந்து செல்வன் தீபன் குரூஸ், செல்வன் விக்ரர் யேசுதாசன், திரு ம. மிக்கேல், திரு. செ. சந்தோனி ஆகியோர் மாலையில் நடைபெற்ற 'தெய்வபலம்' என்ற நாடகத்தில் நடித்தனர். செல்விகள் ஞானகான கோகிலம் குரூஸ், யோகேஸ்வரிபாய்வ, கிருபைராணி, பர்ணந்து ஆகியோர் நடனம் ஆடினர். நாடகத்தின் கதை வசனத்தை திரு. ஸ்ரனிஸ்லாஸ் எழுதியிருந்தார்.

—

### பஸ் பிரயாணிகள் சங்கம்

கல்லாறு பஸ் பிரயாணிகள் நலவுரிமைச் சங்க நிருவாக சபைக் கூட்டம் 31-8-63 மாலை தலைவர் திரு. எம். தம்பிராசா அவர்கள் தலைமையில் கூடி, பின் வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

மோட்டார் போக்குவரத்து உதவிக் கமிஷனரின் ஆலோசனைப்படி இச் சங்கத்தைப் பதிவு செய்வதற்கு உடனடியாக விண்ணப்பித்தல்.

வருடாந்தவிழாவை சிறப்பாகக் கொண்டாட ஏற்ற ஒழுங்குகள் செய்தல்.

அன்றையத் தினம் கிழக்கிழங்கை பஸ், பிரயாணிகள் சங்கங்களின் சம்மேளனம் அமைப்பதற்கு இப்பகுதிகளில் இயங்கிவரும் சங்கங்களின் நல்லாதரவை பெறல்.

சங்கங்கள் இல்லாத கிராமங்களுக்கு துரிதமாக மேற்படி சங்கங்கள் ஏற்படுத்துமுகமாக பத்திரிகைகளுக்கு வேண்டுகோள் விடுத்தல்.

குதூகலமான 3வது வாரம்!

# சென்ட்ரல் ராணி ராஜேஸ்வரா ஜோதி லிபர்ட்டி

[மருதானை] [யாழ்ப்பாணம்] [மட்டக்களப்பு] [திருகோணமலை] [பதுளை]

பணம், படிப்பு, உழைப்பு இம் மூன்றும் ஒன்றுபட்டால் தொழிலில் முன்னேற்றம் உண்டாகாமலிருக்குமா?

பணம் தனது குணத்தைக் காண்பித்தால்......?

பணச் செருக்கால் குணமிழந்து குட்டிச்சுவரானவர்கள்—




# பங்காளிகள்

ஜெமினி கணேசன்-ஈ.வி.சரோஜா

எம். ஆர். ராதா-அஞ்சலிதேவி

சாரங்கபாணி-எஸ். வி. ரங்கராவ்

டி. எஸ். துரைராஜ்-பி. எஸ். ஞானம்

தேவிகா-முத்தையா-மாலதி

மற்றும் பலர் நடித்தது




---

செப்டம்பர் 27ம் திகதி வெள்ளி முதல்!

# செல்லமஹால்

மற்றும பல திரைகளில்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) செப்டம்பர் 20ம் திகதி முதல்!

அபார சாதனையை நிலைநாட்டிய

சாரதா

புகழ் நட்சத்திரங்களான

எஸ். எஸ். ராஜேந்திரன்

விஜயகுமாரி

ஆகியோர் மீண்டும் தோன்றி உங்கள் உள்ளத்தை உருக்கும் சித்திரம்



# நீங்காத நினைவு

---

செல்லமஹால்

(கொட்டாஞ்சேனை)

7-வது வாரம்!

சிவாஜி கணேசன் தேவிகா

எம். ஆர். ராதா-பாலாஜி

நடித்த

# பலே பாண்டியா

எதிர்பாருங்கள்!

ஜெமினி கணேசன்,

சாவித்திரி,

கமலா லட்சுமணன்

நடித்த

# கொஞ்சும் சலங்கை

---

மகத்தான 7வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (அம்பாரை) சரசாவி (அக்கரைப்பத்தனை) ஜோதி (கலஹா)

விஜிதா (ஹட்டன்) லக்ஷ்மி (ரத்தினபுரி)

பார்த்தோரை மீண்டும் பார்க்கத் தூண்டும் சித்திரம்!

பி. பானுமதி, எஸ். வி. ரங்கராவ்,

சௌகார் ஜானகி,

சந்திரபாபு

மற்றும் பலர் நடித்த



# அன்னை

இந்திய ஜனாதிபதியின் பரிசு பெற்ற படம்

டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு


---

உலகம் தேடிடும் பணத் தோட்டம்

உல்லாசம் தருவது பணத் தோட்டம்

உறக்கத்தை அழித்திடும் பணத் தோட்டம்

உறவைப் பிரித்திடும் பணத் தோட்டம்



சினிமாஸ் திரைகளில்

விரைவில் வருகிறது!

புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன்

கன்னடப் பைங்கிளி

பி. சரோஜாதேவி

நம்பியார்— அசோகன்

எம். வி. ராஜம்மா—ஷீலாதேவி

நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

இ— பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் செப்டம்பர் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.